கோகுலம்

GOKULAM

மார்ச் '87 ரூ 2





உயிர்களிடத்தில் அன்பு வேணும்—தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்.
— பாரதியார்.



ம. ப. பெரியசாமித் தூரன்

1987 மார்ச் மாத இதழ்
மலர் 5 இதழ் 2
தனிப்பிரதி ரூ 2/—
ஆண்டுச் சந்தா ரூ 24/—
கௌரவ ஆசிரியர்: அழ. வள்ளியப்பா

அருமைச் சிறுவர் சிறுமியரே,

தெருவிலே மழையில் நனையும் ஆட்டுக்குட்டியை ஒரு குழந்தை பார்க்கிறது. "நான் இப்படி நனைந்தால், 'சளி பிடித்துக் கொள்ளுமே! காய்ச்சல் வருமே.' என்று அம்மா திட்டுவாள். நீ நனைவதைப் பார்த்தாலும் அம்மா சும்மா இருப்பாளா? ஆகையால் வீட்டுக் குள்ளே ஓடி வா" என்று கூறுகிறது.

ஆட்டுக்குட்டி, ஆட்டுக்குட்டி,
வீட்டுக்குள்ளே ஓடி வா.
சும்மா சும்மா மழையிலே
துள்ளித் துள்ளி ஓடாதே.
அம்மா கண்டால் வைவாளே.
ஆட்டுக்குட்டி, ஆட்டுக்குட்டி!

இந்த எளிய, இனிய பாடலைப் பாடியவர் யார் என்று உங்களுக்குத் தெரிந்திருக்கும்.

குழந்தை உள்ளம் கொண்டவர், குழந்தை மனம் அறிந்தவர், உங்களுக்காகவே 'குழந்தைகள் கலைக்களஞ்சியம்' என்று அழகான, வண்ணப்படங்கள் கொண்ட பத்துத் தொகுதிகளின் தலைமைப் பதிப்பாசிரியராயிருந்தவர். சென்ற மாதம் நம்மை விட்டுப் பிரிந்த ம. ப. பெரியசாமித்தூரன் (பெ. தூரன்) அவர்களை மறக்க முடியுமா? இந்தியாவில் பலமொழிகளில் குழந்தைகள் கலைக்களஞ்சியம் வெளிவந்திருப்பினும், அவை எல்லாவற்றையும் விட மிகச் சிறந்த முறையில் வெளிவந்திருப்பது இதுதான் என்று போற்றப்படுகிறது. பெரியவர்களுக்கான பத்துத் தொகுதிகள் கொண்ட கலைக்களஞ்சியத்தைத் தயாரித்தபின், இந்தக் குழந்தைகள் கலைக்களஞ்சியத்தையும் வெளியிட்ட பெருமை இவருக்கு உண்டு.

பல்லாண்டுகளாக இவருக்கு உடல்நிலை சரியில்லாதிருந்தது. அப்படியிருந்தும், தமிழ் வளர்ச்சியையே தமது மூச்சாகக் கொண்டு பெரியவர்களுக்கும், குழந்தைகளுக்கும் அரிய பல நூல்களை எழுதிய மாபெரும் சாதனையாளர். இவர், தயாரித்த குழந்தைகள் கலைக் களஞ்சியத்தையும், சிறுவர் நூல்களையும் நீங்கள் ஒவ்வொருவரும் படித்துப் பயன் பெறுவீர்களென நம்புகிறோம்.

—அழ. வள்ளியப்பா


இந்த இதழ் எழுத்தாளர்கள்


மாயன்.


வை. அன்பழகன்

பிருந்தாவனக் கதாசிரியர்கள்


ந. ஜெயஸ்ரீ



பி. குமரகுரு


பிருந்தாவனக் கவிஞர்கள்


ம. அருள்


சோ. நடேஷ்கண்ணன்


எஸ். கனகராஜ்


பெ. ஜெய்கணேஷ்


பி. வெற்றிச்செல்வம்

சித்திரப் புதிர்! 18

ஆழி———


புகழ்பெற்ற இந்த இந்திய ஓவியர் யார்?


1



2

இது எந்தநாட்டின் தேசியக் கொடி?





3 இது என்ன இலை?

இது எந்தநாட்டு ஓவியமுறை?

4



இவள் எந்தநாட்டுப் பெண்மணி?

5



விடை வேறுபக்கம்

மின் மினிக் கதைகள்



பாதி, பாதி

"ஆண்டவனே, நான் ஒருவரைப் பார்ப்பதற்காக வெகு தூரம் பயணம் போகிறேன். என் பயணம் நல்லபடியாக இருக்கவும், பத்திரமாக நான் திரும்பி வரவும் நீதான் அருள் புரிய வேண்டும். என் பயணத்தில் வழியிலே எனக்கு எந்தப் பொருள் கிடைத்தாலும் உனக்கு அதில் பாதி தந்து விடுகிறேன்" என்று கோயிலில் எழுந்தருளியிருக்கும் ஆண்டவனிடம் ஒருவன் வேண்டிக் கொண்டான்.

அவன் நீண்ட தூரம் நடந்து பயணம் செய்தான். பார்க்க வேண்டியவரைப் பார்த்தான். பிறகு ஊர் திரும்பினான். வரும் வழியில் ஓரமாக இரண்டு பெரிய பைகள் இருந்தன. யாரோ வழிப் போக்கர் மறந்து வைத்துவிட்டுப் போய்விட்டார் போலிருக்கிறது.

அந்தப் பைகளைக் கையில் எடுத்தான். சுற்றுமுற்றும் பார்த்தான். யாரையும் காணோம். திறந்து பார்த்தான். ஒரு பை நிறையப் பேரீச்சம் பழங்களும், மற்றொரு பை நிறைய வாதாம் கொட்டைகளும் இருப்பதைக் கண்டு மகிழ்ச்சி அடைந்தான். அப்போது அவனுக்குப் பசி அதிகமாக இருந்ததால், மறைவாக ஒரு மரத்தடியில் அமர்ந்து பேரீச்சம்பழங்கள் அனைத்தையும் தின்று தீர்த்தான். பிறகு, வாதாங் கொட்டைகளை உடைத்து உள்ளேயிருந்த பருப்புகளைத் தின்றான்.

தின்று முடித்ததும் அவனுக்கு ஆண்டவனிடம் வேண்டிக் கொண்டது நினைவுக்கு வந்தது. உடனே, அவன் தான் தின்ற பேரீச்சம்பழக் கொட்டைகளையெல்லாம் எடுத்து ஒரு பையில் போட்டான். பிறகு, தான் உடைத்துப் போட்ட வாதாங் கொட்டை ஓடுகளை அள்ளி இன்னொரு பையில் போட்டான். நேராகக் கோயிலுக்குச் சென்றான்.

"ஆண்டவனே, நான் சொன்னபடி எனக்குக் கிடைத்ததில் பாதி

யைக் கொண்டு வந்துவிட்டேன், இதோ!'' என்று கூறி, சன்னதியில் இரண்டு பைகளிலும் இருந்த கொட்டைகளையும், ஓடுகளையும் கொட்டினான்.

கடவுளை ஏமாற்றிவிட்டதாக அவன் நினைப்பு. ''பாவம் இந்த மனிதன் என்னை ஏமாற்றிவிட்டதாக நினைக்கிறான். என் முன்னால் எதைக் கொண்டு வந்து வைத்தால் என்ன, நானா சாப்பிடப் போகிறேன்? இவன் ஆசை தீர, வயிறார, ருசியாகத் தின்றதே எனக்குத் திருப்திதான்'' என்று ஆண்டவன் நினைத்து, உள்ளூரச் சிரித்துக் கொண்டிருப்பார்.

கிழவி செய்த வேலை



அந்த ஊரில் வயதான ஒரு விதவைக் கிழவி இருந்தாள். அவளிடம் ஒரு செம்மறி ஆடு இருந்தது. அதன் உரோமம் மிக அடர்த்தியாக வளர்ந்திருந்தது. அந்த உரோமத்தை வெட்டி விற்றால் நிறையப் பணம் கிடைக்குமே என்று அவள் நினைத்தாள்.

வழக்கமாக ஆட்டு உரோமம் வெட்டுகிறவனை அழைத்து, அவனிடம் அந்த ஆட்டின் உரோமத்தை வெட்டச் சொல்லியிருக்கலாம். நன்றாக வெட்டிக் கொடுத்திருப்பான். ஆனால், அவனுக்குக் கூலி கொடுக்க வேண்டுமே! ஆகையால் அவளே, தன் வீட்டிலிருந்த கத்தரிக்கோலை எடுத்தாள். ஆட்டைக் கட்டிப் போட்டுவிட்டு, கத்தரிக்கோலால் உரோமத்தை வெட்டத் தொடங்கினாள்.

வயதானதால் அவளுடைய கை நடுங்கியது. கண்களும் சரியாகத் தெரியவில்லை. இதனால், அவள் உரோமத்தை வெட்டும்போது, ஆட்டின் தோலையும் சேர்த்து வெட்டி விட்டாள். இரத்தம் கொட்டியது. ஆடு துடிதுடித்தது. கிழவி இதைக் கவனிக்காமல் மேலும் மேலும் உரோமத்துடன் தோலையும் சேர்த்து வெட்டிக் கொண்டிருந்தாள்.


இந்தச் சித்திரவதையைப் பொறுக்க முடியாத ஆடு, ''ஏ பாட்டி, உனக்குக் கண்ணும் தெரியவில்லை, கையும் நடுங்குது. ஏன் இப்படி என்னைத் துன்பப்படுத்துகிறாய். பேசாமல் ஒரு கசாப்புக் கடைக்காரனை வரவழை. அவன் ஒரே வெட்டில் என் கழுத்தை வெட்டி, தோலை உரித்து, கறியை உனக்குத் தந்துவிடுவான். அல்லது உரோமம் வெட்டுபவனைக் கூப்பிடு. அவன் எனக்கு எவ்வித துன்பமும் தராமல் அழகாக வெட்டிவிடுவான். இரண்டில் எதைச் செய்யப் போகிறாய்?'' என்று கேட்டது.

அப்புறமும் பாட்டி வெட்ட நினைப்பாளா? பேசாமல் கத்தரிக்கோலைக் கீழே போட்டுவிட்டு, ஆட்டின் உடம்பில் இரத்தம் வந்த இடங்களைத் துடைத்தாள். ''ஐயோ, கூலியை மிச்சப்படுத்த நினைத்து, என்னால் முடியாத வேலையைச் செய்து என் அருமை ஆட்டைப் புண்படுத்திவிட்டேனே!'' என்று வருந்தினாள்.

சிங்கத்தின் நன்றி

அந்தக் காலத்தில் அரசர்கள் மனிதர்களை விலைக்கு வாங்கி, அடிமைகளாக அரண்மனையில் வைத்து, அவர்களிடம் கடினமாக வேலை வாங்குவார்கள். அப்படி, அடிமையாக இருந்த ஒருவன், அரண்மனையிலிருந்து எவருக்கும் தெரியாமல் தப்பி ஓடி வந்துவிட்டான். அவன் வழியிலிருந்த காட்டைக் கடந்து செல்லும்போது, ஒரு சிங்கத்தைக் கண்டான். அது அவனைக் கண்டதும், தன் வாலை ஆட்டி, தன்னுடைய முன்னங்கால்களில் ஒன்றைத் தூக்கி அவனிடம் காட்டியது.

அந்தக் காலில், பெரிய முள் ஒன்று தைத்திருந்தது. அதை சிங்கத்தால் எடுக்க முடியவில்லை. யாரேனும் எடுத்துவிடுவார்களா என்று அது ஏங்கிக் கொண்டிருந்த சமயம், அந்த அடிமையைக் கண்டது.



காலில் முள் தைத்திருப்பதைக் கண்டதும், அவன் மனம் இரங்கினான். அருகில் சென்றான். மண்டியிட்டு சிங்கத்தின் முன்னால் அமர்ந்து, அதன் காலை நன்றாக உற்றுப் பார்த்தான். முள் ஆழமாகப் பாய்ந்திருப்பது தெரிந்தது. காலைத் தொடையில் தூக்கி வைத்துக் கொண்டு, முள்ளை எடுக்க முயன்றான். எளிதில் எடுக்க முடியவில்லை. பல்லைக் கடித்துக் கொண்டு, பலங்கொண்ட மட்டும் இழுத்தான். வெகு நேரம் இழுத்த பிறகே முள் வெளி வந்தது. சிங்கம் நன்றியுடன் அவனைப் பார்த்துவிட்டுக் காட்டுக்குள் ஓடியது.

அரண்மனையிலிருந்து தப்பி ஓடி வந்த அந்த அடிமையை, அரசனது உத்தரவுப்படி, பல இடங்களிலும் காவலர்கள் தேடிக் கொண்டிருந்தனர். சில நாட்களில் அவன் சேவகர்கள் கையில் சிக்கிவிட்டான். அவனைப் பிடித்து வந்து அரசனின் முன்னால் நிறுத்தினர்கள்.

''நீ அரண்மனையிலிருந்து தப்பி ஓடியது மிகப் பெரிய குற்றம். உனக்கு என்ன தண்டனை தெரியுமா? நாளைக் காலையில் சிங்கத்துடன் நீ சண்டை போட வேண்டும். சிங்கம் உன்னைச் சீக்கிரம் எமலோகத்துக்கு அனுப்பி வைக்கும்'' என்றார்.

அடுத்த இதழில்

* கவிதை பிறந்த கதை
  — புலவர் தணிகை உலகநாதன்
* சிரிப்போம்; சிந்திப்போம்
  — மலையமான்
* ராமானுஜம் வாழ்விலே

இந்த இதழில் இடமில்லாததால்

* கேளுங்கள்; சொல்லுகிறோம்
* கோகுலம்சிறுவர்சங்கப்பட்டியல்
* புதிய புத்தகங்கள்

இடம் பெறவில்லை.

அரசன் உத்தரவுப்படி, நான்கு பக்கமும் உயரமான சுவருடன் கூடிய ஒரு பெரிய குழி போன்ற இடத்தில் அவனை இறக்கிவிட்டார்கள். கூண்டிலிருந்த ஒரு சிங்கத்தையும் கொண்டு வந்து, அதற்குள் விட்டார்கள். சிங்கம் மிகவும் கோபத்துடன் அவனை நெருங்கியது. அருகில் சென்றதும், அது பரம சாதுவாகிவிட்டது! அவனை ஒன்றும் செய்யாமல், தன் வாலை ஆட்டிக் கொண்டு, முன்னங்காலைத் தூக்கிக் காட்டியது. அவன் அதன் எதிரில் உட்கார்ந்தான். காலை அவன் தொடையில் வைத்துக் கொண்டு, அவனையே பார்த்தது. அவன் சிங்கத்தின் பிடரியைப் பிரியமுடன் தடவிக் கொடுத்தான். அந்தச் சிங்கத்தின் காலில் இருந்த முள்ளைத்தான் சில நாட்களுக்கு முன்பு அவன் எடுத்து விட்டான். அதன்பிறகு, அதுவும் பிடிபட்டு, அரண்மனையில் கூண்டிலே அடைக்கப்பட்டது.

தனக்கு உதவி செய்த அந்த மனிதனுக்கு நன்றி செலுத்த இப்படி ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைத்ததை நினைத்து அது மகிழ்ந்தது.

இந்த அரிய காட்சியை மேல்புறமிருந்து பார்த்துக் கொண்டிருந்த அரசனும், மந்திரியும், காவலர்களும் ஒன்றும் புரியாமல் விழித்தார்கள்.

அந்த அடிமையை மேலே வரவழைத்து, ''என்ன காரணம்?'' என்று அரசர் கேட்டார். நடந்ததை அடிமை கூறினான்.

''ஆஹா! சிங்கத்திற்கு ஆபத்து நேர்ந்தபோது, பயப்படாமல் இவன் அதற்கு உதவியிருக்கிறான். அதை இத்தனை நாட்களுக்குப் பிறகும் நன்றி மறவாமல் அவனுடன் நட்புக் காட்டுகிறதே!'' என்று வியப்படைந்தான் அரசன்.

அன்றே, அந்த அடிமையை விடுதலை செய்தான். அடிமையை மட்டும் தானா? சிங்கத்தையும் விடுதலை செய்து, அதைக் காட்டில் கொண்டு போய் விட ஏற்பாடு செய்தான்.

— கருத்து: ஈசாப்



திப்பிலி ராஜா சிரிப்பு ராஜா!

* புகழ்பெற்றவர்களின் படங்களை வெளியிட்டு, அவர்களின் வாழ்க்கைக் குறிப்பை, அவர்களின் ஆற்றலை, சேவையை எளிய முறையில் வெளியிடுவதில் கோகுலத்திற்கு நிகர் கோகுலம்தான்!
— எஸ். லதா (392), நாட்டரசன்கோட்டை.

* நம் இந்திய ஆசிரியைக்கு அமெரிக்க ஜனாதிபதி விருது கிடைத்ததை நினைத்தால் மிகவும் பெருமையாக உள்ளது.
— கோ. ராஜேஷ் (9317), நீடாமங்கலம்.

* 'கடவுளைக் கண்டவர்கள்' படித்து மகிழ்ந்தேன். இப்படி 63 நாயன்மார்களின் கதைகளையும் வெளியிடுவீர்கள் என எதிர் பார்க்கிறேன்.
— ஆர். இராகுல் (10,733), மதுரை.

* 'திரு நபி வாழ்வினிலே' என்ற புத்தகத்திலிருந்து சில நிகழ்ச்சிகளை மின்மினிக் கதைகள் பகுதியிலே வெளியிட்டீர்கள். அதற்கு எங்களது 'இஸ்லாமிய இளைஞர் நற்பணி மன்றத்தின் தலைவர் என்ற முறையில் நானும், எங்கள் மன்ற உறுப்பினர்களும் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.
— எஸ். சையது முஹம்மது, போடிநாயக்கனூர்.

* 'இரு மொழிகளில் பழமொழிகள்' பகுதியைப் பத்திரமாகச் சேமித்து வைத்து, எல்லோருக்கும் நான் சொல்லிக் கொடுக்கிறேன்.
— எல்.ஆர்.சிவக்குமார் (15,912), மதுரை—1

* 'அணுகுண்டுப் போர்' ஓய்வு நேரத்தை நல்ல முறையில் கழிக்க வேண்டும் என்பதை நன்கு உணர்த்துகிறது.
— செ. குமார் (9102), மயிலாடுதுறை.

* 'எருமை ஏன் இவ்வளவு மெதுவாக நடக்கிறது?' எனப் புரிந்து கொண்டேன், 'எருமையும் மனிதனும்' கதை மூலம்.
— வ.உ.சி. பாலகிருஷ்ணன், திருப்பரங்குன்றம்.

* 'முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார்' என்பதற்கு எடுத்துக்காட்டு தசாவதானி பெ. ராமையா அவர்களின் வாழ்க்கை. அவரது செயல்கள் என்னை மெய்சிலிர்க்க வைத்ததுடன், சிந்தனையையும் தூண்டின.
— ஜி. சுந்தரராஜன், முத்துலாபுரம்.

* தசாவதானி பெ. இராமையா போன்றவர்களின் வாழ்க்கைவரலாறுகுழந்தைகளின் அறிவும் ஆற்றலும் மேன்மேலும் வளர்ச்சியடைய உதவுகிறது. இதுபோன்ற கட்டுரைகளைத் தொடர்ந்து வெளியிடுங்கள்.
— ஆசிரியை எஸ். கண்ணகி, விளாங்குப்பம்.

* தசாவதானியின் குழந்தைப் பருவத்தைப் படித்த போது, எங்கள் இமைப் பூக்கள் ஆச்சரியத்தால் விரிந்தன.
— கே. எல். ஸ்ரீதேவி, மேலகிருஷ்ணன்புதூர்.

* பின்கோட் எண்ணைப் பற்றி இதுவரை நான் கவலைப்பட்டதில்லை. இனிமேல் பின்கோடை கவனித்து எழுதுவேன்.
— ஏ. செந்தில்குமார் (15,197), கரிச்சிபாளையம்.

* தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் அவர்கள் என் தகப்பனாரின் தமிழாசிரியர். அவரது படத்தை வெளியிட்டு, அவரது பெருமைகளையும் எடுத்துக் கூறியதற்கு நன்றி.
— செ. குமார் (9102), மயிலாடுதுறை.

* திப்பிலி ராஜா என் இதய சாம்ராஜ்யத்தின் சிரிப்பு ராஜா. வான்முகில் அவர்களுக்கு நன்றி.
— எஸ். மீனா, பெரியகுளம்.

* டாக்டர் பக்கத்தைத் தொடர்ந்து உரையாடலிலே வெளியிடுங்கள். சுவையாக இருக்கிறது.
— ஜே. சுரேஷ்குமார் (13,342), விழுப்புரம்.

* ஹலோ! டாக்டர் பூவண்ணனா?' புதையல் வீடு' கதை ஜெட் விமான வேகத்தில் போகிறது! உங்கள் கதையைப் படித்தது மாதிரி இல்லை சார்! சினிமாப் படம் பார்த்தது போலவே இருந்தது. உங்கள் பேனாவிற்கு ஆயிரம் ஆயிரம் வாழ்த்துக்கள்!
— பெ. கலைச்செல்வன், பொய்கை.

* 'மூன்று அரச குமாரர்கள்' என்ற ஜெர்மனி தேசத்துக் கதை நமக்கெல்லாம் ஒற்றுமை உணர்வை எடுத்துக் கூறும் அருமையான கதை..
என். சந்திரன் (4785), பாவட்டக்குடி.

* நான் வசிக்கும் உதகைக்கு அருகிலுள்ள பாஸ்ட்யர் நிலையத்தில்தான் வெறிநாய்க் கடிக்கு மருந்து தயாரிக்கின்றனர் என்றாலும், டாக்டர் பக்கத்தைப் படித்த பின்புதான் அதன் தொடர்பான செய்திகள் அனைத்தையும் தெரிந்து கொள்ள முடிந்தது.
— வான்முகில், உதகை.

* ''நாட்டின் முன்னேற்றத்திற்கு அன்பும் அமைதியும்தான் தேவை. அன்பு என்னும் ஜீவ நதியை மக்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் ஓடச் செய்யப் போகிறேன்'' என்று முனிவராகமாறிய அமைச்சர்சொல்லுகிறார். அவர் சொல்லுவது போல் நடந்தால்...? ஆஹா! நாடே சொர்க்கமாகிவிடும்! 'மனம் திருந்திய மன்னர்கள்' கதை எழுதிய டி. ஜானகி அவர்களுக்கு நன்றி.
— பி. குமுதினி, இருவாரூர்.

என் குழந்தைப் பருவம்

நாடகச் செம்மல்

—எஸ். வி. சகஸ்ரநாமம்




நாடகத்தில் நடிக்க வேண்டுமென்ற ஆர்வத்தால், சிறு வயதிலே நாடகக் குழுவில் சேர்ந்து, நாடக உலகில் பல சாதனைகளைப் புரிந்து புகழ் பெற்றவர் எஸ். வி. சகஸ்ரநாமம் அவர்கள். மகாகவி பாரதியாரிடம் இவருக்கு ஈடுபாடு அதிகம். பாரதியாரின் 'பாஞ்சாலி சபதம்' என்ற காவியத்தை முதல் முதலாகக் கவிதை நாடகமாக்கி மிகச் சிறப்பாக நடித்துப் பாராட்டுப் பெற்றார்கள், இவரது சேவா ஸ்டேஜ் சர்வீஸ் நாடகக் குழுவினர். புகழ்பெற்ற எழுத்தாளர்களாகிய பி. எஸ். ராமையா, தி. ஜானகிராமன், கு. அழகிரிசாமி, போன்றவர்களை நாடகங்கள் எழுதத் தூண்டி அவர்களை நாடகக் கதாசிரியர்களாகவும், வசன கர்த்தாக்களாகவும் உருவாக்கியவர். நாடகக் கல்வி நிலையம் ஒன்றை 1957 இல் இவர் வீட்டு மாடியிலே தொடங்கினார். மூன்று மாதப் பயிற்சி அங்கு அளிக்கப்பட்டது. இந்தியாவிலே அப்போது இப்படிப்பட்ட பள்ளி அது ஒன்றுதான் எனப் புகழப்பட்டது. அதில் பல கலைஞர்கள் உருவானார்கள்.

சிறந்த நாடகக் கலைஞர் என்ற முறையில் தமிழ் நாட்டுப் பிரதிநிதியாக 1961 இல் ரஷ்யாவுக்குப் பயணம் சென்றவர். இப்போது 74 வயதானாலும், கலை ஆர்வம் குன்றாதவர்.

நாடக உலகிலும், திரைப்பட உலகிலும் இவர் ஆற்றிய தொண்டுக்காக இவருக்குப் பல பட்டங்கள் வழங்கப் பெற்றுள்ளன. பாரதிக் கலைஞர், கலைமாமணி, மதுர கலாப்ரவீண, சங்கீத கலாசிகாமணி போன்ற எத்தனையோ பட்டங்களைப் பெற்ற இவருக்கு சமீபத்தில் 'நாடகச் செம்மல்' என்ற சிறப்புப் பட்டம் வழங்கப்பட்டது.

கோவைமாவட்டத்தைச்சார்ந்த சிங்கா நெல்லூர் என்ற கிராமத்தில் நான் பிறந்தேன். எங்களது ஊர் இன்று நல்லவளர்ச்சியடைந்துள்ளது. நூல் ஆலைகள் நிறைந்த இதை ஊரார் 'இரண்டாவது பம்பாய்' என்று சொல்லுவார்கள்.

எனது தந்தையார் சிங்கா நல்லூர்கிராமத்தில்நீர்மணியகாரர்என்ற அரசினர் பதவியிலிருந்தவர். சம்பளம் கேட்டால் வியப்பாயிருக்கும். ரூபாய் ஐந்து! பின்னால் 10 ரூபாயாக உயர்ந்தது. ஆனால் வாழ்க்கையில் வறுமை என்பதை அறியாமல், வசதியாக வாழ்ந்து வந்தோம். விவசாயிகளின் ஆதரவு எப்போதும் இந்தப் பதவி வகிப்பவர்க்குக் கிடைத்து வந்தது. எனது தந்தையாரும் வசதியாக இரண்டு பசு மாடுகள் வீட்டிலே கட்டி அதற்குத் தீவனமிட்டு வளர்த்து வந்தார். ஒரு பசு மாட்டின் பாலை ஊர்க் குழந்தைகளுக்கு வழங்குவார். இன்னொரு மாட்டுப் பாலைத் தமது குடும்பத்துக்குப் பயன்படுத்தி வந்தார். என் தகப்பனாரின் பெயர் ஆர். வெங்கட்ரமணய்யர். என் தாயாரின் பெயர் பார்வதி. பாலக்காடு நல்லேபுள்ளிசித்தூரில்ஒருவழக்கறிஞரின் மகள். எனது தகப்பனார் பள்ளிப் படிப்பு அதிகம் படிக்காவிட்டாலும் நல்ல பண்பாடு நிறைந்து, ஜாதி மத பேதமென்ற வித்தியாசமில்லாமல் எல்லா மக்களுடனும் அன்போடு பழகினார். மனிதாபிமானமும் மிக்கவராக வாழ்ந்து வந்தார். இவருக்கு மூன்று ஆண் மக்கள், மூன்று பெண் மக்கள். நான் ஐந்தாவதாகப் பிறந்தவன்.

நான் பிறந்தது 1913—ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இருபத்தி ஒன்பதாம் தேதி (29.11.1913)

நான் சிறுவனாக இருக்கும்போது எங்கள் கிராமத்தில் ஒரு வருடம் அல்லது இரண்டு வருடத்திற்கு ஒரு முறை பிளேக், காலரா, நோய்கள் ஏற்பட்டு வந்தன. அப்போது எலி விழுதல் என்னும் ஒரு துன்ப நிகழ்ச்சியும் இருந்து வந்தது. அப்படி ஏற்படும் போது, வீட்டைக் காலி செய்துவிட்டு, பக்கத்துக் கிராமங்களுக்கோ, தங்கள் உள்ளூர் உறவினரின் ஊர்களுக்கோ போய் இருந்துவிட்டு, கிராமம் நல்ல நிலைமை அடைந்ததும் திரும்ப வருவார்கள்.

இதுபோன்று எங்களது இல்லத்திலும் நான் பிறப்பதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னால் ஏற்பட்டதால், எங்கள் குடும்பமும் வீட்டைக் காலி செய்துவிட்டு, பக்கத்திலே ஒரு மைல் தூரத்திலுள்ள சின்னப்ப கவுண்டர் என்பவரின் தோட்டத்திற்குச் சென்றோம். அவர் ஆதரவில் எங்களுக்கென்று 'குட்டத் தோட்டம்' என்ற அந்தத் தோட்டத்தில் ஒரு நல்ல குடிசை கட்டிக் கொடுத்தார். அங்கு தங்கியிருந்த சமயம்தான் நான் அந்தக் குடிசையில் பிறந்தேன் என்று எனது பெற்றோர் மூலம். நான் - தெரிந்து கொண்டேன். மறுபடியும் எங்கள் கிராமச் சூழ்நிலை சரியானதும், எங்கள் இல்லத்தைச் சுத்தம் செய்தபின் குடியேறினோம். ஆகவே, கிராமத்திலுள்ள என் உற்றார் உறவினர்கள் அனைவரும் என்னைக் 'குட்டத் தோட்டத்துக் கவுண்டன்' என்ற செல்லப் பெயரிலேயே அழைப்பது வழக்கமாகி விட்டது.

எங்களது கிராமத்திலுள்ள ஆரம்பப் பாடசாலையில் எனது ஐந்தாவது வயதில் சேர்ந்தேன். பள்ளிக்கூடம் சிறியதுதான். ஐந்தாவது வகுப்புவரைதான் இருந்தது. மேற்கொண்டு படிக்க வேண்டுமானால், கோவைக்குத்தான் போவது வழக்கம். எங்கள் ஆரம்பப் பள்ளியில் நான் எதை மறந்தாலும் எங்களது தமிழ்ப் பாட ஆசிரியர் திரு பள்ளி கொண்டான் அவர்களை மறக்க இயலாது. இன்றும் எனது நெஞ்சகத்தில் நிறைந்துள்ளவர். சிவப்புக் கரை உள்ள பஞ்சகச்ச வேஷ்டி, தலையில் வெள்ளைத் தலைப்பாகை, பழுப்பு நிற நீளக் கோட்டு. (அதில் வரிசையாகப் பொத்தான் வைத்திருக்கும்.) நெற்றியில் அழகான திருநாமம். அவரைப் பார்த்தாலே அறிமுகமில்லாதவர்கள் கூட மரியாதையளிக்கும்படியான தோற்றம். கருணையுள்ளம் கொண்டவர்தான்! ஆனால், கல்வி கற்பிக்கும் போது மிகவும் கண்டிப்பாகவுமிருப்பார். நல்ல இசை ஞானமுடையவர்.

பள்ளிக்கூடம் ஆரம்பிப்பதற்கு முதல் பெல் அடித்ததும், கம்பீரமாக நடந்து வந்து, பள்ளிக்கூட வெளி வளாகத் திண்ணையின் மீது யுத்தத் தளபதி போல் நிற்பார். பள்ளியில் படிக்கும் மாணவர்கள் அனைவரும் வரிசைக்கிரமமாக அவரை நேரில் பார்த்தபடி படைக்காவலர்கள் போல் ஆடாமல் அசையாமல் நிற்க வேண்டும். அவர் தமது இரு கரங்களையும் சேர்த்து வணங்கும் பாவனைக்கு வந்ததும், மாணவர்கள் அனைவரும் அதே போல் வணங்கிய பாவனைக்கு வருவோம். உடனே திரு பள்ளி கொண்

டான் அவர்கள், தமது கம்பீரமான இசை ஞானக் குரலால்,

'கல்லார்க்கும் கற்றவர்க்கும்
களிப்பருளும் களிப்பே'

என்று தொடங்கும் திருவருட்பா பாடலைப் பாடுவார். ஒவ்வோர் அடியாகப் பாடி அனைவரையும் பாடும் படி சொல்லிப் பழக்குவார். அந்தப் பாடல் இன்றும் என் நினைவில் நிலைத்து இருக்கின்றது. அன்று இம் மாதிரி கூட்டுப் பிரார்த்தனையில் இருக்கும்போது, அவ்வளவாக எனக்கு விளங்காமலிருந்தாலும், பிறகு நான் நன்குணர்ந்தேன். நமது உணர்வுகள் பிறர் உணர்வுகளோடு கலந்து விடுகின்றன. ஒருவரை ஒருவர் நேசிப்பதற்கும் ஒன்றுபட்டு நன்றாகச் செயல்படுவதற்கும் பலம் அளிக்கிறது என்பதை இன்றுவரையில் நான் உணர்ந்து வருகிறேன்.

நான் இரண்டாம் வகுப்பிலிருந்து மூன்றாம் வகுப்பிற்குச் செல்லும் சமயம். அப்பொழுதும் எங்கள் கிராமத்தில்நான் பிறந்தபோது வந்தமாதிரி பிளேக், எலி விழுதல் போன்ற துன்ப நிகழ்ச்சிகள் ஏற்பட்டன. பள்ளிக் கூடத்தில் எல்லோருக்கும் லீவு விட்டார்கள். என் தாய் தகப்பனாரைத் தவிர நான், என் சின்னக்கா, என் தங்கை முதலியோரை என் தாய் மாமா நல்லேபள்ளி சித்தூருக்கு அழைத்துப் போய்விட்டார். அவர் அந்த ஊரில் பள்ளிக்கூட உபாத்தியாயர்.

நாங்கள் அங்குபோய்ப் பதினைந்து நாட்கள்தானிருக்கும். எங்கள் தலையில் இடி விழுந்த மாதிரி ஒரு செய்தி வந்தது. எங்கள் தாய் எங்களையெல்லாம் விட்டுப் போய்விட்டாரென்ற தந்தி மாலையில் வந்தது. இரவு வண்டிக்குப் புறப்பட்டு, காலையில் நாங்கள் போய்ச் சேர்ந்தோம். எங்கள் தாயாரின் உடலைப் பார்க்கவில்லை. சுடுகாட்டில் அவர்களது சாம்பலைத் தான் பார்க்க முடிந்தது. இந்த நேரம் என்மூத்தசகோதரர் 1918 ஆம்பெரிய யுத்தம் முடிந்த நேரத்தில் பஸ்வி என்ற நகரில் இருந்தார். அவருக்கும் தந்தி பறந்தது. அவர் தாயின் சாம்பலைக் கூடக் காணவில்லை. ஒரு வாரம் கழித்து வந்து சேர்ந்தார். நாங்களெல்லாம் சிறியவர்கள். காலமெல்லாம் குடும்பத்திலுள்ள சுகதுக்கங்களில் அம்மாதான் முழுப் பங்கு செலுத்தி எங்களையெல்லாம் பாதுகாத்ததுடன், உள்ளூர் உறவினர்களுக்கும் உதவியாக இருந்து வந்தவர். குடும்பம் எப்படி நடந்து வந்தது என்பது சிறிதும் தெரியாமல் எங்கள் தகப்பனார் வாழ்ந்து வந்தவர்.

மூத்த தமையனார் 350/— ரூபாய் சம்பள் வேலையை விட்டுவிட்டு எங்களைப் பாதுகாப்பதற்காக கோவையில் மாதம் 35 ரூபாய் சம்பளத்திற்கு முனிசிப் கோர்ட் குமாஸ்தாவாக வேலை பார்த்தார். பல கஷ்டங்களுக்கிடையே எங்கள் தமையனார் மிகப் பொறுமையாக இருந்து எனது சின்னக்கா கல்யாணத்தை நடத்தி வைத்தார். பிறகு, அவருக்குப் பலர் பெண் கொடுக்க முன்வந்தும் கல்யாணத்தைத் தள்ளிப் போட்டுக் கொண்டே வந்தார். கடைசியில் பல பெரியவர்களின் வற்புறுத்தலின்பேரில் அவருக்கும் திருமணம் நடந்தது.

எனது சிறிய தமையனார் 4—வது படிவத்தில் எங்கள் தாய் மாமாவின்





இல்லத்தில் தங்கி நல்லேபுள்ளி சித்தூரில் படித்து வந்தார். இன்னும் ஒரு வருடம் போனால் நான் கோவைப் பள்ளிக்குப் போய்த்தான் படிக்கும் படியிருக்கும். என் சிறிய சகோதரிக்கு வயது ஆறு இருக்கும். என்ன செய்வதென்று திகைக்கும் நிலை. எங்கள் தமையனாருக்கு இப்போது காட்டிலாகா அலுவலகத்தில் வேலை கிடைத்தது. மாதச் சம்பளம் 45 ரூபாய். அவருக்குக் கொள்ளேகாலம் மாற்றல் உத்தரவு வந்துவிட்டது. கிராமத்தில் என்னைத் தனியாக விட முடியாது என்று யோசித்து, பொள்ளாச்சியில் எங்கள் பெரிய தகப்பனார் இல்லத்தில் விட்டு, இங்கு உயர்நிலைப் பள்ளி



யும் இருக்கிறது. எப்படியாவது பத்தாம் வகுப்பு வரையில் படித்து முடித்தால் பிறகு பார்க்கலாம்" என்று கூறி, என்னைப் பொள்ளாச்சியில் பெரிய தகப்பனார் ஆதரவில் விட்டார்கள்.

எங்கள் பெரியப்பா எங்கள் தந்தையாருக்கு நேர்மாறானவர். ஒரு சாப்பாடு ஓட்டல் நடத்தி வந்தார். பெரிய பெரிய அதிகாரிகள், பிரமுகர்கள் நிறைய வருவார்கள். உணவு அருந்துவார்கள். பிறகு சீட்டுக் கச்சேரி நடக்கும்.

அங்கே நான் செக்கார் மடம் ஆரம்பப் பள்ளியில் நாலாவது வகுப்பில் சேர்ந்தேன். போன புதிதில் ஒன்றும் தொல்லையிருக்கவில்லை. பிறகு, பொள்ளாச்சி உயர்நிலைப்பள்ளியில் 5 ஆம் வகுப்பில் சேர்ந்தேன். இந்த உயர்நிலைப் பள்ளிக்கும் எங்கள் பெரியப்பாவின் இல்லத்திற்கும் வெகு சமீபம். பள்ளியில் பெல் அடித்தால் வீட்டில் ஒலி நன்றாகக் கேட்கும்.

ஆகவே நான் முதல் மணி ஒலி கேட்ட பிறகுதான் பள்ளிக்குப் புறப்பட வேண்டும் என்பது என் பெரியப்பாவின் உத்தரவு! அதுவரையில் ஓய்வில் கொடுக்கப்பட்டுள்ள சில பணிகளை நான் முடித்துவிட வேண்டும். அப்புறம்தான் எனது கல்வியைப் பற்றி நினைக்க வேண்டும். வயதுக்கு மீறிய பணிகள். ஓட்டலில் முதல் நாள் சமைத்த பாத்திரங்களையெல்லாம் வேலைக்காரி சுத்தம் செய்து வைப்பாள். அவற்றை உள்ளே அந்தந்த இடங்களில் கொண்டுபோய் வரிசைப் படுத்தி வைக்க வேண்டும். அடுத்தது சாப்பிட்டவர்கள் கைகால் அலம்புவதற்குப் பெரிய அண்டா ஒன்று இருந்தது. அதில் கிணற்றிலிருந்து நீர் இறைத்து நிரப்ப வேண்டும். குளியல் அறையில் அங்கு தங்கி உணவு சாப்பிடும் முக்கியஸ்தர்களுக்கு வெந்நீர் அண்டாவில் தண்ணீர் கொண்டு வந்து கொட்ட வேண்டும்.

பொள்ளாச்சியில் வியாழக்கிழமைகளில் விசேஷமான சந்தை ஒன்று கூடும். சென்னை மாகாணத்திலேயே அந்தச் சந்தை இரண்டாவது இடம் வகித்து வந்தது.

இந்த விசேஷ நாட்களில் எல்லா ஓட்டல்களிலும் உணவுகளும் பலகாரங்களும் நிறைய விற்கும். என்னுடைய பள்ளி காலை 9 மணிக்கு ஆரம்பமாகும். 12½ மணிக்கு முன் பகல் வகுப்பு முடியும். பிறகு பிற்பகல் 2 மணியிலிருந்து 4½ மணி வரை நடக்கும். டிரில் வகுப்பிருந்தால் 5 மணிக்கு முடியும். பகல் 1 மணிக்கு நான் சாப்பாடு முடிந்ததும் சந்தைக்கு வரும் கூட்டத்திற்கு உணவு பரிமாறுதல் முதலிய பணிகளைச் செய்தாக வேண்டும்.

இந்தப் பணிகளில் ஏதேனும் ஒரு சிறு தவறு ஏற்பட்டு விட்டாலும் போதும், எங்கள் பெரியப்பாவுக்கு அபாரமான கோபம் வந்துவிடும். மாட்டை அடிப்பது போல் அடிக்கவும், வாய்க்கு வந்தபடி ஏசவும் செய்வார். இவையெல்லாம் என் சக்திக்கு மீறி இருந்ததால் என் தமையனாரிடம் ஒரு முறை நேரில் சொல்லி என்னையும் கொள்ளேகாலத்துக்கு அழைத்துப்

போங்கள். இங்கிருந்து என்னால் படிக்க முடியாது என்று என் நிலைமைகளையெல்லாம் சொல்லி அழுதேன்.

அவர் கண்கள் கலங்க என்னை ஒருவாறு சமாதானப்படுத்தும் முறையில், "ஒரு வருஷம் எப்படியாவது இங்கிருந்து படி. அடுத்த ஆண்டு உன்னை எப்படியும் கூட்டிப் போகிறேன்'' என்று சமாதானப்படுத்திவிட்டு ஊருக்குப் போய் விட்டார்.

இதே சமயம், பொள்ளாச்சியில் 'ஞானசம்பந்தசினிமா பிக்சர் பாலஸ்' என்ற மௌனத் திரையரங்கில், மதுரை ஸ்ரீ பாலஷண்முகானந்த சபா என்ற சிறுவர் குழு நாடகங்களை நடத்தி வந்தது.

அதன் விளம்பர நோட்டீஸ்கள் என்னைக் கவர்ந்தன. அதில் குறிப்பாக, 'ஸ்ரீலஸ்ரீ டி. டி. சங்கரதாஸ் சுவாமி அவர்களால் பயிற்றுவிக்கப்பட்ட பால் மணம் மாறாத, ஐந்து வயது முதல் 18 வயது வரையுள்ள 60 பாலர்களடங்கிய குழுவினரால் ''அபிமன்யு சுந்தரி'' என்ற நாடகம் இரவு 9.30 மணிக்கு நடத்தப்படும்' என்றிருந்தது. அன்றிரவு 10 மணிக்கு மேல் பெரியவர்களுக்குத் தெரியாமல், ஒரு நண்பனுடன் நாடகம் பார்க்கச் சென்றேன். இன்னொரு நாள் 'இராஜேந்திரன்' என்ற நாடகத்தைப் பார்த்துவிட்டு, இரவு 2.30 மணிக்கு வீட்டுக்குப் போவதற்குள், விஷயம் தெரிந்துவிட்டது. அடி மேல் அடி விழுந்தது. தாங்க முடியாத அடி!

அடுத்த நாள் எனது பணிகளை முடித்துப் பள்ளிக்குப் புறப்பட்டேன். அடியும் வசவும் பட்டுக் கொண்டு படிப்பதை விட எங்கேயாவது ஓடிப் போய் விட வேண்டும் என்ற உறுதி மனத்தில் வேகமாகப் பதிய ஆரம்பித்தது. யோசனை செய்த வண்ணம் பத்து தினங்கள் கவலையிலும் ஆலோசனையிலும் நேரம் கழிந்தது. இதற்குள், நான் பார்த்த நாடகக் குழுவினர் அடுத்த முகாம் கோவை போவதாக முடிவு செய்து, புறப்பட்டுச் சென்றுவிட்டனர் என்று அறிந்தேன். உடனே நாமும் கோவை போய் எப்படியாவது அந்தச் சிறுவர் குழுவில் சேருவது என்ற முடிவுடன் வீட்டில் யாரிடமும் சொல்லாமல் எனது நண்பன் ஒருவனிடம் ஒரு ரூபாய் பெற்றுப் புறப்பட்டு விட்டேன்.

கோவையில் சிறுவர் குழு தங்கியிருந்த இடமறிந்து போய்ச் சேர்ந்து அலுவலகத்து மானேஜர் காமேஸ்வரய்யர் என்பவரைச் சந்தித்தேன். அவர் என்னை விசாரித்தார். கம்பெனியில் சேர்ந்து நடிப்புக் கலைப் பயிற்சியைப் பெற வந்திருப்பதாகத் தெரிவித்தேன். "முன்பு நடித்த அனுபவம் உண்டா?'' என்று கேட்டார். பள்ளியில் முதல் படிவம் படிக்கும் போது மனுநீதி கண்ட சோழன் என்ற நாடகத்தில் நடித்தது பற்றிக் கூறினேன். அதிலுள்ள உரையாடல்களைப் பேசச் சொன்னார். நினைவுக்கு வந்த சில உரையாடல்களைப் பேசிக் காட்டினேன். 'பாடத் தெரியுமா?' என்ற கேள்வி எழுந்தது. ஆரம்பப் பள்ளியில் இருந்த எங்கள் தமிழ் வாத்தியாரை நினைத்துப் பார்த்தேன். அவர் சொல்லிக் கொடுத்திருந்த 'கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பே' என்ற பாடலைப் பாடினேன். சிறிதும் பயமில்லாமல் வசனம் பேசியும், பாடியும் காட்டியதால், கொஞ்சமும் மேடை பயமில்லாதவன் என்று எண்ணி என்னிடம் விலாசம், பள்ளிப் படிப்பு, முதலிய விவரங்களைக் கேட்டார்கள். நான் மூன்றாவது படிவம் முடிக்காமல் இருந்ததையும், மேற்கொண்டு படிப்பதை விட நாடகத்தில் சேர்ந்து நடிக்க ஆசையாக இருப்பதாகவும் அவர்களிடம் கூறினேன்.

"இப்படி நீ சொன்னால் போதாது. உனது பெற்றோர்கள் யாராவது கடிதம் கொடுத்தால்தான் குழுவில் சேர்த்துக்கொள்ள இயலும்'' எனக்கூறினார்கள்.

(அடுத்த இதழில் முடியும்)

சித்திரப் புதிர்

விடை:

1. ஓவியர் ரவிவர்மா
2. ஸ்விட்சர்லாந்து
3. பப்பாளி
4. ஜப்பான்
5. காஷ்மீர்





அம்லுவுடன் அரட்டை அடித்தோம்

மழலைப் பட்டாளத்துடன் ரங்கராஜபுரம் ஐந்துவிளக்குபகுதியிலுள்ள பேபி ஷாலினி வீட்டிற்குப் போய் இறங்கினோம். வெள்ளையில் சிவப்பு பொட்டுகள் வைத்த ஃப்ராக்கில், வெள்ளை ஷூவில், "ஹலோ! குட் மார்னிங்! வெல்கம் டு யூ!" என்று வரவேற்றது — ஷாலினியேதான்!

குழந்தைகள் முகத்திலே உற்சாகம். ஆனாலும், ஒருவித சங்கோஜம். ஷாலினியோ, தானே, ஒவ்வொருத்தராய்க் கைகுலுக்கி, பெயரைக் கேட்டு, உட்காரச் சொல்லி.... கொஞ்ச நேரத்தில் ஒருவித நெருக்கத்தை உண்டு பண்ணிவிட்டாள்.

அப்புறம் ஆளுக்கு ஆள் கேள்வி கேட்க ஷாலினியும் அவைகளுக்கு, பளிச் பளிச்சென, குரலில் ஏற்ற, இறக்க பாவங்களுடன் பதில் சொல்ல, சந்திப்பு களை கட்டியது.

"நீ எந்த ஸ்கூலில் படிக்கிறே ஷாலினி?

"ஃபாத்திமா ஸ்கூலில்."

"எந்த கிளாஸ்?"

"செகண்ட் ஸ்டாண்டர்டு. 'பி' செக்ஷன்."

"அப்போ, ஷூட்டிங்" போகணும்னு, ஸ்கூல் 'கட்' பண்ணிடுவியா?"

"நோ... நோ... ஈவினிங்ல மூணரை மணிக்கு ஸ்கூல் விட்டுடுவாங்க. அப்புறம்தான் ஷூட்டிங் போவேன். ராத்திரி ஒன்பது ஒன்பதரை மணிக்கு ஷூட்டிங் முடிஞ்சதும் வீட்டுக்கு வந்து தூங்கிடுவேன். காலைல ஆறரைக்கு எழுந்து, பல் தேய்ச்சு, குளிச்சு, டிரெஸ் பண்ணிக்கிட்டு, சாப்பிட்டுட்டு, ஸ்கூல் போயிடுவேன். சனி, ஞாயிறிலே ஷூட்டிங் போவேன்."

"லஞ்ச் கொண்டு போக மாட்டியா?"

"ஊகூம். ஸ்கூல் எங்க வீட்டுக்குப் பக்கத்துலதான் இருக்கு. ஸோ, லஞ்ச் சாப்பிட வீட்டுக்கு வந்துடுவேன்."

"சாயந்தரம் ஷூட்டிங் போயிட்டா, நீ ஹோம் ஒர்க்கெல்லாம் எப்ப செய்வே?"

"ஷூட்டிங் போகும்போது, நோட் புக்ஸ் எடுத்துக்கிட்டுப் போயிடுவேன். ஷூட்டிங்ல நானே முழுக்கவும் நடிக்கும்படி இருக்காது. நடுநடுவே ஓய்வு கிடைக்கும். அப்ப எல்லாம் உட்கார்ந்து ஹோம் ஒர்க் செய்வேன்."

"நீ எப்பவாவது ஹோம் ஒர்க் செய்யாம ஸ்கூல் போய், மிஸ் கிட்ட அடி வாங்கியிருக்கியா?"

"நோ! நான் ஒருநாள்கூட ஹோம் ஒர்க் செய்யாமல் கிளாஸுக்குப் போனதில்லே. அதனாலே மிஸ்கிட்ட அடி வாங்கினதில்லே."

"ஆனாலும் நீதான் சினிமா ஸ்டார்

ஆச்சே! நீ தப்பு பண்ணினுக் கூட மிஸ் அடிக்கமாட்டாங்க!''

''நான் ஷூட்டிங்கிலதான் சினிமா ஸ்டார். கிளாஸிலே வெறும் ஷாலினி. ஒரு ஸ்டூடெண்ட். அவ்வளவுதான்.''

''உனக்கு கிளாஸ்ல நிறைய ஃப்ரெண்ட்ஸ் உண்டா?''

''ஓ! நிறையப் பேர், ஜோஷி, திவி, தீபா, சுபா, ஹரிப்ரியா, ஆர்த்தி, ஜூலி, ஷாலினி (நான் இல்லே. இன்னொரு பெண்) ஸ்வீட்டி, டயானு...''

''உன் ஃபிரெண்ட்ஸ் எல்லாம் உன்னை எப்படிக் கூப்பிடுவாங்க?''

''ஷாலுன்னு.''

''உன் ஃபிரெண்ட்ஸ்களோட நீ விளையாடுவியா?''

''ம்... ஸ்கூலிலே விளையாடுவேன். வீட்டிலேதான் விளையாட நேரமே கிடைக்காது. ஷூட்டிங் இல்லேன்னுக் கூட ட்யூஷன் மாஸ்டர் வந்துடுவார். இல்லாட்டி டான்ஸ் மாஸ்டர் வந்துடுவார். டான்ஸ் கத்துத் தர.''

''நீ டான்ஸ் ஆடுவியா?''

''ஓ! பரதநாட்டியம்... டிஸ்கோ. ரெண்டும்.''

''இப்ப எங்களுக்கு ஆடிக் காட்டேன்.''

''இப்ப வேணும். நாம எல்லாம் பேசி முடிச்சப்புறம் ஆடிக் காட்டறேன்.''

''ஷாலினி! நீ இதுவரைக்கும் எத்தனை படம் நடிச்சிருப்பே?''

''தமிழ், தெலுங்கு, மலேயாளம் எல்லாத்திலேயும் சேர்த்து சுமார் அறுபது.''

''தெலுங்கு, மலேயாளம்கூட உனக்குத் தெரியுமா?''



''ரொம்பத் தெரியாது. என்ன பேசணுமோ அதைச் சொல்லிக் குடுப்பாங்க. அதை நான் கவனிச்சுப்பேன். ரெண்டு, மூணு தடவை சொல்லிப் பார்த்துட்டு, பேசிடுவேன்.''

''நீ காமிக்ஸ் புக்ஸ் படிப்பியா?''

''நல்ல காமிக்ஸாப் பார்த்து எங்க அப்பா நிறைய வாங்கித் தருவார்: என் அண்ணன்தான் முதலில் படிச்சுட்டு, அப்புறம் எனக்குத் தருவான்.''

''உனக்கு அண்ணன் கூட உண்டா?''

''ம்... பேர் ரிச்சர்ட்ஸ்'' (உள்ளே போய், தன் அண்ணனை அழைத்துக் கொண்டு வந்து அறிமுகம் பண்ணு



உட்கார்ந்திருப்பவர்கள்: ஸ்ரீராம், கணேஷ்பாபு, அனுஷா, ஷாலினி, ஜோதி, சுபா. நிற்பவர்கள்: பாலாஜி, கல்யாணி, ராதிகா, ஸ்ரீவித்யா, சரண்யா, அர்ஜுன் கார்த்திக்.



கிறுள் ஷாலினி.)

''ரிச்சர்ட்ஸா? அப்ப நீ கிரிக்கெட் ஆடுவியா ரிச்சர்ட்ஸ்?''

''ஓ! ஆடுவேனே!'' — ரிச்சர்ட்ஸ்.

''அவன் கராத்தே, குங்ஃபூ, பிரேக் டான்ஸ் இதெல்லாம் கூடக் கத்துக்கறுன்.''

''ரிச்சர்ட்ஸும், நீயும் சண்டை போடுவீங்களா?''

''ம். நிறைய.''

''யார் ஜெயிப்பீங்க?''

''அவன்தான்.'' (சோகமாய்)

''உனக்குப் பாடத் தெரியுமா?''

''ஓ! நான் பாடின பாட்டை, கேசட்டாய்ப் போட்டிருக்காங்க. பேரு ஷாலினி கேஸட்.''

''ஷூட்டிங்குக்கு உன்கூட யார் வருவாங்க?''

''என் அப்பாதான்.''

''ஷாலினி! நீ அதிகப்பிரசங்கித்தனமா, வயசுக்கு மீறிப் பேசறியே சினிமாவிலே எல்லாம்?''

''இப்ப நீ இதுமாதிரி கேட்கிறியே! அது மட்டும் என்னவாம்?''

''இந்தக் கேள்வியைக் கேட்கச் சொல்லி என் அம்மா சொல்லி அனுப்பிஞங்க.''

''நானும் டைரக்டர் சொல்லித் தரதை, அப்படியே பேசறேன். அவ்வளவுதான். ஏன் அப்படிப் பேசச் சொல்றீங்க நீங்க ஷாலினியைன்னு அவங்ககிட்டே போய்க் கேளுங்க.''

''என்னைக் கூட வீட்டிலே 'குட்டி அம்லு'ன்னுதான் கூப்பிடுவாங்க'' — வாயில் சூப்பிக் கொண்டிருந்த விரலை எடுத்துவிட்டு ஸ்ரீவித்யா சொன்னுள்.

''அப்படியா?''

''நீ பாஞ்சோ (அம்லு கதையில் ஷாலினி கூட வரும், வேற்றுக் கிரக மனிதன். ஷாலினிகேட்டதைஎல்லாம் செய்பவன்) கிட்ட சொல்லி எனக்கு ஒரு சாக்லேட் வாங்கித் தர்றியா?''

''வேணும்னு என் அப்பாவிடம் சொல்லி வாங்கித் தர்றேன்.''

''இன்னிக்கு உனக்கு ஷூட்டிங் இல்லையா?''

''இருக்கே! பெசன்ட் நகர்ல ஷூட்டிங். மௌலி அங்கிள் உங்களை அழைச்சிண்டு வர்றேன்னு நேத்தியே சொன்னதால, டைரக்டர்கிட்டே ஒரு மணி நேரம் பர்மிஷன் வாங்கிண்டு வந்திருக்கேன்.''

''இப்ப டான்ஸ் ஆடிக் காட்டறயா?''

''ஓ! எஸ்!' ஸ்டீரியோவில் ஒரு மேற்கத்திய கேஸட்டைப் போட்டுவிட்டு, ஷாலினி ஆடிய டிஸ்கோ டான்ஸ் அமர்க்களம். 'சின்ன வயசில் எப்படி இத்தனை அழகாய் ஆடுகிறுள்?' என்று புருவம் உயரச் செய்தது அது.

''ஒரு பாட்டுப் பாடேன்.''

ஆங்கில கிறிஸ்துமஸ் பாடல் ஒன்றை முழுக்கப் பாடினுள்.

''ஒரு நிமிஷம் இருங்கள்'' என்று சொல்லிவிட்டு உள்ளே போய், ஒரு பையுடன் வந்து, ஆளுக்கு ஒரு ஃபைவ் ஸ்டார் கொடுத்தாள். புறப்பட்டோம்.


சுமார் ஒரு மணி நேரம் போனதே தெரியவில்லை.


ஏற்பாடு, தொகுப்பு:

எஸ். சந்திரமௌலி.

படங்கள்: சோமு


அட்டை வண்ணப்படம்:
ஸ்ரீசாயி தீபா கலர் லேப்





மேலே உள்ள ஒவ்வொரு படமும் எந்தப் பழமொழியை நினைக்கச் செய்கிறது?
விடை 26 — ஆம் பக்கம்.

மாமா நல்ல மாமா



—சரவன்—

கிட்டுவுக்கு ஆண்டு கடைசிப் பரீட்சை முடிந்து ஒன்றரை மாதம் விடுமுறை விட்டு விட்டார்கள், பள்ளிக்கூடத்தில். அவனுக்கு வயது பதினொன்று. அவன் ஆறாவது வகுப்பில் படிக்கிறான்.

''பரீட்சை முடிந்து லீவு விட்டாச்சு கிட்டுவுக்கு. அவனை எந்த ஊருக்கு அனுப்பலாம், லட்சுமி?'' எனக் கேட்டார் தந்தை ராமசாமி.

''ஏன்? எங்கண்ணாதான் தஞ்சாஊரிலிருந்து கடிதம் போட்டிருக்கிறாரே, 'கிட்டுவை இந்தக் கோடை விடுமுறைக்கு இங்கே அனுப்பவும்' என்று. அப்படியே கிட்டுவைத் தஞ்சாஊருக்கு அனுப்பினால் போச்சு!'' என்று தாய் மைதிலி பதில் சொன்னாள்.

அவர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டே வீட்டுக்குள் நுழைந்த கிட்டு, ''ஹை! ஜாலி! அம்மா! அப்பா! என்னைத் தஞ்சாஊருக்கே அனுப்புங்க! பெரிய கோயில், ராஜா அரண்மனை இதையெல்லாம் பார்க்கலாம்! அப்பா! நாளைக்காலையே அனுப்புங்க! சரிதானா?'' என்று உற்சாகத்துடன் கூறினான்.

சரி என்று ஒப்புக் கொண்டு, கிட்டுவின் தந்தை ராமசாமி, தஞ்சாஊரிலுள்ள தம் மைத்துனரும், கிட்டுவின் மாமாவுமான கிருஷ்ணசாமிக்கு டிரங்கால் போட்டு, ''கிட்டு காலையில் பஸ்ஸில் புறப்பட்டு வருகிறான். இரவு 8 மணிக்கு வந்து சேருவான். பஸ்ஸ்டாண்டில் கிட்டுவைச் சந்தித்து, கூட்டிக் கொண்டு போக ஏற்பாடு செய்துவிடு'' என்று தெரிவித்து விட்டார். அடுத்த நாள் காலை தக்க துணையுடன் கிட்டுவை பஸ் ஏற்றித் தஞ்சாஊருக்கு அனுப்பிவிட்டார்.

தஞ்சைக்குச் சென்ற கிட்டுவுக்கு, மாமாவின் வீடு பிடித்துவிட்டது. ஆனால், விளையாடத்தான் குழந்தைகள் இல்லை. பாவம்! மாமாவுக்குக் குழந்தைகள் ஏதும் இல்லை என்ற உண்மை அவனுக்குச் சற்று ஏமாற்றத்தைத் தந்தது. மற்றபடி, அவனை மாமா அங்கே பல இடங்களுக்குக் கூட்டிக் கொண்டு போனார்.

வீட்டில் விளையாடக் குழந்தைகள் இல்லாததால், கிட்டு எப்போதும் வாசலிலே நின்று வீதியில் வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பது வழக்க

மாகிவிட்டது.

மாமாவின் வீட்டுக்கு எதிரில் ஒரு பெரிய கடை இருந்தது. சோப்பு, சீப்பு, பவுடர், நோட்டு, பென்சில், பெப்பர் மின்ட், பிஸ்கட், முதலிய பல பொருள்கள் விற்பனை செய்யும் கடை அது. கடையில் வியாபாரம் நன்றாக நடந்து கொண்டிருந்தது. அங்கு நடக்கும் சுறுசுறுப்பான வியாபாரத்தைப் பார்த்துக் கொண்டிருப்பதில் கிட்டுவுக்கு நன்றாய்ப் பொழுது போயிற்று.

இரண்டு தினங்கள் அம்மாதிரி அந்தக் கடையையே பார்த்துக்கொண்டிருந்த கிட்டுவுக்கு, அந்தக் கடையில் தன் வயதுடைய இரண்டு சிறுவர்கள் வேலை செய்து கொண்டிருப்பது தெரிய வந்தது. சிறிது நேரம் யோசித்தான். பின்னர் அவன் மனத்தில் என்னவோ ஓர் எண்ணம் உதிக்க, மாமாவிடம் ஓடினான். ''மாமா! மாமா! ஒரு சேதி!'' என்றான்.

''என்னடா கண்ணு சேதி?''

''வந்து... எதிரில் உள்ள கடையில் என்னைப் போல இரண்டு பிள்ளைகள் வேலை செய்யறாங்களே! நீங்க பார்த்திருக்கீங்களா?''

''உம்! தெரியுமே! அவங்க ரெண்டு பேரும் எனக்குத் தெரிந்தவங்களுடைய பிள்ளைங்கதான்!''

''அப்படியா மாமா?''

''ஆமாம். அவங்களும் உன்னைப் போல் ஆறுவது படிக்கிறாங்க. அவங்களுக்குப் பரீட்சை முடிந்து விடுமுறை விட்டுட்டாங்க. லீவிலே சும்மா சோம்பேறியாக நேரத்தைக் கழிக்கறாங்களே என்று நான்தான் அந்த இரண்டு பிள்ளைகளையும் இந்தக் கடையிலே வேலைக்குச் சேர்த்து விட்டேன், அவங்களுடைய அப்பாக்களின் சம்மதத்துடன்தான்,'' என்று கூறி நிறுத்தினார் மாமா.


வியந்தான் கிட்டு. ''மாமா! எனக்கும் ஆசையாய் இருக்கு! என்னையும் அந்தக் கடையிலே வேலை செய்ய ஏற்பாடு செய்கிறீங்களா?'' என்று ஆர்வத்தோடு கேட்டான்.

''ஓ! பேஷாய்ச் செய்கிறேன். நானே உன்னைக் கேக்கணும் என்று நினைச்சேன். நீயே உன் விருப்பத்தைச் சொல்லிட்டே. ரொம்ப சந்தோஷம்!'' எனக் கூறினார் மாமா.

மாமா கிருஷ்ணசாமி மறுநாளே கிட்டுவை அந்தக் கடைக்காரரிடம் அழைத்துப் போய், அவருடன் பேசி, கிட்டுவை அங்கே வேலைக்கு அமர்த்தி விட்டார்.

கிட்டு மற்ற இரு சிறுவர்களுடன் ஒற்றுமையுடன் பழகி, சுறுசுறுப்புடன் கடையில் வேலை செய்தான். கடை முதலாளிக்கும் கிட்டுவின் வேலை ரொம்பத் திருப்தியளித்தது. அவர் மற்ற இரு சிறுவர்களையும் பார்த்து, ''டேய்! உங்களுக்குப் பிறகு கிட்டு வேலைக்கு வந்தவன். எவ்வளவு சுறுசுறுப்புடன் வேலை செய்யறான் பாருங்கடா!'' என்று தன்னைப் பாராட்டியவாறு கூறியது கிட்டுவுக்கு ரொம்ப மகிழ்ச்சியாகவும் பெருமையாகவும் இருந்தது.

கிட்டுவுக்கு விடுமுறை முடிந்து





விட்டது. மேல்வகுப்புக்கு அவன் தேறியிருப்பதைக் குறிப்பிட்டு, உடனே அவனை பஸ் ஏற்றித் தக்க துணையுடன் சென்னைக்கு அனுப்பும்படி அவன் தந்தை ராமசாமி, கிட்டுவின் மாமாவுக்குக் கடிதம் எழுதினார்.

அதன்படி மாமா அன்று கிட்டுவைத் தக்க துணையுடன் பஸ் ஏற்றி அனுப்பினார். புறப்படும் சமயம், அவனிடம் ஒரு கவரைக் கொடுத்து, ஏதோ ரகசியமாய்ச் சொன்னார். 'சரி' என்று தலையை ஆட்டியபடி, கவரைத் தன் பெட்டிக்குள் பத்திரமாய் வைத்துக் கொண்டான் கிட்டு.

சென்னை திரும்பிய கிட்டு, மறுதினமே பள்ளிக்குச் சென்றான். பள்ளியிலே புத்தகங்கள், நோட்டுக்கள், சீருடைகள் என்று எல்லாவற்றுக்கும் பட்டியல் கொடுத்தார்கள். அவற்றைச் சீக்கிரமே வாங்கிவிட வேண்டும் என்றும் தெரிவித்து விட்டார் ஆசிரியர்.

கிட்டுவின் தந்தை கணக்குப் போட்டுப் பார்த்தார். எல்லாம் கிட்டத்தட்ட இருநூறு ரூபாய் பிடிக்கும் என்று தெரிய வந்தது. அவரது சம்பளம் சொற்பம். என்ன செய்வார் பணத்திற்கு? கையில் நூறு ரூபாய் தான் இருந்தது. மிச்சம் நூறு ரூபாய்க்கு என்ன பண்ணுவது என்று புரியாமல் விழித்தார்.

தந்தை பணத்திற்காக ஏக்கத்துடன் இருப்பதைக் கவனித்த கிட்டு, "அப்பா! நீங்க கவலைப்படாதீங்க!" என்று கூறியபடி, உள்ளே சென்று தன் பெட்டியைத் திறந்து அதிலிருந்து மாமா தந்த கவரை எடுத்து வந்து தந்தையிடம் நீட்டி, "இந்தாங்க அப்பா! இதில் நூறு ரூபாய் இருக்கு!" என்று கூறினான் உற்சாகத்துடன்.

தந்தை வியப்புடன், ஏதடா இவ்வளவு பணம் உனக்கு?" என்று கேட்டவாறே கவரைப் பிரித்து ரூபாய் நோட்டுக்களை வெளியே எடுத்து எண்ணினார். அதே சமயம் தாய் மைதிலி அதிர்ச்சியுடன், "ஏண்டா! இது என்ன, மாமா தந்தாரா? எப்படிக் கிடைச்சுது?" என்று கேட்டாள்.

"மைதிலி! ஏன் அவசரப்படுகிறாய்? கிட்டு சொல்லட்டுமே!" என்றார்.

கிட்டு கூறினான்: "அப்பா! தஞ்சாவூரிலே மாமாவின் வீட்டுக்கு எதிரில் ஒரு பெரிய கடை இருக்கிறது. அதில் இரண்டு பையன்கள் என்னைப் போல வயசுடன் வேலை செய்துகிட்டிருந்தாங்க. எனக்கும் அவங்களைப்போல வேலை செய்யணும் என்று தோணிச்சு. மாமாவிடம் சொன்னேன். உடனே மாமா என்னை அந்தக் கடையிலே வேலைக்குச் சேர்த்துவிட்டார். சுமார் 30 நாட்கள் — அதாவது ஒரு மாசம் வேலை செய்தேன். எனக்குச் சம்பளம் நூறு ரூபாய் போட்டு, மாமாவிடம் கொடுத்தாராம் கடைக்காரர். மாமா நான் இங்கே புறப்பட்டு வரும்போதுதான் இந்தச் சேதியை எனக்குச் சொல்லி, இந்தக் கவரையும் கொடுத்தார். பள்ளியிலே படிக்கும் பிள்ளைகள் தங்கள் விடுமுறை நாட்களில் சோம்பேறியாகப் பொழுது போக்காமல், ஏதாவது கடையிலோ, கம்பெனியிலோ தொழிற்கூடத்திலோ அமர்ந்து வேலை செய்தால், படிக்கும்போதே வேலை செய்யும் பழக்கம் ஏற்படுவதுடன், பணமும் கிடைக்கும். அந்தப் பணம் விடுமுறைக்குப் பிறகு பள்ளிக்கூடம் திறந்து பிள்ளைகள் மேல் வகுப்பில் சேரும்போது, அவர்களுக்குப் புத்தகம், நோட்டு முதலியவை வாங்க ஒத்தாசையாக இருக்கும் என்று மாமா சொன்னார், அப்பா! மாமா எனக்கு எப்படி உதவி பண்ணியிருக்கிறார் பார்த்தீர்களா! நல்ல மாமா என் மாமா!"

மிகப் பெரிய ஆலமரம்!

கல்கத்தா தாவரவியல் தோட்டத்தில் ஓர் ஆலமரம் இருக்கிறது. இதுவே உலகத்தில் மிகப் பெரிய ஆலமரம்.

1782 இல் ஓர் ஈச்சமரத்தின் மேல் விழுந்த விதையிலிருந்து முளைத்ததாம்!

மொத்தத்தில் இதன் குறுக்களவு கிழக்கு மேற்கில் 300 அடி, தெற்கு வடக்கில் 288 அடி. மேல் தழைப் பகுதியின் சுற்றளவு 948 அடி. அடிமரத்தின் சுற்றளவு ஒன்றரை அடி. நிலத்தில் வேரூன்றிய விழுதுகள் 512. நிற்கும் பரப்பு ஒன்றே முக்கால் ஏக்கர். மரத்தின் உயரம் — 85 அடி. 7,500 பேர்கள் இந்த ஆலமரத்தின் கீழ் நிற்கலாம்.

தாய் மரம் நலிந்து விழுந்து விட்டதால், அதை அடியோடு அகற்றி விட்டார்கள். அதன் குழந்தைகளான விழுதுகள்தான் இப்பொழுது தாயின் பெருமையை எடுத்துக் காட்டும் வண்ணம் நிற்கின்றன!

பொதுவாக ஆலமரம் 100 அடி உயரம் வரை வளரும். கிளைகளிலிருந்து விழுதுகள் என்னும் ஒட்டு வேர்கள் உண்டாகும். அவை நிலத்தின் உள்ளே ஊடுருவிச் சென்று சாதாரண வேர்களைப் போலவே நீர் முதலிய உணவுகளை உறிஞ்சி வளர்ந்து, பருத்து, இலைகளைத் தாங்கிக் கொண்டு நிற்கும்.


அத்தி, மல்பெர்ரி ஆகிய மரங்களின் 'இனத்தைச் சேர்ந்தது ஆலமரம்.

தகவல்; புகைப்படம்: 'கிஸ்மி' கல்கத்தா.



விசித்திரச்

உலகம் சுற்றும் ஒட்டகம்



ஜோர்டான் நாட்டைச் சேர்ந்த 4 ஆண்களும் ஒரு சிறுவனும் ஒட்டகத்திலேயே சவாரி செய்து, ஐரோப்பா மற்றும் தென் அமெரிக்க நாடுகளில் பயணம் செய்து உலகத்தைச் சுற்றி வரப் புறப்பட்டிருக்கிறார்கள்!



மனிதன் உயர நிலை உயரும்!

ஹாலந்தில் ஆண்களின் உயரம் வரவர அதிகமாகிக் கொண்டிருக்கிறது. அதனால், இப்போது அங்கேயுள்ள வீடுகளின் நிலைகள் வழக்கமான அளவைவிட 4 அங்குலம் அதிக உயரத்துடன் அமைக்கிறார்கள்! ராணுவ வீரர்களின் கட்டில்களும் அதிக நீளமாக்கப் படுகின்றன.


ஈ·(பல்) கோபுரம்



பாரீஸில், ஜீவான் மெர்சான் என்பவர், 884 மாட்டுப் பற்களையும், தன்னுடைய 6 சொந்தப் பற்களையும் கொண்டு, பாரீஸின் ஈபல் கோபுரத்தின் மாதிரி உருவம் ஒன்றைச் செய்திருக்கிறார். இதைச் செய்துமுடிக்க 1100 மணி நேரம் ஆயிற்றாம்!

செய்திகள்

முடியாலும் இழுக்க முடியும்



கோலாலம்பூரில், 25 பயணிகளைக் கொண்ட 6200 கிலோ எடையுள்ள ஒரு பஸ்ஸை, 35 வயதுடைய லட்சுமணன் என்பவர் தனது தலைமுடியின் வலுவினால் 20 மீட்டர் தூரம் வரை இழுத்துச் சென்று சாதனை புரிந்துள்ளார்!

பாட்டில் சாதனை



சிங்கப்பூரில், 30 பேர்கள் கொண்ட குழுவினர், தொடர்ந்து 74 மணி 5 நிமிட நேரம் பாட்டுப் பாடினார்கள். இது உலக சாதனையாகும். இதற்குமுன் உலக சாதனை 72 மணி 2 நிமிடம்.

எழுத்து மன்னர்!



மதுரையில், மரிய ஜோசப் சேவியர் என்னும் பேராசிரியர் தொடர்ந்து 13 நாட்கள் நிறுத்தாமல் எழுதிக் கொண்டேயிருந்தார். 13 நாட்களும் கதைகளும், கட்டுரைகளும், நாடகங்களும் அவர் எழுதினார். இது உலக சாதனை!

— ஆழி



அரேபியக் கதை

பணத்தின் மகிமை

ஹாஸனின் மனைவி பாத்திமா.

ஹாஸனும், பாத்திமாவும் எப்பொழுது பார்த்தாலும் பணம், பணம் என்றே ஜபம் செய்து கொண்டிருப்பார்கள். இந்த உலகத்திலுள்ள செல்வத்தையெல்லாம் கொண்டு வந்து அவர்களுக்குக் கொடுத்தால்கூட அவர்களின் ஆசை தீராது. அவ்வளவு பேராசை!

ஹாஸனுக்கு அரண்மனையில் வேலை. அரண்மனை வேலை என்றால் என்ன? மந்திரி வேலையா? இல்லை; எடுபிடி வேலைதான்! ஆனாலும், அவனுக்கு நல்ல சம்பளம் கிடைத்து வந்தது. எவ்வளவு சம்பளம் கிடைத்தால்தான் என்ன, அந்தப் பணத்தில் பைசா செலவிடுவதானாலும், ஹாஸனுக்கோ, பாத்திமாவுக்கோ மனம் வராது. எந்த எந்த வழிகளில் மிச்சம் பிடிக்கலாம்; எப்படி எப்படிப் பணம் சம்பாதிக்கலாம் என்பதைப் பற்றியே அவர்கள் அடிக்கடி யோசனை செய்வார்கள். நல்ல சாப்பாடு சாப்பிட மாட்டார்கள்; நல்ல உடை உடுத்த மாட்டார்கள்; எப்பொழுது பார்த்தாலும், பிச்சைக்காரர்கள் போலவே காட்சி அளிப்பார்கள்.

இப்படியே அவர்கள் மிச்சம் பிடித்து ஒரு பானை நிறையப் பணம் சேர்த்து விட்டார்கள். ஒரு பானை நிறையப் பணம் சேர்த்துவிட்டால் போதுமா? இன்னும் மூன்று பானைகள் வீட்டிலே இருக்கின்றனவே! அவைகளையும் பணத்தால் நிரப்பிவிட வேண்டுமென்று ஆசைப்பட்டார்கள், ஹாஸனும் பாத்திமாவும். அதற்கு வழி என்ன? இருவரும் யோசனை செய்தார்கள்.

அன்று ஹாஸனுக்கு ஒரு யோசனை உதயமாயிற்று. உடனே, ''பாத்திமா! நான் ஒரு யோசனை சொல்கிறேன். அது போல் செய்கிறாயா?'' என்று கேட்டான்.

பாத்திமா, 'மாட்டேன்' என்றா சொல்லுவாள்? ''என்ன யோசனை? சொல்லுங்கள், சொல்லுங்கள்'' என்று ஆவலோடு கேட்டாள்.

உடனே ஹாஸன் சொல்ல ஆரம்பித்தான்; ''பாத்திமா, நீ கடைத் தெருவுக்குப் போகவேண்டும். போகும்போதே தலையை விரித்துப் போட்டுக் கொள். கண்களிலே கண்ணீரை வரவழைத்துக் கொள். அங்குள்ள கடைக்காரர் ஒவ்வொருவரிடமும் சென்று, 'ஐயா, என்னுடைய தலைவிதி இப்படியா ஆக வேண்டும்? என் கணவனை அரசர் விசாரணை எதுவும் இல்லாமல் சிறையில் போட்டுவிட்டார். சாப்பாட்டுக்கே வழியில்லாமல் நான் திண்டாடுகிறேன். நீங்கள்தான் ஏதாவது உதவி செய்ய வேண்டும்? என்று கெஞ்சிக் கேள். நிச்சயம் அவர்கள் உனக்கு ஆகாரமும் பணமும் தருவார்கள். ஆகாரத்தை இருவரும் சாப்பிடலாம். பணத்தைப் பானையில் போட்டு வைக்கலாம். எப்படி என் யோசனை?'' என்று கேட்டான்.

''ஆஹா! அற்புதமான யோசனைதான்... ஆனால், அவர்கள் உங்களை நேரில் பார்த்து விட்டால்...?''

''அதைப் பற்றிக் கவலைப்படாதே! நான் கோழி கூவும் முன்பே அரண்மனைக்குப் போய் விடுவேன். கடைகளெல்லாம் மூடிய பிறகே வீடு திரும்புவேன். அரண்மனையில் இருப்பவர்களைத் தவிர மற்ற எவருடைய கண்களிலும் நான் தென்பட மாட்டேன்.''

''சரி, அப்படியே செய்யலாம். நாளையிலிருந்தே நான் இந்த வேலையை ஆரம்பித்து விடுகிறேன்'' என்றாள் பாத்திமா.

அப்படியே ஆரம்பித்து விட்டாள்.

தலைவிரி கோலத்துடனும், நீர் வழியும் கண்களுடனும் ஒவ்வொரு கடையாகச் சென்றாள். ஹாஸன் சொல்லிக் கொடுத்தது போலவே புளுகினாள். கடைக்காரர்கள் அவளுடைய புளுகை உண்மையென்றே நம்பிவிட்டார்கள்; இரக்கம் காட்டினார்கள்; உணவு, உடை, பணம் முதலியவற்றைக் கொடுத்து உதவினார்கள். அன்று வீடு திரும்பும் போது பாத்திமாவுக்கு அளவில்லாத ஆனந்தம்.

ஊர் அடங்கிய பிறகு வீடு வந்து சேர்ந்தான் ஹாஸன். பாத்திமா சம்பாதித்து வந்திருந்த உணவு, உடை, பணம், முதலியவற்றைக் கண்டதும், அவன் பெருமகிழ்ச்சி அடைந்தான்.

மறுநாளும் பாத்திமா கடை வீதிக்குச் சென்றாள். முதல்நாள் புளுகியது போலவே புளுகினாள். அன்றும் நல்ல வருமானம் கிடைத்தது. இப்படியே தினமும் செய்து வந்தாள்.

எவ்வளவு நாட்களுக்குத்தான் இப்படிச் செய்ய முடியும்? கடைக்காரர்கள் அலுத்துப் போய் விட்டார்கள். வெறுத்துத் துரத்த ஆரம்பித்தார்கள். "சேச்சே, போ! போ! உனக்கு வேறு வேலை இல்லை. இனிமேல் இந்தப் பக்கம் தலைகாட்டவே கூடாது. தினசரி உனக்கு அள்ளிக் கொடுக்க, இங்கே என்ன கொட்டியா கிடக்கிறது? உனக்கு உறவினர் ஒருவர் கூட இல்லையா? அவர்களிடத்திலே போய் உன் கஷ்டத்தைச் சொல்லேன்" என்று எரிந்து விழுந்தார்கள்.

பாத்திமாவுக்கு அன்று வரும்படி கிடையாது. தலை குனிந்தபடியே வீடு திரும்பினாள். அன்று இரவு ஹாஸனிடத்திலே நடந்ததைச் சொன்னாள்.

ஹாஸன் அவள் கூறியதைக் கவனமாகக் கேட்டான். பிறகு, "சரி, அதற்காக என்ன? அவர்கள் நம் உறவினர் வீட்டுக்குத்தானே போகச் சொன்னார்கள்? அதுவும் நல்ல யோசனைதான். நாளையிலிருந்து நீ என்ன செய்ய வேண்டும், தெரியுமா? நம் உறவினர்கள் ஒவ்வொருவரையும் போய்ப் பார்த்து, நான் சிறையில் இருப்பதாகக் கூற வேண்டும். என்னை மீட்பதற்குப் பண உதவி வேண்டும் என்று கெஞ்ச வேண்டும். அவர்கள் பணம் தருவார்கள். அந்தப் பணத்தைப் பத்திரமாகக் கொண்டு வந்து வீடு சேர்க்க வேண்டும். எப்படி என் யோசனை?" என்றான்.


உடனே, பாத்திமாவின் முகத்திலே மகிழ்ச்சி தாண்டவமாடியது. "சரி, நாளையே போகிறேன்" என்றாள்.

மறுநாள் முதல், ஒவ்வொரு உறவினர் வீடாகச் சென்று ஹாஸன் சொல்லிக் கொடுத்தது போல் சொன்னாள். அவர்களும் அவளுடைய பேச்சை நம்பிவிட்டார்கள்! தங்களால் முடிந்த உதவியைச் செய்தார்கள்; உறவினர்களில் ஒருவரைக் கூட அவள் விடவில்லை. எல்லோரிடமும் 'வசூல்' செய்து விட்டாள்! இப்படியே சில நாட்கள் செய்து வந்தாள். எவ்வளவு நாட்கள்தான் இப்படியும் செய்ய முடியும்? உறவினர்களுக்கு அவள் பேரில் சந்தேகம் ஏற்பட்டது. வரவர சந்தேகம் வலுத்தது. "ஹாஸன் சிறையில் இருப்பதாகத் தெரியவில்லை. இவள் பொய் சொல்லுகிறாள்" என்று சிலர் பேசிக் கொண்டார்கள்.


இந்தச் செய்தி பாத்திமாவுக்கு எப்படியோ எட்டிவிட்டது. "சரி, இனி இவர்களிடம் சென்றால் ஆபத்து! உள்ளதையும் பிடுங்கிக் கொண்டு விரட்டி விடுவார்கள்" என்று எண்ணினாள். உடனே, நேராக வீட்டுக்கு வந்துவிட்டாள்.

ஹாஸனிடம் நடந்தவற்றைக் கூறி

கையெடுக்காமலே இப்படி வரைய வேண்டும். முடியுமா?



விடை:



னாள். ஹாஸன் மிகுந்த வருத்தம் அடைந்தான். ''சரி, வேறு ஏதாவது வழி இருக்கிறதா என்று பார்க்கலாம்'' என்று பெருமூச்சுடன் கூறினான்.

மறுநாள் இரவு அரண்மனையிலிருந்து ஹாஸன் வீட்டுக்கு வந்ததும், வாய்க்குள்ளிருந்து எதையோ எடுத்தான். பாத்திமா அதைப் பார்த்தாள்.

''ஆ! இது என்ன! வைர மோதிரம்!'' என்று ஆச்சரியத்துடன் கேட்டாள்.

''உஸ்... சப்தம் போடாதே! இதை நான் அரண்மனையிலிருந்து கிளப்பிக் கொண்டு வந்து விட்டேன்'' என்று மெதுவாகக் கூறினான் ஹாஸன்.

''ராஜாவுக்குத் தெரிந்தால்...?''

''ஆமாம், இந்த மோதிரத்தைத் தான் அவர் ஞாபகம் வைத்துக் கொண்டிருக்கப் போகிறாராக்கும். அவருக்கு எத்தனையோ மோதிரங்கள்! இதைப் பற்றி அவர் நினைக்கக் கூட மாட்டார்'' என்று கூறிவிட்டான் ஹாஸன்.

அன்று முதல், தினசரி வீட்டுக்கு வரும் போது அரண்மனையிலிருந்து ஏதாவது ஒரு விலை உயர்ந்த பொருளை அவன் எடுக்காமல் வர மாட்டான். பாத்திமாவும், ''இன்று என்ன கொண்டுவரப் போகிறாரோ!'' என்று ஆவலுடன் எதிர்பார்ப்பாள்.

பழமொழிப் புதிர் – விடைகள்

புதிர் — 7 அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்

புதிர் — 8 கழுதை கெட்டால் குட்டிச் சுவர்.

இப்படியே இந்தத் திருட்டு வேலை பல நாள் நடந்து வந்தது. ஹாஸனும் தந்திரமாக இதைச் செய்து வந்தான்.

ஒருநாள் ஹாஸன் தன் மனைவியிடம், ''பாத்திமா, இந்த நகைகளை நாம் விற்றுப் பணமாக்கி விட வேண்டும். ஆகையால், நான் இவைகளை ஒரு மூட்டை கட்டி எடுத்துக்கொண்டு வெகு தூரத்திலுள்ள ஒரு பட்டணத்திற்குப் போகிறேன்'' என்றான்.

''வேண்டாம். வெளியூர் போனால் பணச் செலவு! உள்ளூரிலேயே நான் கொஞ்சம் கொஞ்சமாக விற்று விடுகிறேன். யாராவது கேட்டால் உறவினர் கொடுத்ததாகக் கூறிவிடலாம்'' என்றாள் பாத்திமா.

''ஆமாம். நீ சொல்வது சரி'' என்றான் ஹாஸன்.

மறுநாள் காலை நேரம். பாத்திமா தங்கக் காப்பு ஒன்றை எடுத்துக் கொண்டு கடை வீதிக்குச் சென்றாள். அங்கு அவள் அதை விற்கப் போகும் சமயத்தில், அரண்மனைச் சேவகன் ஒருவன் பார்த்துவிட்டான்! உடனே, அவன் அருகிலே வந்து காப்பை வாங்கிப் பார்த்தான். அதில் அரண்மனை முத்திரை இருந்தது. அந்த இடத்திலேயே பாத்திமா கைது செய்யப்பட்டாள்.

அவளை அடித்து உதைத்துக் கேட்டார்கள். அவள் உண்மையைக் கூறி விட்டாள். அரண்மனையில் வேலை பார்க்கும் ஹாஸன்தான் இதற்குக் காரணம் என்பது தெரிந்தது. உடனே ஹாஸனையும் கைது செய்தார்கள். அவர்களுடைய வீட்டைச் சோதனை செய்தார்கள். அரண்மனைச் சாமான்கள் அங்கே ஏராளமாக இருந்தன!

உடனே, அங்கிருந்த பொருள்கள் எல்லாவற்றையும் சேவகர்கள் எடுத்துக் கொண்டார்கள். ஹாஸனையும், பாத்திமாவையும் அரசன் முன் கொண்டு வந்து நிறுத்தினார்கள்.

இதற்குள், இந்தச் செய்தி ஊரெங்கும் பரவி விட்டது. கடைக்காரர்களும், பாத்திமாவின் உறவினர்களும் ஆத்திரப்பட்டார்கள். எல்லோரும் உடனே அரண்மனைக்கு ஓடிவந்து நடப்பதைக் கவனித்தார்கள்.

ஹார்ஸனும், பாத்திமாவும் செய்த குற்றத்தை அரசன் தீர விசாரித்தான்.



முடிவில் தீர்ப்புக் கூற ஆரம்பித்தான்.

"நீங்கள் கடைக்காரர்களை ஏமாற்றிப் பொருள் சேர்த்தீர்கள். இது முதல் குற்றம். இதற்காக உங்களுக்கு அதிக மான அபராதம் விதிப்பதோடு, பல ஆண்டுகள் சிறையில் போட வேண்டும். உங்கள் உறவினர்களிடம் பொய் கூறி, பண உதவி பெற்றீர்கள். இது இரண்டாவது குற்றம். இதற்காக உங்களை நன்றாக அடி அடி என்று தோல் உரியும் வரை அடிக்க வேண்டும். அரண்மனைப் பொருள்களைக் கொள்ளை அடித்தீர்கள். இது மூன்றாவது குற்றம். இதற்காக உங்களுக்கு மரண தண்டனை விதிக்க வேண்டும்!"

இதை அரசன் கூறியதுமே ஹாஸனும், பாத்திமாவும் நடுநடுங்கினர்; கண்ணீர் விட்டனர்; அரசன் காலடியில் விழுந்து மன்னிப்புக் கேட்டனர்.

அப்போது அரசன் அவர்களைப் பார்த்து, "ஆனால், ஒரே ஒரு நிபந்தனை. அதன்படி செய்தால், உங்களுக்கு இந்தத் தண்டனைகள் கொடுக்க மாட்டேன். அது என்ன நிபந்தனை தெரியுமா? நீங்கள் மோசம் செய்து சம்பாதித்த இவ்வளவு பொருள்களையும் நீங்களே எடுத்துக் கொண்டு வீடு செல்ல வேண்டும். ஆமாம், இப்போதே உங்கள் இருவர் கழுத்திலும் கட்டி விடச் சொல்கிறேன்" என்றான்.

இதை அரசன் கூறியதும் ஹாஸனுக்கும், பாத்திமாவுக்கும் ஒரே ஆச்சரியமாக இருந்தது. அவர்கள் தங்களுடைய காதுகளை நம்பவில்லை. "நிஜமாகவா!" என்று அவர்கள் மனத்திற்குள்ளே கேட்டுக் கொண்டனர்.

அப்போது, அரசன் மேலும் கூற ஆரம்பித்தான். "இந்த ராஜ்யத்தில் ஆணோ, பெண்ணோ, குழந்தையோ — யாராக இருந்தாலும் சரி; அவர்கள் இந்த இருவரிடமிருந்தும் ஒரு காசு கூட வாங்கக் கூடாது. அப்படி யாராவது வாங்கினால், அவர்களுக்கு நிச்சயம் தூக்குத் தண்டனைதான் கிடைக்கும். இது நம் உத்தரவு" என்றான்.

ஹாஸனுக்கும், பாத்திமாவுக்கும் அளவில்லாத மகிழ்ச்சி. "அரசர் நமக்கு எல்லாவற்றையும் திருப்பிக் கொடுத்து விட்டார். அத்துடன் நம்மிடமிருந்து எவரும் ஒரு காசு கூட வாங்கக்கூடாது என்றும் கடுமையான உத்தரவு போட்டிருக்கிறார். அடடா, அவர் எவ்வளவு நல்ல அரசர்! நம்முடைய பணத்திற்கு இனி எவனும் ஆசைப்பட மாட்டான். கொள்ளைக்காரர்களைப் பற்றிய கவலையே இல்லை!" என்று எண்ணி எண்ணி மகிழ்ந்தனர்.


அன்று முதல், அவர்கள் வீட்டு வாசலில் அரண்மனைச் சேவகர்கள் காவல் புரிந்தனர். அவர்கள் போகும் இடத்திற்கெல்லாம் சேவகர்களும் கூடவே சென்றனர்.

இதனால் அவர்களை நெருங்குவதற்குக் கூடப் பொது மக்கள் அஞ்சினர். கடையில் சென்று அவர்கள் விலைக்கு ஏதாவது சாமான் கேட்டால், கடைக்காரர்கள், "அடேயப்பா! நாங்கள் தர மாட்டோம். உங்கள் பணத்தை வாங்கினால் எங்கள் உயிருக்கு ஆபத்து! போய் வாருங்கள்" என்று கூறினர்.,

இப்படியே அவர்கள் எதை வாங்கப் போனாலும் கிடைப்பதில்லை. நாள் ஆக ஆக அவர்கள் மிகவும் கஷ்டப்பட்டார்கள். பணத்தைக் கொடுக்கத் தயாராயிருந்தும் சாப்பிட ஆகாரம் கிடைக்கவில்லை; உடுக்க உடை கிடைக்கவில்லை; எப்படி வாழ்க்கை நடத்துவது? சிறிது காலம் பச்சைக் காய்களையும் கிழங்குகளையும் சாப்பிட்டு வந்தார்கள். எவ்வளவு நாட்கள்தான் இப்படியே காலம் தள்ள முடியும்? 'பணமிருந்தும், பரதேசியைக் காட்டிலும் கேடு கெட்ட நிலையில் வாழ வேண்டியிருக்கிறதே!" என்ற உணர்ச்சி அப்போதுதான் அவர்களுக்குத் தோன்றியது. இப்படியே இருந்தால், சீக்கிரம் செத்துச் சுடுகாடு சேர வேண்டியதுதான் என்பதை அறிந்தார்கள்.

கடைசியாக அவர்கள் தங்களிடமிருந்த பொருள்களையெல்லாம் இரண்டு மூட்டைகளாகக் கட்டினார்கள். ஆளுக்கு ஒன்றாக எடுத்துக் கொண்டு அரண்மனையை நோக்கி நடந்தார்கள். அரசனின் காலடியில் போய் விழுந்தார்கள்.





கழுதைப் படகு

ஆடி அசைந்து நிம்மதியாகச் செல்லும் இந்தப் படகை இழுத்துச் செல்பவர் திருவாளர் கோவேறு கழுதையார் அவர்கள்தான்! சாலையிலே அவர் நடக்க நடக்க, ஆற்றிலே அவர் பின்னாலேயே படகும் நகர்கிறது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் துவக்கத்தில், அமெரிக்காவின் மேற்கத்திய மாநிலங்களிலிருந்து, கிழக்கத்திய நகரங்களுக்கு மூலப்பொருட்களைக் கொண்டு செல்வதற்கு இதுபோன்ற கழுதைப் படகுகளைத்தான் பயன்படுத்தினார்கள்.

இப்போதும், சுற்றுலாப் பயணிகளைக் கவருவதற்காக, வாஷிங்டன் அருகில் ஒஹையோ கால்வாயில் இந்தக் கழுதைப்படகை உலாவ விட்டுள்ளனர்.

“அரசே! இந்தப் பொருள்களையெல்லாம் யாராவது எடுத்துக் கொள்ளட்டும். எங்களுக்கு இந்தப் பொருட்களில் எதுவுமே வேண்டாம். எங்களுக்கு ஏதாவது வேலை கொடுங்கள். நியாயமாக உழைத்து, நியாயமாகச் சம்பாதித்து எல்லோரையும் போல் உண்டு, உடுத்து அமைதியாக வாழ்கின்றோம்” என்று கெஞ்சிக் கேட்டனர்.


அரசன் உடனே சேவகர்களை அழைத்தான். “இந்த இரண்டு மூட்டைகளையும் எடுத்துச் செல்லுங்கள். இவர்களிடம் ஏமாந்த கடைக்காரர்களிடம் ஒரு மூட்டையையும், உறவினர்களிடம் மற்றொரு மூட்டையையும் கொடுத்துவிடுங்கள்” என்று உத்தரவிட்டான்.

பிறகு ஹாஸனையும் பாத்திமாவையும் பார்த்து, “இப்பொழுதாவது பணத்தின் மகிமை தெரிகிறதா? பணம் என்பது ஒரு சின்னம்தான். அதை எவ்வளவுக்கு எவ்வளவு நல்ல வழிகளில் உபயோகப்படுத்துகிறோமோ, அவ்வளவுக்கு அவ்வளவு அதற்கு மகிமை உண்டு; நமக்கும் மகிழ்ச்சி உண்டு. பெட்டியிலோ, அல்லது பையிலோ உண்ணாமல், உடுத்தாமல் சேர்த்து வைத்திருந்தால் அதற்கும் மகிமை கிடையாது; நமக்கும் மகிழ்ச்சி கிடையாது. இப்போதாவது இதைத் தெரிந்து கொள்ளுங்கள்” என்றான்.

“ஆம், அரசே, ஆம். இப்பொழுது நன்றாகத் தெரிந்து கொண்டோம்” என்றனர் ஒரே குரலில் ஹாஸனும் பாத்திமாவும்.

— குழந்தைப் புத்தக நிலையம் (சென்னை — 40) வெளியிட்டுள்ள ‘வேட்டை நாய்’ என்ற புத்தகத்திலிருந்து.

நாய் செய்த வேலை!



மாலா –

உருவகக் கதைகள்

நாகரத்தினம்

ஏன் பிறந்தோம்?



கழுதைகள் ஒன்று கூடின.

"நம்மை ஏன் இந்த ஆண்டவன் இப்படிப் படைத்தான்? இறைவனிடமே சென்று முறையிடுவோம்" என்று கூடிப் பேசி முடிவெடுத்தன.

இந்த மனிதர்களுக்கு நாம் ஏதும் தீமைகள் செய்யவில்லையே! பின் ஏன் நம்மை வெறுக்கிறார்கள்?

நாம் அழகற்றவை என்பதாலா?

கரிய நிறத்துக் குயிலுக்குக் கூட குரல் வளம் தந்த இறைவன்... நமக்குக் குரலைக் கூடச் சரியாகப் படைக்கவில்லை.

எதற்காக நம்மைப் படைத்தான்?

இறைவனிடமே போய்க் கேட்டிட வேண்டியதுதான்.

முடிவு செய்த கழுதைகள் வெகு தூரம் நடந்து சென்றன.

வழியில் கழுதைகளைப் பார்த்த இரு குதிரைகள் பேசிக் கொண்டன.

"நல்ல வேளை.. நாம் இப்படிக் கழுதைகளாகப் பிறக்கவில்லை. அதற்காக சந்தோஷப்பட வேண்டும்."

இன்னும் சற்றுத் தொலைவில்...

இரண்டு காக்கைகள் ஒன்றுக்கொன்று கரைந்து கொண்டன.

"ஆண்டவனுக்கு நன்றி சொல்ல வேண்டும். நாம் கறுப்பாகப் பிறந்தாலும், இப்படி அசிங்கமாக, கழுதையாகப் பிறக்கவில்லை."

"ஆமாம். ஆமாம் நினைத்தால் மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறது" மறுமொழி சொன்னது மற்றொரு காக்கை.

கழுதைகள் இன்னும் சற்றுத் தொலைவில் நடந்து கொண்டிருந்த போது...

இரு சிறுவர்கள் உரையாடினர்.

"அதோ பாரடா கழுதைகள்.... கல் எடுத்து அடிப்போமா?"

"வேண்டாம். பாவம் கழுதைகள். நீ இப்போ கல்லால் அடித்தால் அடுத்த பிறவியில் கழுதையாகப் பிறக்கணும்."

"அய்யோ! வேண்டாம். இப்படி கழுதையாய்ப் பிறப்பதை விட, மனிதனாகப் பிறந்ததற்காக மகிழ்ச்சி அடையணும்."

கழுதைகள் அனைத்தையும் கேட்டவாறு நடந்தன.

அதில் ஒரு கழுதை சொன்னது, "நாம் ஏன் பிறந்தோம்? என்று இறைவனிடம் போய்க் கேட்க வேண்டாம். எனக்கு உண்மை தெரிந்துவிட்டது."

"என்ன உண்மை?" என்று புரியாமல் கேட்டது மற்றொரு கழுதை.

"காக்கை, குதிரை, மனிதர்கள் பேச்சை எல்லாம் நீ கேட்கவில்லையா? நம்மைப் பார்த்து, அவர்கள் தம்மை நினைத்து மகிழ்ச்சி அடைந்தார்களே. நீ கவனிக்கவில்லையா? நாம் எப்படி இருந்தாலும், நம்மைப் பார்த்து மற்ற

வர்கள் ஏதோ ஒரு விதத்தில் மகிழ்ச்சி அடைகிறார்களே.. அது போதும்...''

''ஆமாம். ஆமாம். அதற்காகத் தான் நாம் பிறந்தோம் என்று நினைப்போம்'' என்றவாறு திரும்பின கழுதைகள்.



தாழ்வு இல்லை

குளம்.

கரையில் தவளை ஒன்று குளத்து நீரையே நோக்கிக் கொண்டிருந்தது. அலை ஏதுமில்லாமல் அமைதியான சோகத்தில் இருந்தது நீர்.

''ஏன் இப்படி வருத்தமுடன் இருக்கிறாய்?'' தண்ணீரைப் பார்த்துத் தவளை கேட்டது.

''எல்லாம் என்னை நினைத்துதான்'' என்றது நீர்.

''அப்படி என்ன நினைத்தாய்?''

''பின்னே என்னவாம்? எனக்கென்று ஒரு நிலை இல்லை. நிறமில்லை. காவிரியில் ஓடினால் புனிதம். கழிவில் ஓடினால் சாக்கடை. பாலோடு சேர்ந்தால் பால்... இப்படி மாறி, மாறி என் 'ஆவியே' போகுது பார்'' என்று புலம்பத் தொடங்கியது தண்ணீர்.

''இதற்குப் போய் வருந்துகின்றாயே! என்னையும்தான் இடத்திற்குத்தகுந்த மாதிரி வாழும் உயிர் என்கிறார்கள். நிலத்திலும் வாழ்வேன். நீரிலும் வாழ்வேன். உன் பெருமை உனக்குத் தெரியாது'' என்றது ஆறுதலாக தவளை.

''அப்படி என்ன பெருமையாம்?'' ஏதும் புரியாமல் கேட்டது தண்ணீர்.

''நீராகி பூமிக்கு அடியிலும் வாழ்கிறாய். ஆவியாகி வானத்தையும் தொட்டுத் தவழ்கிறாய். பனிக்கட்டியாகி... மலைகளில் படுத்துறங்குகின்றாய்.. இப்படி சகல கலா வல்லமை உனக்குத்தான் உண்டு'' என்று நீரின் பெருமையை எடுத்துரைத்தது தவளை.

நினைத்துப்பார்த்து ஆறுதல்கொண்டது நீர். உண்மைதான். இயற்கையில் எவரும் தாழ்ந்தவர் அல்ல.

குறிலும் நெடிலும்

சன்னியாசி இருப்பது மடம்
சமையல் அறையில் மாடம்.

சுவரில் தொங்குது படம்
கற்றுத் தெளிவது பாடம்.



கையில் அணிவது வளை
மீனில் ஒருவகை வாளை.

குன்றின் மறுபெயர் மலை.
குளிர்ந்த நேரம் மாலை.

குடிநீர் உள்ளது குளம்.
குப்பைகள் சேர்வது கூளம்.

விரலில் உள்ளது நகம்
விஷத்துடன் இருப்பது நாகம்.


உடலின் உறுப்பு கரம்
உறைப்பாய் இருப்பது காரம்.

அடர்ந்த காடு வனம்
ஆகாயத்தின் மறுபெயர் வானம்.

— சி. என். சத்தியநாராயணன் (5844),
வளவனூர்.

பிரார்த்தனை நேரம்

கமலவேலன்



பொழுது போகாமல் மாடிக்கும், தோட்டத்திற்குமாக உலா வந்து கொண்டிருந்தனர் கீதாவும், சிவராமனும்.

காலை டிபனுக்குப் பிறகு இரண்டு பேரும் ஒரு மணி நேரம் 'செஸ்' ஆடினார்கள். பிறகு ஒரு மணி நேரம் 'கேரம்' ஆடினார்கள். புத்தகம் படித்தார்கள்; டி. வி. பார்த்தார்கள். பொழுது நகர்வதாய்த் தெரியவில்லை. அவ்வளவு பெரிய பங்களாவில் இருவரும் தனியாக இருப்பது அதுவே முதல் தடவை.

துணையாக சமையல்காரர் மணியும், வாசலில் கூர்க்காவும் இருந்தனர்.

அவர்கள் அப்பா ரகுநாதனும், அம்மா கஸ்தூரியும் அவசர வேலையாகப் பக்கத்து ஊருக்குக் காரில் சென்றுள்ளார்கள். டிரைவர் ஊரில் இல்லாததால் ரகுநாதனே காரை எடுத்துச் சென்றுள்ளார்.

"மணி... குழந்தைகள் கேட்கறதை சமைச்சுப் போடு. எப்படியும் நாங்க இருட்டறதுக்குள்ளே வந்துடுவோம்," என்று மணியிடம் அம்மா சொல்லிவிட்டுச் சென்றிருந்தார்கள்.

"கீதா... சிவா... சாப்பாடு தயார். ரெண்டு பேரும் சாப்பிட வாங்க." சமையல்காரர் மணி குஷியாய்க் குரல் கொடுத்தார்.

மணி ஐந்து ஆண்டுகளாக அங்கு சமையல் வேலை செய்து வருபவர். வாட்ட சாட்டமான உடம்பு. சைவ உணவு வகை எல்லாமும் அவருக்கு அத்துப்படி. தனிக்கட்டை. எனவே, அவர்கள் வீட்டோடு வாசம்.

"இதோ வர்றோம், மணி மாமா..." கீதாவும், சிவாவும் குதித்துக் கொண்டு வந்தார்கள். கீதா ஒன்பதாம் வகுப்பு; சிவா பத்தாம் வகுப்பு.

கையலம்ப அவர்கள் புறக்கடைப் பக்கம் சென்றார்கள்.

"மணி அண்ணே, உங்களைப் பார்க்க ஊர்லேயிருந்து யாரோ ஒரு பெரியவர் வந்திருக்காரு," கூர்க்கா உள்ளே வந்து கூப்பிட்டான்.

"பெரியவரா? பேரு என்ன?" மணி வியப்புடன் கேட்டார்.

"பேரு விசாரிக்கலே... 'கேட்'டுக்கு வெளியே நிக்கறாரு. நீங்களே போய் விசாரிச்சுப் பேசிட்டு வாங்க..."

"சரி... பார்த்துட்டு வர்றேன்..." மணி வேகமாக வாசலுக்கு விரைந்தார்.

ஆவி பறக்கும் சாப்பாட்டை ஆவலோடு பார்த்தான் கூர்க்கா. ஒவ்வொரு பதார்த்தமாக எடுத்துப் பார்த்தான், வைத்தான்.

கையலம்பச் சென்ற கீதாவும், சிவாவும் உள்ளே வந்தனர்.

"என்ன... குழந்தைங்களா... நீங்க சாப்பிடுங்க... மணி அண்ணே ஒரு நொடியில வந்துடுவாரு..." என்று கூர்க்கா சொன்னான்.

"நாங்க சாப்பிடறோம். நீங்க இப்படி 'பூட்ஸ்' காலோட சாப்பிடற இடத்துல நடக்கக் கூடாது. அப்பா பார்த்தால்... திட்டுவாங்க. உடனே நீங்க வாசலுக்குப் போயிடுங்க..." கீதா எச்சரித்தாள்.

"ஆமா... சீக்கிரம் போயி மணி மாமாவை வரச் சொல்லுங்க," சிவாவும் விரட்டினான்.

ரகுநாதன் கோடீஸ்வரர். என்றாலும் பழக்க வழக்கங்கள், பண்பாடுகளில் சிறிதும் வழுவாதவர்.

கூர்க்காவும் சிரித்துக் கொண்டே வாசலுக்குச் சென்று விட்டான்.

மணி மாமா திரும்பி வந்தார்.,

"யார் மாமா... உங்களைப் பார்க்க வந்தது?" கீதாதான் ஆவலாய்க் கேட்டாள்.

"வாசலில் ஒருத்தரையும் காணோம். கூர்க்காவைக் கேட்டால் மழுப்பறான். எனக்கு ஒரே குழப்பமாயிருக்கு" மணி மாமா யோசனையுடன் பதில் சொன்னார்.

"சரி மாமா, எப்போதும் நாங்க அப்பா, அம்மா கூடச் சாப்பிட்டுப் பழக்கம். இன்னிக்கு நீங்க எங்க கூட உட்கார்ந்துசாப்பிடுங்க" சிவாசொன்னான்.

"ஊஹூம். நீங்க சாப்பிட்ட பிறகு, அப்புறமா... நான் சாப்பிட்டுக்கறேன்..."

"அதோ போறானே, கிட்டு! அவன் சுத்த அறுவை கேஸ்டா!"

"டேய்! டேய்! அவனைக் கூப்பிடுடா இந்தக் கட்டையைக் கொஞ்சம் அறுத்துக் கொடுக்கச் சொல்லுவோம்!"



"முடியவே முடியாது. முதலிலே நீங்களும் சாப்பிடணும். கீதாவும், சிவாவும் பிடிவாதம் பிடித்தார்கள்.

"சரி, சாப்பிடுவோம்" மணி மாமா மூவருக்குமாகப் பரிமாறினார். பரிமாறிய வேகத்தில் அவர் சாப்பிடத் துவங்கி விட்டார்.

"மாமா... மாமா... சாப்பிடாதீங்க..." கீதா கூவினாள்.

"ஏம்மா... ஏன்?"

"அப்பாவும், அம்மாவும் பிரார்த்தனை பண்ணாமல் சாப்பிடக் கூடாதுன்னு சொல்லியிருக்காங்களே! அதை மறந்துட்டீங்களே!" சிவா நினைவுபடுத்தினான்.

"எனக்கு... நீங்க பாடற சுலோகம் எல்லாம் தெரியாது. இலை முன்னாலே உட்கார்ந்துட்டா... உடனே சுபளீகரம் பண்ணிடணும். இதுதான் என்னோட பழக்கம். நீங்க ரெண்டு பேரும் பிரார்த்தனை பண்ணிட்டுச் சாப்பிடுங்க," கேலியாகச் சொல்லிக் கொண்டே மணி மாமா டென்னிஸ் பந்து போல் சாதத்தை உருட்டி உருட்டி வாயில் போட்டுக் கொண்டார்!

கீதாவும் சிவாவும் அவர் சாப்பிடுவதை ரசித்துக் கொண்டே இலையின் முன் அமர்ந்து... கண்களை மூடி... பக்தி உணர்வோடு அன்னபூரணித் தேவி மீது வழக்கமாகப் பாடும் பிரார்த்தனைப் பாடலை ஒரே குரலில் கணீரெனப் பாடத்தொடங்கினார்கள்.

மனமுருகப் பாடிப் பணிந்து, பின்னர் கண்விழித்து உணவில் கைவைத்தனர்.

எதிரே அவர்கள் கண்ட காட்சி ரத்தத்தை உறையச் செய்தது!


"மணி... மாமா!" அவர்கள் திடுக்கிட்டுக் கத்தினார்கள்.

அவர்கள் எதிரே மணி மாமா மயக்கமுற்றுக் கீழே தலைதொங்கச் சாய்ந்து கிடந்தார்.

"கூர்க்கா... கூர்க்கா..." குழந்தைகள் இரண்டும் வாசலுக்கு விரைந்தன.

குரல் கேட்டதும் கூர்க்கா திரும்பிப் பார்த்தான்; திகைத்தான். முகத்தில் பீதி படர பங்களாவிற்கு வெளியே ஓடிவிட்டான்!

கீதாவும், சிவாவும் குழம்பி நின்றார்கள்.



அந்த நேரம் வாசலில் கார் வந்து நின்றது. அப்பாவும் அம்மாவும் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னதாகவே வந்து விட்டார்கள். அதுவும் கடவுள் செயல்தான்!

"என்னம்மா கீதா, சிவா... ஏன் இப்படி நடுங்குறீங்க? என்ன நடந்தது?" என்று ரகுநாதன் படபடப்புடன் கேட்டார்.

"அப்பா, மணி மாமா எங்க கூட சாப்பிட உட்கார்ந்தாரு. ஆனா... கொஞ்ச நேரத்திலே பேச்சு மூச்சு இல்லாமல் மயக்கமாகி விழுந்துட்டாரு..." — சிவா விவரித்தான்.

"ஈஸ்வரா... இது என்ன சோதனை! ஆமா, நீங்க ரெண்டு பேரும் சாப்பிடலையா?" அம்மா கலவரத்துடன் கேட்டாள்.

"நாங்களும் சாப்பிட்டிருப்போம். ஆனா, வழக்கமாப் பாடுகிற பிரார்த்தனைப் பாடலைப் பாடிட்டுச் சாப்பிடலாம்னு பாடிக் கொண்டிருந்தோம். அதுக்குள்ளே மணி மாமா சாப்பிட ஆரம்பிச்சுட்டாரு. அவரு மயக்கமானதாலே நாங்க சாப்பிடலே..." சிவா அழுது கொண்டே சொன்னான்.

ரகுநாதனுக்குக் கூர்க்கா மீது சந்தேகம் ஏற்பட்டது. உடனடியாகக் குடும்ப டாக்டருக்கு போன் பண்ணினார். டாக்டர் வந்து மணியைப் பரிசோதித்தார். உணவில் மயக்க மருந்து கலந்து இருப்பதாகக் கூறினார்.

"டாக்டர்... மணி பிழைச்சுப்பானா?" கஸ்தூரி கேட்டாள்.

"கவலைப்படாதீங்க அம்மா. அரை மணி அல்லது ஒரு மணி நேரம் அந்த மயக்கம் இருக்கும். நான் ஒரு இஞ்ஜெக்ஷன் போட்டிருக்கிறேன். மயக்கம் தெளிஞ்சுடும்" என்று டாக்டர் ஆறுதல் கூறினார்.

மெல்ல மெல்ல மயக்கம் தெளிந்து கண்களை விழித்துப் பார்த்தார் மணி. உணர்வு திரும்பியது.

மணியைச் சுற்றி அனைவரும் கவலையுடன் நின்று கொண்டிருந்தார்கள்.

"மணி, சாப்பாட்டிலே மயக்க மருந்து எப்படி வந்தது? இது யார் வேலை?" என்று ரகுநாதன் கோபமாய்க் கேட்டார்.

"ஐயா... நான் உண்ட வீட்டுக்குத் துரோகம் நினைக்கிற ஈனப்பிறவி இல்லேங்க. இது அந்த கூர்க்காவின் சதி வேலையாகத்தான் இருக்கணும். என்னை யாரோ தேடுவதாகச் சொல்லி வாசலுக்கு அனுப்பிவிட்டு... அந்தச் சமயம் சாப்பாட்டிலே மயக்க மருந்தைக் கலந்திருக்கிறான். பிள்ளைங்க மயக்கமானவுடனே, என்னைக் கட்டிப் போட்டுட்டு நகைகளைக் கொள்ளையடிக்கத் திட்டம் போட்டிருக்கான். ஆனால்... பிள்ளைங்களோட பிரார்த்

தனை தான் அவங்களைக் காப்பாத்தியிருக்கு'' மணி நாத்தழுதழுக்கக் கூறினார்.

''பிரார்த்தனையின் பலன் என்றுமே கைமேல் கிடைக்கத் தவறுவதில்லை'' அப்பா கம்பீரமாய்ச் சொன்னார்.

''ஆமாங்க... நான் கூட ஒவ்வொரு வேளை உணவின் போதும் இப்படிப் பாடிக் கொண்டிருக்கிறீங்களேன்னு நினைச்சு எரிச்சல் பட்டதுண்டு. அந்தத் தாய் அன்னபூர்ணேஸ்வரியின் அருள்தான் இன்னிக்கு என் செல்வங்களைக் காப்பாத்தியிருக்கு'' என்று மனம் நெகிழக் கஸ்தூரி கூறினாள்.

''என்னையும் காப்பாத்தியிருக்குன்னு சொல்லுங்க'' மணியும் சேர்ந்து கொண்டார்.

''அப்பா... நாங்க மட்டும் பிரார்த்தனை செய்யாமே மணி மாமா 'கூட சாப்பிட்டிருந்தால்... மூன்று பேருமே மயக்கம் ஆகியிருப்போம். கூர்க்காவும் எல்லாத்தையும் சுருட்டிக்கிட்டு ஓடியிருப்பான்'' என்று சிவா சொன்னான்.

''அசையாத கடவுள் நம்பிக்கை; இடைவிடாத பிரார்த்தனை என்றைக்குமே வீண் போனதாக எந்த யுகத்திலும் வரலாறு கிடையாதே!'' — அப்பா சொன்னார்.

''அதை... நானும் இப்போ நம்பறேன்,'' என்று டாக்டர் சொல்லிவிட்டு விடைபெற்றார்.

குழந்தைகள் அம்மாவைத் தஞ்சம் அடைந்தனர்.

கூர்க்காவைப் பற்றிப் புகார் செய்ய ரகுநாதன் தொலைபேசியை நோக்கிச் சென்றார்.

இரு மொழிகளில் பழமொழிகள்

PARALLEL PROVERBS



அமாவாசைச் சோறு என்றைக்கும் அகப்படுமா?

Christmas comes but once a year.

அரசன் அன்று கொல்வான்; தெய்வம் நின்று கொல்லும்.

God stays long but strikes at last.

அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் விஷம்.

Too much of anything is good for nothing.

ஆழமறியாமல் காலை விடாதே.

Look before you leap.

இக்கரைக்கு அக்கரை பச்சை.

Distant lends enchantment to the view.

உள்ளங்கை நெல்லிக்கனி போல.

As clear as crystal.

ஊரோடு ஒத்து வாழ்.

Do in Rome as Romans do.

எருமை வாங்கும் முன் நெய் விலை பேசாதே. பிள்ளை பெறுமுன் பெயர் வைக்காதே.

Count not your chickens before they are hatched.

மாரியல்லது காரியமில்லை.

No rains, no grains.

ஏற்றமுண்டானால் இரக்கமும் உண்டு.

Every tide has its ebb.

ஐயர் வருகிற வரை அமாவாசை காத்திருக்குமா?

Time and tide wait for none.

கடுகு போன இடம் ஆராய்வர்: பூசணிக்காய் போன இடம் தெரியாது.

Penny-wise and pound foolish.

தான் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கும்.

Man proposes God disposes.

பட்ட காலிலே படும்; கெட்ட குடியே கெடும்.

Misfortunes never come single.

தொகுத்தவர்: ஆர். குருராஜ் (1,444).

— நுதலூர் முத்து



முகம் தேவை

ஒன்பதாம் வகுப்பில் தமிழ்ப் பாடம் நடந்து கொண்டிருந்தது.

இடது கன்னத்தில் கைவைத்தவாறு அமர்ந்து பாடத்தைக் கவனிக்க முயன்று கொண்டிருந்தான் பழனிசாமி.

ஏதோ துன்பத்துக்கு உள்ளாகியிருக்கிறான் என்பதை முகம் காட்டியது.

''பழனிசாமி... என்னப்பா பல் வலியா?''

''ஆமாம் ஐயா. இரண்டு நாட்களாக மிகுந்த தொல்லை கொடுக்கிறது'' என்றான் அவன்.

''அந்த வலியோடும் பள்ளிக்கு வந்திருக்கிறாயே... உன்னுடைய ஆர்வத்தைப் பாராட்டுகிறேன்'' என்றார் ஆசிரியர் தாமோதரன்.

அந்தப் பாராட்டு அவனுக்கு மகிழ்ச்சியைத் தந்தது.

''நேற்று மாலை ஓரிடத்தில் வரிசையில் கால் கடுக்க நின்று கொண்டிருந்தாயே... இந்த வலியோடுதான் அப்படி நின்றாயா?''

எழுந்து நின்ற அவன் இப்போது மௌனம் சாதித்தான்.

நேற்று அவன் அப்படி நின்ற இடம் சினிமாத் தியேட்டர். பல் வலியையும் பொறுத்துக் கொண்டு அந்தப் படத்தைப் பார்த்துவிட்டு வீடு திரும்பினான் அவன்.

அவனை அமருமாறு சொல்லிவிட்டு, ''மாணவர்களே! நீங்கள் எப்படிப் பற்களைத் தூய்மை செய்கிறீர்கள் என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன். நீங்கள் என்ன பயன்படுத்துகிறீர்கள் என்று சொல்லுங்கள்'' என்றார்.

''நான் ஆலம் விழுதால் பல் துலக்குகிறேன்'' என்றான் ஒருவன்.

''ஆலும் வேலும் பல்லுக்குறுதி'' என்று சொல்லியிருக்கிறார்கள். குச்சிகளைப் பயன்படுத்தும்போது ஈறு பாதிக்காதபடிப் பற்களைத் துலக்க வேண்டும்... கவனம் தேவை'' என்றார்.

மூன்று மாணவர்கள் பிரஷ் பயன்படுத்துவதாகவும் இன்னும் சிலர் பற்பொடியால் துலக்குவதாகவும் தெரிவித்தனர். மற்றவர்களை விசாரித்தார்.

''நான் சவுக்குக் குச்சி...''

"நான் பூவரசங்குச்சி."

"நான் காட்டாமணக்குக் குச்சி" என்ற பதில்கள் வந்தன.

"இப்படிக் கண்ட குச்சிகளையெல்லாம் ஒடித்துப் பயன்படுத்தக் கூடாது. பூவரசு போன்ற மதிப்பு மிக்க குச்சிகளை ஒடித்து வீணாக்கக் கூடாது. பல்லுக்கும் சேதம். மரத்துக்கும் இழப்பு..." என்ற அவர், பழனிசாமியின் பக்கம் திரும்பினார்.

"நீ என்ன பயன்படுத்துகிறாய்?"

அவனுக்கு அருகில் இருந்த பையன் முந்திக் கொண்டு விடையளித்தான்.

"அவன் தினசரி செங்கல்லை எடுத்து உடைத்துத் தேய்த்துப் பொடியாக்கி அதனால் பல் விளக்குகிறான் ஐயா!"

"செங்கற்பொடியா?" என்ற அவருடைய முகத்தில் வேதனை திரையிட்டது.

"இயற்கையாக நமக்கு அமைந்த பற்களின் மதிப்பு உங்களுக்குத் தெரியுமா? உணவை வெட்டுவதும், கிழிப்பதும், அரைப்பதும் என்று அவை செய்யும் பணி உங்களுக்குத் தெரியுமா? அந்தப் பற்கள் போனால்...? பல் போனால் சொல் போயிற்று என்பார்களே... பல்வலி வந்தால் நம்மால் எந்தக் கடமையையும் செய்ய முடியாதே..."

அந்தப் பற்களைப் பற்றிக் கொஞ்சமும் கவலைப்படாமல் செங்கற்பொடியையும் கரித்தூளையும் காப்பித் தூளையும் கண்ட குச்சிகளையும் பயன்படுத்தி அவற்றைச் சிதைக்கலாமா?" என்றார் அவர்.

வகுப்பு அமைதியாக இருந்தது.

"பழனிசாமி! நீ ஆர்வத்தோடு ஓடி சினிமா பார்த்தாயே... அதற்குக் கொடுத்த ஒன்றரை ரூபாயை ஒரு பற்பொடிப் பொட்டலம் வாங்கப் பயன்படுத்தியிருக்கலாமே... தினசரி செங்கல் பொடியில் பல் துலக்கும் உனக்கு அதை மாற்றிக் கொள்ள ஏன் எண்ணம் வரவில்லை? உன் பற்களை விடச் சினிமா உனக்குப் பெரிதாகப் போய்விட்டது.

நீ மட்டுமல்ல... இந்த வகுப்பில் இன்னும் சிலரைப் பார்க்கிறேன், தலைக்கு எண்ணெய் இல்லை, அணியும் உடை தூய்மையாக இல்லை... எண்ணெய் வாங்கலாம்... சலவை சோப்பு வாங்கலாம்... அவற்றைப் பற்றிக் கவலைப்படாமல் சினிமாவுக்கு ஓடுகிறார்கள்.

உங்களைச் சினிமாவே பார்க்க வேண்டாம் என்று சொல்லவில்லை. நல்ல படம் வந்தால் பாருங்கள். சுவர் இருந்தால்தானே சித்திரம்வரைய முடியும்? நம் உடம்பு என்ற சுவரை நன்றாகக் காத்துக் கொள்வோம். நம் அடிப்படைத் தேவைகளை முதலில் நிறைவு செய்து கொள்வோம்... சினிமா போன்றபொழுதுபோக்கெல்லாம் அதற்கப்புறம்தான்..." என்றார் தாமோதரன்.

எது முதல் தேவை என்பதை உணர்ந்து விட்டால் வறுமையிலும் செம்மையாக வாழலாம் என்பதை மாணவர்கள் நன்றாகப் புரிந்துகொண்டார்கள்.


வகுப்பு முடிந்ததும் அவர் பழனிசாமியை அழைத்தார்.

"ஐயா இனிமேல்..." என்ற அவனுடைய முதுகில் தட்டிக் கொடுத்து,

"நீ இனிமேல் பற்பொடியாலோ பிரஷ்ஷாலோதான் பல் துலக்கு வாய்... எனக்குத் தெரியும். இன்று மாலை பள்ளி முடிந்ததும் என்னோடு வா... எனக்குத் தெரிந்த பல் மருத்துவரிடம் காண்பித்துத் தேவையான சிகிச்சைக்கு உதவுகிறேன்" என்றார்.

அவருடைய அக்கறையையும் பாசத்தையும் கண்டு நெகிழ்ந்து போனான் பழனிசாமி.


அந்த அன்பு மரம் எல்லோருக்கும் நிழல் தந்து கொண்டிருந்தது.



பிருந்தாவனக் கவியரங்கம்

மின் விசிறி

எங்கள் வீட்டு மின்விசிறி
  எளிதாய் ஓடும் மின்விசிறி!
ஏற்றத் தாழ்வு இல்லாமல்
  எல்லோருக்கும் சரிசமமாய்
காற்று வழங்கும் மின்விசிறி!
வைத்த வேகம் தவறாமல் — காற்றை
  வாரி வழங்கும் மின்விசிறி!
ரிப்பேர் அதிகம் ஆகாமல்
  நீண்டு உழைக்கும் மின்விசிறி!



சத்தம் எதுவும் கேட்காமல்
  சாதுவாய் ஓடும் மின்விசிறி!
சிறிதே கரண்டைச் சாப்பிட்டுச்
  சீரிய தொண்டு புரிந்திடுதே!

— ம. அருள் (2167), கதிராமங்கலம்.



தேரின் மேலே யார்?

பார்! பார்! பார்!
பாப்பா வுக்கு வாக்கு ரொம்ப
நேர் நேர் நேர்.

ஏர், ஏர், ஏர்.
ஏர் இழுக்கும் மாட்டுக் கொம்பு
கூர்! கூர்! கூர்!

ஊர், ஊர், ஊர்.
ஊரில் உள்ள கோயி லிலே
தேர்! தேர்! தேர்!

தேர், தேர், தேர்.
தேரின் மேலே இருக்கும் சாமி
யார்? யார்? யார்?

யார்? யார்? யார்?
யானை போல முகத்துப் 'பிள்ளை
யார்' யார்? யார்?

— கோ. நடேஷ்கண்ணன் (15,255),
கீழ்வேளூர்.,

கன்னியா குமரி

மூன்றுகடல் ஓடிவந்து
  சங்கமிக்குதே — இங்கு
மூன்றுநிற மணலும்ஒன்றாய்க்
  கரையில் சேருதே!

சந்திரனும் சூரியனும்
  வந்து தோன்றுதே — எழில்
சுந்தரமாய்த் தேவியவள்
  வடிவம் காணுதே!



வங்க மெனும் கடலில் சுவாமி
கோவில் தெரியுதே — கடற்
சங்குகளும் சிப்பிகளும்
விலையாய்ப் போகுதே!

சாந்தமுடன் சத்தியத்தின்
இல்லம் காணுதே — அதில்
காந்தி எனும் தந்தையவர்
உருவம் தோணுதே!

— எஸ். கனகராஜ் (1174),
கவற்குளம் தேர்விளை.

இந்தியா ஒன்றே!

இந்திய நாட்டுக் கொடியினையே
என்றும் நாங்கள் காத்திடுவோம்!
சங்கடம் அதற்கு நேராது;
சத்தியம் செய்து சொல்லுகிறோம்!

எத்தனை மொழிகள் இருந்தாலும்,
எத்தனை மதங்கள் இருந்தாலும்,
இந்திய தேசம் ஒன்றென்போம்
இணைந்தே வாழ்வது நன்றென்போம்.



உயரமான பனிமலையாம்
உலகில் வெள்ளி மலையென்பார்.
இமய மலைதான் அரணாக
எதிரிகள் தம்மைத் தடுத்திடுமாம்.

கங்கா யமுனா காவேரி
கலகல வென்று ஓடுதே!
சிந்தனை செய்ய வாராயோ!
சிறப்பை உயர்த்த வாராயோ!

பாரதத் தாயின் திருவடியைப்
பணிந்தே என்றும் வாழ்ந்திடுவோம்
இந்திய நாடு பெருமையுற
இயன்றதை யெல்லாம் செய்திடுவோம்.

— பெ. ஜெய்கணேஷ் (13,791),
மதுரை — 10.



ஆனந்தம்

மின்னல் ஒன்று வான் மழைக்கு
வருகை சொன்னது!
கன்னங்கரு மேகங்களும்
காட்சி தந்தது!

சடசடென்று மேகமுந்தான்
மழையைப் பொழிந்தது!
சலசலென்று ஊர் முழுதும்
சகதி ஆனது!

ஓடும் நீரில் காகிதத்தில்
ஓடம் விட்டோமே!
ஆடிப் பாடி ஆனந்தத்தில்
ஆழ்ந்து விட்டோமே!

— பி. வெற்றிச்செல்வம் (13,033),
திருவாரூர்.

பாலன் பிரகலாதனுக்கு அருளிய







பிரும்மாவின் குமாரரான சநந்தனர் அமைதியாக...
தாமதம் செய்யாதே! வேணுமானால் உங்களில் ஒருவர் போய் நாராயணனிடம் விசாரித்து வாருங்கள்.
சரிதான் போடா!
அவரைப் பார்க்கமுடியாதுன்னா முடியாதுதான்.
சநந்தனருக்குக் கோபம் வர, சபித்து விட்டார்...
மூடர்களே! உங்களுக்குக் கர்வம் தலைக்கேறிவிட்டது. தேவருலகில் உங்களுக்கு இடமில்லை. பூமியில் பிறப்பீர்களாக!
துவாரபாலகர் விஷ்ணுவிடம் ஓடோடிச் சென்று...
பகவானே! எங்களை மன்னியுங்கள்!
நடந்தவற்றை உணர்ந்த நாராயணன்...
சநந்தனர் தந்த சாபத்தை நீக்க முடியாது. ஆனால் தண்டனையைக் குறைக்க முடியும்.
பிரபோ! எப்படியோ நாங்கள் மீண்டும் துவாரபாலகர் பதவியை அடைய அருளுங்கள்.



அதன்படி முதல் ஜன்மாவில் அண்ணன் இரண்யகசிபுவாகவும் தம்பி இரண்யாக்ஷனாகவும் பிறந்தனர்.
உலகில் நம்மை வெல்ல யாருமில்லை!
மூன்று ஜன்மங்கள் அசுரர்களாகப் பூமியில் பிறந்து, என்னைப் பகைத்துக் கொண்டு என்னால் அழிக்கப் படுவீர்கள். அதன்பின் மறுபடி வைகுண்ட பதவி பெறுவீர்கள்.
அடுத்த இரு ஜன்மங்களில் இவர்கள் இராவணன் - கும்பகர்ணனாகவும் சிசுபாலன் - தந்தவக்கிரனாகவும் பிறந்தனர்.
முதல் ஜன்மாவில் தம்பி இரண்யாக்ஷன், இந்திராதி தேவர்களைக் கூட வதைத்தான்...
பிரபோ! நாராயணா! இவன் அட்டகாசம் சகிக்க முடிய வில்லையே...
நாராயணனை அழைத்து என்ன பிரயோசனம்? எல்லாரும் இரண்யாய நம: என்று பிரார்த்தனை பண்ணுங்கள்! ஹ-ஹ-ஹா!




ஒரு சமயம் இரண்யாக்ஷன் பூமியையே பாய்போல் சுருட்டிக் கடலுக்கடியில் ஒளித்து வைத்து விட்டான்!
பிரபோ! இரண்யாக்ஷனை வதைக்க வேண்டிய வேளை வந்து விட்டது!
இதோ புறப்படுகிறேன்.
நாராயணன் வெண்மையான வராக வடிவமெடுத்து இரண்யாக்ஷனுடன் போரிட்டார்.
ஹும், பன்றிக்கா பயப்படுவேன்?
வராகம், இரண்யாக்ஷன் மீது பாய்ந்து, கொம்பினால் அவன் மார்பைப் பிளந்தது.
ஹா! ஐயோ! அண்ணா!
நாராயணன் கடலுக்கடியிலிருந்து பூமியை மீட்டு வந்தார். முன்போலவே நிலைநிறுத்தினார்.
இரண்யாக்ஷன் கொல்லப்பட்டதில் வருந்திய இரண்யகசிபு.... வைராக்கியத்துடன்...
பிரமனை நோக்கித் தவமிருந்து எங்கும், எவராலும் எனக்கு மரணம் ஏற்படாதவாறு வரம் பெறுவேன்!


மூவுலகங்களையும் ஆளவும் சாகா வரம் பெறவும் ஹிரண்ய கசிபு கடும் தவம் செய்தான்.
மந்திரமலையில் இரண்யகசிபு கடும் தவம் செய்துகொண்டிருந்தபோது இந்திரன் அவனுடைய அந்தப்புரத்தில் நுழைந்து...
கருவுற்றிருக்கும் அரசி கயாதுவைக் கட்டிலோடு தூக்கிச் சென்றுவிடுகிறேன்!
ஆகாயத்தில்...
ஐயோ! என்னைக் காப்பாரில்லையா?
நாரதர் எதிர்ப்பட்டு...
இந்திரா! பிறன் மனைவியைத் தூக்கிச் செல்வது சரியல்ல...
ஸ்வாமி! இவளுக்குப் பிள்ளை பிறந்தால் அவன் எங்களை மேலும் கொடுமைப்படுத்துவான். எனவேதான்....
இந்திரா! கயாதுவின் வயிற்றில் இருக்கும் குழந்தை பரம பக்தனாய் விளங்குவான். கயாதுவை விட்டுவிடு!


முனிவரே! என் குற்றத்தை மன்னியுங்கள். இவளை உங்கள் ஆசிரமத்திலேயே விட்டுச் செல்கிறேன்.
ஆசிரமத்தில் நாரதருக்குப் பணிவிடை செய்து வந்தாள் கயாது. அவள் துயரைப் போக்க நாரதர் உபதேசித்து வந்தார்.
கதை கேட்டபடியே ஒரு நாள் கயாது தூங்கிவிட...
ஹரியின் திருவடிகளைச் சரணமடைந்தவர்கள் பாக்கியசாலிகள்.
உம்!
அட, அரசிதான் தூங்கி விட்டாளே! என் வார்த்தைகளுக்கு 'உம்' கொட்டுவது அவள் வயிற்றில் இருக்கும் சிசுதான்!
நாரதர் முன்னிலும் ஆர்வமாக ஞானயோகம், பக்தியோகம் இரண்டையுமே கயாதுவுக்கு எடுத்துச் சொல்லி வந்தார்.
இரண்யகசிபுவின் குழந்தை பிறப்பதற்கு முன்பே பரமபக்தனாகி விட்டான்!


இரண்யகசிபுவின் தவம் தொடர்ந்தது... பிரும்மா, யோகத்தில் இருந்தவன் மீது கமண்டல நீரைத் தெளித்து....
வேண்டிய வரத்தைக் கேள்!
நீங்கள் படைத்த யாரும் என்னைக் கொல்லக்கூடாது. வீட்டுக்கு உள்ளேயோ வெளியிலோ, இரவிலோ பகலிலோ, என் உயிர் பிரியக்கூடாது. மனிதனாலோ மிருகத்தாலோ எனக்கு மரணம் ஏற்படக் கூடாது...
... ஆகாயத்திலோ பூமியிலோ நான் இறக்கக்கூடாது. உயிருள்ள பொருளாலோ உயிரற்ற ஆயுதத்தாலோ நான் தாக்கப்பட்டு, சாகக் கூடாது! ...
அப்படியே ஆகட்டும்!
ஹிரண்யகசிபு வரம் பெற்றதும் அவன் வீரர்களான அரக்கர்கள் துணிவு மிகக் கொண்டு வெறி பிடித்து அலைந்தார்கள்....
யாகத்தை நிறுத்து; இல்லையென்றால் எல்லாரையும் கொன்று விடுவேன்...
என்ன தவம் வேண்டிக் கிடக்கிறது, வெட்டி வீழ்த்து! .....


இரண்யகசிபு நாரதர் ஆசிரமத்துக்கு வந்தான்.
நடந்த விவரம் அறிந்தேன். என் மனைவியையும் மகனையும் ஆதரித்ததற்கு நன்றி.
இந்திரனுடைய மாளிகையில் வாழ்ந்தான் இரண்யகசிபு. தேவர்கள் கைகட்டி நின்றனர்.
நாரதரே! நாராயணன் எனக்குப் பயந்து ஓடி ஒளிந்து கொண்டான்போலும்! அவனை என்ன தேடியும் கண்டு பிடிக்க முடியவில்லை!
ஹரியின் உள்ளத்தை யார்தான் அறிய முடியும்?
போகட்டும், நீங்களும் மற்ற தேவ, கந்தர்வர்களும் இனி என்னைத்தான் துதிக்க வேண்டும்; நாராயணனை அல்ல....
பூவுலகிலும் தேவருலகிலும் 'ஹிரண்யாய நம:' என்ற சப்தமே நிறைந்தது...
ஹிரண்யாய நம:
ஹிரண்யாய நம:
ஹிரண்யாய நம:



இரண்யனுக்கு சமுத்திர ராஜனும் மரியாதை செய்தான்...
நவரத்தினங்களையும் கொண்டு வந்திருக்கிறேன்....
அடிக்கடி கொண்டு வா!
பூமாதேவியும் அஞ்சினள்...
உழுபவர் இல்லாமலேயே எல்லா உணவுப் பொருள்களும் விளைய வேண்டும்! புரிந்ததா?
அப்படியே ஆகட்டும்!
பிரகலாதனையும் சேர்த்து இரண்யனுக்கு நான்கு பிள்ளைகள்.
தேவி! பிரகலாதனைக் கல்வி கற்கச் செய்ய வேண்டும்.
அசுரரின் குலகுரு சுக்ராச்சாரியார். அவருக்கு சண்டன் அமர்க்கன் என்று இரு புத்திரர்கள். பிரகலாதன் அவர்களிடம் வந்து...
ஐயா. எனக்குக் கல்வி புகட்ட நீங்கள் அமர்ந்த புட்டிருப்பதாக அறிகிறேன்.. வணங்குகிறேன்.
சண்டனும் அமர்க்கனும் பிரகலாதனுக்கு எல்லா வித்தைகளையும் கற்றுக்கொடுத்தார்கள்.



வேதம் ஓதத் தொடங்கு
முன்னர்....
எங்கே, நான் சொல்வதைத் திரும்பக் கூறு... ஓம்! ஹிரண்யாய நமஹ!
ஓம்! நாராயணாய நமஹ!
அடாடா! அந்தப் பெயரைச் சொல்லாதே! எங்கே கற்றுக் கொண்டாய் அதை?
சகல உலகங்களுக்கும் இறைவன் நாராயணன்தானே!
ம்மூர்த்திகளுக்கும் மேலானவர் உன் தந்தை! முதலில் அவர் பெயரைக் கூறித்தான் துதிக்க வேண்டும். சொல்லு!
ஓம், நமோ நாராயணாய நமஹ!
உபாத்தியாயர்கள் பயந்து போனார்கள்... ஹிரண்யனிடம் சென்று...
பிரபோ! பிரகலாதன் மகா கெட்டிக்காரன். ஆனால் தாங்கள் பெயரைக் கூறி வணங்க மறுக்கிறான்.
தாங்கள் ஜன்ம சத்ருவின் பெயரையே கூறித் துதிக்கிறான்!
ங்கள் சரியாகச் சால்லித் தரவில்லை. றுபடி கற்றுக் காடுங்கள். பிடிவாதம் சய்தால் பிரம்பால் அடியுங்கள்!


அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்று துறைகளையும் கற்றுத் தேர்ந்தான் பிரகலாதன்...
தாய் தந்தையரைக் காண வந்தான்.
வணங்குகிறேன்.
பிரகலாதா! இப்போது உன் அறிவு தெளிந்திருக்கும். சொல்லு... அனைத்திலும் உயர்ந்த விஷயம் எது
அப்போது பிரகலாதன் நவவித பக்தி என்ற பக்தியின் சாரத்தைக் கூறினான்...
ஹரியின் கதையைக் கேட்க வேண்டும்; வாயால் அவரைப் புகழ வேண்டும்; மனத்திலே நினைக்க வேண்டும்; அவருக்கே சேவை செய்ய வேண்டும்...
...ஹரியைப் பூஜிக்க வேண்டும்; ஹரியையே வணங்க வேண்டும்; அவரது தொண்டனாய் இருக்க வேண்டும்; அவரை நண்பனாய் அடைய வேண்டும்; நம்மையே அவருக்கு அர்ப்பணித்து விட வேண்டும்!
ஹிரண்யன் கோபத்தை அடக்கிக் கொண்டு...
நீ குழந்தை. உன் மனத்தை யாரோ கெடுத்திருக்கிறார்கள்.



அப்பா! விதை இல்லாமல் மரம் வளராது. இந்த உலகம் தோன்ற காரணம் நாராயணனே!
கடுங்கோபமடைந்தான் ஹிரண்யன்.
குலப்பகைவன் பெருமை பேசும் இவனை மலையிலிருந்து உருட்டித் தள்ளுங்கள்!
பிரகலாதன் அஞ்சவில்லை...
ஓம், நமோ நாராயணாய!
மலை உச்சியிலிருந்து விழுந்த பிரகலாதனைப் மாதேவி தோன்றி, தாங்கிக் கொண்டாள்.
பிரகலாதனுக்குக் காயம் கூடப் படவில்லை. வியப்பை மீறி, கோபமடைந்த ஹிரண்யன், ஐராவதம் என்ற இந்திரனின் யானையை அழைத்தான்.
பிரகலாதனை மிதித்துத் துவைத்துக் கொன்று போடு!




ஐராவதம் பிரகலாதனைத் தொழுது நின்றது...
இது என்ன அதிசயம்!
பிரகலாதனைப் பெரிய பாறையில் கட்டிக் கடலில் எறிந்தார்கள். பாறை மிதந்தது!
நாராயணா! நாராயணா!
கொழுந்துவிட்டு எரிந்த நெருப்பில் தள்ள...
நாராயணா! நாராயணா!
...தீ நாக்குகள் மலர்க்குவியலாக மாறின...
இதை என்னால் நம்பவே முடியவில்லை!
எல்லாம் நாராயணன் கரு
ஹிரண்யனுக்குக் கோபம் தலைக்கேற...
கயாது! நீ உன் கையால் உன் மகனுக்கு விஷம் கொடு!


யாது மனம் கனிந்தது…
என் கையால் உனக்கு எப்படி விஷம் கொடுப்பேன்?
அம்மா! வருத்தப்படாதே! நாராயணனை நம்பியவர்களுக்கு அமுதமும் விஷமும் ஒன்றே…
தாயின் கரத்திலிருந்து விஷக் கிண்ணத்தைத் தானே கை நீட்டிப் பெற்று அருந்தினான் பிரகலாதன்…
நாராயணா! நாராயணா!
பிரகலாதனுக்கு ஏதொன்றும் நேரவில்லை என்பதை அறிந்த ஹிரண்யன்…
விஷம் அருந்தியும் சாகவில்லையா? அப்படியானால் நானே அவனைக் கொன்று விடுகிறேன்!
கத்தியை உருவிக்கொண்டு வந்த தந்தையைப் பார்த்துக் கலங்காமல் நின்றான் பிரகலாதன்.
அப்பா! என் உயிரை எடுத்துக் கொள்ள நாராயணன் ஒருவனால்தான் முடியும்!
அப்படியானால் அந்த நாராயணன் எங்கே இருக்கிறான்? எனக்குக் காட்டு! அவனை ரொம்ப காலமாகத் தேடிக்கொண்டிருக்கிறேன்!


அவர் இல்லாத இடமில்லை. யோகியர் உள்ளங்களில் வாழ்கிறார். தூணிலும் இருக்கிறார்; துரும்பிலும் இருக்கிறார்! அணுவைக் கூறு போட்டால் அதனுள்ளும் இருக்கிறார்!
ஹூம்! இந்தத் தூணில் இருக்கிறானா?
நிச்சயமாக!
ஹிரண்யனுக்குக் கோபம் பீறிட்டு எழ, தூணைக் கதையால் அறைந்தான்.
தூண் பிளந்தது. நாராயணன் நரசிம்மராய் அவதரித்தார்!
பிரகலாதன் பக்தி பரவசமானான். ஹிரண்யனோ...
அடேய்! நாராயணா! உன்னை எங்கெல்லாம் தேடினேன்! கடைசியில் அகப்பட்டுக் கொண்டாயா?
நமோ நாராயணா!


ஹிரண்யன் நரசிம்மமூர்த்தி மீது பாய்ந்தான்...
அன்று பன்றி உருவில் என் தம்பியைக் கொன்றாய்! இன்று சிங்க வடிவில் வந்திருக்கிறாய்! உன்னைக் கொன்று பழி தீர்த்துக் கொள்வேன்!
ஹிரண்யனை அவன் பெற்றவரத்துக்குப் பங்கமில்லாமல் அழித்தார் நாராயண நரசிம்மர். மனிதனும் மிருகமும் இல்லாத உருவில்; பகலும் இரவும் இல்லாத அந்தி மாலையில்; உள்ளும் புறமும் இல்லாத நிலை வாசல் படியில்; வானமும் பூமியும் இல்லாத தமது மடியில் கிடத்தி...
...ஆயுதம் இல்லாமல், உயிருள்ளதும் உயிரற்றதுமான தமது நகங்களால் கீறிக் கொன்றார்.
உச்ச நிலையை அடைந்த நரசிம்மரின் கோபம் தணியாததால் தேவர்களும் லக்ஷ்மி தேவியும் நடுங்கினர்.
பிரகலாதா! நீதான் அவரைச் சாந்தப்படுத்த வேண்டும்.
பிரும்மாவும் பிரகலாதனும் பிரார்த்திக்க, நாராயணன் மனம் குளிர்ந்தார்.
குழந்தாய்! விண், மண், காற்று, நெருப்பு, நீர் ஆகிய ஐம்பூதங்கள் உள்ள வரை உன் புகழ் நிலைக்கும்!



சில்லு, முள்ளு

அரசு மணிமேகலை

சென்ற மாதத் தொடர்ச்சி...

கண்கள் நிறைய நீர்... குட்டிப் பையன் பொம்மையைப் போல நின்று கொண்டிருந்தான்.

கன்னம் 'செவசெவ' என்று சிவந்து கிடந்தது. பார்க்கவே பரிதாபமாக இருந்தது.

இப்படி அடிக்கடி பிடிவாதம் செய்கிற முள்ளுவுக்குத் தன்னைப் போலவே அழுகிற குட்டிப் பையன் முத்துவைப் பார்க்க, பரிதாபமாக இருந்தது.

''அம்மா! பாவம்மா! சின்னப் பையன்... போறான்! மடியிலே வெச்சிக்கோங்க...''

சிபாரிசு செய்தது முள்ளு, தான் என்னவோ பெரிய மனுஷன் போல!

''ம்! சரி வாடா!'' மடியில் முத்துவைத் தூக்கி வைத்துக் கொண்டது அம்மாக் கரடி.

ஆசையாக சில்லு, முள்ளு இரண்டு பேரும் கிட்டத்தில் வந்து அமர்ந்து கொண்டார்கள்.

மூன்று பேரும் ஆவலுடன் பழங்கள் சாப்பிடுவதைப் பார்த்து இரசித்த படி உட்கார்ந்திருந்தது அம்மாக் கரடி.

மனம் மட்டும் முத்துவின் தாய் எப்படியெல்லாம் அலைந்து கொண்டிருக்கிறாளோ என்று அதே நினைப்பை நினைத்து நினைத்துக் கலங்கிக் கொண்டிருந்தது.

''கரடிம்மா! இப்ப எனக்கு வயித்து வலி சரியாப் போச்சு...''

கை கொட்டிச் சிரித்த முத்துவை அன்பாகப் பார்த்த சில்லு கூறிற்று.

''அது வயித்துவலி இல்லேடா முத்து! பசி... அதுதான் பசி...!''

மூன்று பேரும் ஓடிப் பிடித்து விளையாடக் கிளம்பினார்கள்.

பரபரவென்று வீட்டு வேலைகளை முடிக்கத் தொடங்கியது அம்மாக் கரடி.

கொஞ்ச நேரம் கழித்து, வெளியில் எட்டிப் பார்த்தபோது, ஒரு மர நிழலில் சில்லுவும், முள்ளுவும் தூங்கிக் கொண்டிருக்க, நடுவில் முத்து சில்லு மேல் ஒரு காலையும், முள்ளு மேல் ஒரு காலையும் தூக்கிப் போட்ட படி தூங்கிக் கொண்டிருந்தான்.

வயிற்றுக்குக் கொஞ்சம் உணவு போனதும், அசதியில் மூன்று பேரும் தூங்கிவிட்டிருந்தார்கள்.

அம்மா கரடிக்குப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது.

'இவன் அம்மா எங்கெங்கே அலைஞ்சிக்கிட்டிருக்காங்களோ? பாவம் இந்தப் பையன்... இவன் வீட்டை எப்படிக் கண்டுபிடிக்கப் போகிறேனோ?'

கரடி கலங்கித் தவித்தது. சென்ற ஆண்டு தன் குட்டியை இழந்து விட்ட மான் ஒரு வாரம் போல, பைத்தியமாக அலைந்து திரிந்து இறந்து போனது ஞாபகத்துக்கு வந்தது.

பெருமூச்சுடன் தன் வேலைகளைக் கவனிக்கத் தொடங்கிற்று.

அடுத்தகாட்டைச்சேர்ந்தஒட்டைச் சிவிங்கி அந்த நேரம் வந்து சேர்ந்தது.

''என்னங்க? யார் இந்தப் பையன்? மனுஷக் குட்டியாட்டம் தெரியறானே...!''

''ஆமாம் அக்கா! பேரு முத்து... இப்பத்தான்மூணுபேருக்கும்வாழைப் பழம் சாப்பிடக் கொடுத்தேன். அப்புறம் விளையாடிக்கிட்டிருந்தாங்க. பார்த்தால், அப்படியே தூங்கிவிட்டிருக்காங்க...''

எப்படி முத்துவைப் பார்க்க நேர்ந்தது என்றும், எப்படி அவனை அழைத்துப் போய்விட இருக்கிறது என்றும் விவரமாகச் சொல்லி முடித்தது அம்மா கரடி.

ஒட்டைச் சிவிங்கிக்கு, சில்லு, முள்ளு என்றால் மிகவும் பிடிக்கும். வரும்போதே இரண்டு ஜாடி தேனும், ஒரு கூடை ஆப்பிள் பழங்களும் கொண்டு வந்திருந்தது.

''சில்லு! முள்ளு! யாரு வந்திருக்காங்கன்னு பாருங்களேன்... ஒட்டைச் சிவிங்கி அத்தை வந்திருக்காங்க!''

ஒரே குரலில் சில்லு, முள்ளு இரண்டு பேருமே எழுந்துவிட்டார்கள். அவர்கள் எழுந்த வேகத்தில், தடாலென்று கால் தரையில் விழ, முத்துவும் விழித்துக் கொண்டான்.

ஒட்டைச் சிவிங்கியைப் பார்க்கப் பார்க்க முத்துவுக்கு ஒரே வியப்பு.... அதன் நீண்ட கழுத்தை ஏணி மேல் ஏறி நின்று கொண்டு அளக்க வேண்டும்போல் ஓர் ஆசை.

கூடை ஆப்பிளைப் பார்த்த மாத்திரத்தில் இன்னும் வியப்பு கூடிப் போனது.

''ஹையா... ஆப்பிள்! ஆப்பிள்!'' முத்து ஒரு குதி குதித்தான்.

சில்லுவும், முள்ளுவும்கூட முத்துப் பையனைப் பார்த்து, அதேபோல் எம்பிக் குதித்தார்கள். ''ஒட்டைச் சிவிங்கி அத்தை! எனக்கும் தருவீங்க தானே ஆப்பிள்!''

கொஞ்சிக்கொஞ்சிக்கேட்ட முத்துவின் அழகான முகத்தைப் பார்க்கப் பார்க்க, ஒட்டைச் சிவிங்கிக்குப் பாசம் மேலோங்கியது.

புதிதாய் வந்திருக்கிற வாண்டு என்ன அழகாக, ''அத்தை'' என்று கூப்பிடுகிறது பாரேன்... அடாடா! என்ன கெட்டிக்காரப் பையன்?

ஒட்டைச் சிவிங்கி மகிழ்ச்சியுடன் அவனுக்கு ஒரு முத்தம் கொடுத்தது.

கூடையிலிருந்து ஆசையுடன் ஓர் ஆப்பிளை எடுத்து சில்லுவுக்கும், இன்னோர் ஆப்பிளை எடுத்து முள்ளுவுக்கும் கொடுத்தது ஒட்டைச் சிவிங்கி.

முத்து பொறுமையுடன் நின்றிருந்



தான்.

இன்னொரு செக்கச் சிவந்த ஆப்பிளை எடுத்து முத்துவுக்குக் கொடுத்தது ஒட்டைச் சிவிங்கி.

மூன்றும் 'குடுகுடு'வென்று ஓடிப் போய் வீட்டின் மூலையில் பக்கத்தில் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு, 'மச்சுக், மச்சுக்' என்று ஆப்பிளை வேக வேகமாகக் கடித்துத் தின்ன ஆரம்பித்தன.

முத்து தன் அரிசிப் பற்களால் பாதி ஆப்பிளைத் தின்று முடித்தான்.

சில்லு, முள்ளு முழுக்கவே தீர்த்துக் கட்டியிருந்தார்கள்.

"கரடிம்மா.... கரடிம்மா...."

"பாரேன், இந்த மனுஷக் குட்டி என்ன அழகா உன்னைக் கரடிம்மான்னு கூப்பிடுது.... என்னை அத்தைன்னு கூப்பிடுது...!"

ஒட்டைச் சிவிங்கி முத்துவின் உச்சியை முகர்ந்து ஒரு முத்தம் கொடுத்தது.

"என்ன முத்து? எதுக்குக் கூப்பிட்டே?"

"அம்மா! அம்மா! நாங்க மூணு பேரும் ஒட்டைச் சிவிங்கி அத்தை முதுகுலே ஒக்காந்துக்கிட்டு, இந்தக் காட்டை ஒரு சுத்து சுத்திட்டு வரோம்மா...."

"ஐயையோ! அதெல்லாம் தப்பு... என்ன மாதிரி வெயில் அடிக்குது? அதெல்லாம் போகக் கூடாது...."

ஒட்டைச் சிவிங்கி குறுக்கிட்டது.

"பாவம்,முத்து ஆசைப்படறான்.... சாயங்காலம் குழந்தையைக் கொண்டு போயி, விட்டுடப் போறே. அப்புறம் அவன் எங்கே காட்டைப் பாக்கப் போறான்?"

சில்லு முள்ளு, "அம்மா! அம்மா!" என்று கெஞ்சின. முத்து ஓடி வந்து கரடிம்மா கையில் இரண்டு முத்தம் கொடுத்தான்.

"சரி சரி.... சும்மா கொஞ்ச நேரம் சுத்திப் பாத்துட்டு வந்துடணும். ரொம்ப நேரம் அலையக் கூடாது... சரியா?"

"ஒட்டைச் சிவிங்கி அத்தை சொல்படியே கேப்போம். தொந்தரவே பண்ண மாட்டோம் கரடிம்மா."

முத்து உறுதிமொழி கொடுத்தான்.

"சரி, சரி! அத்தை சொல்படியே நடந்துக்கணும். புரியுதா?"

ஒட்டைச் சிவிங்கியின் கழுத்தைப் பிடித்தபடி முள்ளு உட்கார்ந்திருக்க, அடுத்து முத்து குரங்குக் குட்டி போல முள்ளுவைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருக்க, பின்னால் சில்லு கம்பீரமாக உட்கார்ந்து கொண்டது.

சில்லு கேட்டான்.

"முத்து, முள்ளு! பத்திரமா ஒக்காந்திருக்கீங்களா?"

"ஓ! சில்லு! நீ என் இடுப்பைப் பிடிச்சுக்கோ... நீ விழுந்துடப் போறே..."

குரல் கொடுத்தான் முத்து ஏக உற்சாகமாக...

ஒட்டைச் சிவிங்கி நிதானமான நடையோடு காட்டின் பெரும்பான்மைப் பகுதிகளைச் சுற்றிக் காட்டியது.

வழியில் காட்டு நாய்கள், நரிகள், கோவேறு கழுதைகள், யானைகள், ஒட்டகங்கள், அணில்கள், முயல்கள் — ஒவ்வொன்றும் முத்துவை விநோதமாகப் பார்த்து விசாரித்தன.

ஒட்டைச் சிவிங்கியும் சளைக்காமல் ஒவ்வொருவரிடமும் "கரடியின் விருந்தாளி, கரடியின் விருந்தாளி" என்று சொல்லிக் கொண்டே வந்தது.


முத்துவுக்குக் கதைப் புத்தகத்தில் படமாகப் பார்த்த மிருகங்களை நேரில் பார்ப்பது கொள்ளை ஆனந்தமாக

என்ன காரணம்?

"யானை சின்னதாகவும், யானைப் பாகன் பெரியவனாகவும் இருக்கானே! என்ன காரணம்?"

"யானைக்குப் போட வேண்டிய சாப்பாட்டை அவன் தின்னுட்டான் போலிருக்கு!"

— மணியன் தர்மலிங்கம்.





இருந்தது.

அடாடா! என்ன அழகான காடு? இங்கேயே காலம் முழுக்க இருந்து விடலாம் போல இருந்தது முத்துவுக்கு.

''அத்தை! சிங்கம், புலி எல்லாம் இங்கே இல்லியே!''

''அதுங்களெல்லாம் இங்கே இல்லே முத்து. காட்டுக்கு உள்ளே அதுங்க இருக்கும். அங்கே நாம போகக் கூடாது...''

கொஞ்ச நேரம் விளையாட அனுமதித்த ஒட்டைச் சிவிங்கி பத்திரமாகக் கொண்டு வந்து மூன்று பேரையும் கரடியிடமே ஒப்படைத்தது.

''கரடிம்மா! கரடிம்மா! நாங்க எவ்வளவு இடம் பார்த்தோம் தெரியுமா? எவ்வளவு அணில், முயல், யானை ...''

ஓடி வந்து கரடிம்மாவை அணைத்துக் கொண்டான் முத்து.

மாலை மயங்கும் நேரம். ஒட்டைச் சிவிங்கி விடைபெற்றுப் போனது.

கரடிம்மா ஒரு பெரிய கோட்டும், தொப்பியும் அணிந்து கொண்டது.

இப்போது பருமனான உயரமான ஓர் ஆளைப் போல இருந்ததே தவிர, கரடியைப் போலவே தோன்றவில்லை.

''போய்ட்டு வரட்டுமா? டாட்டா! டாட்டா!'' என்ற போது, முத்து கண்களில் கண்ணீர் நிறைந்தது.

சில்லு, முள்ளு இரண்டுமே கலங்கிப் போய் விட்டன.

முத்து சில்லுவுக்கும், முள்ளுவுக்கும் ஆசையாக முத்தங்கள் கொடுத்தான். கரடிம்மாவையும் கட்டி அணைத்துக் கொண்டான்.

கரடிம்மா கண்களிலும் கண்ணீர்..

''சரிசரி! கிளம்பு கண்ணு! சில்லு, முள்ளு! பத்திரமா வீட்டிலேயே இருங்க.''

கிளம்பினார்கள். கொஞ்ச தூரம் போகிற வரையிலும் திரும்பித் திரும்பி அவர்களைப் பார்த்துக் கொண்டே, முத்து சோகமாக நடந்தான்.

திடீரென்று பார்த்தால், தலை தெறிக்க ஓடி வந்து நின்றது முள்ளு.

''என்னடா?'' கரடிம்மா அதட்டிற்று.

''முத்துவுக்கு...'' கையை நீட்டியது முள்ளு... மூச்சு வாங்கிக் கொண்

டிருந்தது.

கையில், ஓர் ஆப்பிள்.. முத்து ஆசையுடன் வாங்கிக் கொண்டான்.

''எங்களை மறந்துடாதே முத்து..'' கண்கள் கலங்கச் சொல்லிவிட்டு, முள்ளு திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே நடந்தது.

கரடிம்மா தன் கண்களை மறைத்த நீரைத் துடைத்துக் கொண்டு, கிளம்பிற்று.

காட்டுக்கு வெளியே கிராமத்துக்குச் செல்லும் வீதியை அடைந்த போது, முத்து ஏகமாய்க் களைத்துப் போயிருந்தான்.

''கரடிம்மா! அந்த வழியாத்தான் போகணும்...''

நெடுகச் சென்றார்கள்.

''அதோ மரம்! பக்கத்துச் சந்துலே அஞ்சாறு வீடு இருக்குதே... அந்தக் கடைசி வீடுதான் கரடிம்மா.''

''பத்திரமாப் போயிட்டு வா கண்ணு.''

உச்சி முகர்ந்து முத்தம் கொடுத்தது கரடி. ''லீவு விட்டா நான் காட்டுக்கு வரட்டுமா கரடிம்மா...''

கரடிம்மா விக்கி விக்கி அழ ஆரம்பித்தது. முத்துவும் அழத் தொடங்கினான்.

''கரடிம்மா! இங்கேயே இருங்க! எங்க அப்பா, அம்மாவைக்கூப்பிட்டுக்கிட்டு வரேன்.''

ஓடினான் முத்து.

கூடத்தில் முத்துவின் அம்மா அழுது கொண்டிருந்தாள். பக்கத்தில் முத்துவின் அப்பா...

உள்ளே ஓடினான் முத்து.

''என் கண்ணே! வந்தியாடா செல்வமே!'' கதறினாள் முத்துவின் அம்மா.

''அம்மா! அம்மா! கரடிம்மாதான் என்னைக் கூப்பிட்டுக்கிட்டு வந்தாங்க. வாங்க. வாசல்லேதான் நிக்கிறாங்க.''

வெளியில் ஓடிவந்து பார்த்தபோது யாருமே இல்லை.

''என்னடா உளறல்? கரடியாவது? கூட்டிக்கிட்டு வந்து விடறதாவது?''

அப்பா குழம்பினார். மனிதர்கள் கண்களில் பட்டால், ஆபத்து என்பதால்தான் கரடிம்மா வேகமாகப் போய்விட்டது. என்று நினைத்துக் கொண்டே ஏங்கி நின்றான் முத்து.

அவன் கையில் முள்ளு கொடுத்த ஆப்பிள்.

முத்து கண்கலங்க அந்த ஆப்பிளைப் பார்த்துக் கொண்டே இருந்தான்.

கொஞ்சம் பெரியவன் ஆனதுமே, அவன் நிச்சயமாய்த் தன் கரடிம்மாவைப் போய்ப் பார்த்துவிட்டுத் தான் வருவான்!


முத்து, ''கரடிம்மா! கரடிம்மா! சில்லு, முள்ளு...'' என்று உரத்த குரலெடுத்து அழத் தொடங்கினான்.

'ஆடிப் பாடுவோம்' புத்தகத்தின் அறிமுக விழா கோவையில் சமீபத்தில் நடந்தது. புத்தகத்திலுள்ள பாடல்களில் சிலவற்றைச் சிறுவர் சிறுமியர் ஆடிப் பாடி வந்திருந்தவர்களை மகிழ்வித்தனர். புத்தகத்தை அறிமுகம் செய்து வைத்து, கவிஞர் செல்ல கணபதியை சுகிசிவமும், 'கோகுலம்' கௌரவ ஆசிரியரும் பாராட்டிப் பேசினார்கள்.



டாக்டர் பக்கம்

கக்குவான் இருமல்



டாக்டர். கு. கணேசன்

திவ்யா எட்டாம் வகுப்பில் படிக்கிறாள். படிப்பில் மிகவும் கெட்டிக்காரி. வகுப்பில் பாடப் புத்தகங்களைப் படித்துவிட்டு, ஓய்வு நேரங்களில் நூலகத்திற்குச் சென்று பொது அறிவை வளர்க்கும் புத்தகங்களை நிறையப் படிப்பாள். அறிவியல் விஷயங்களை அதிகமாகத் தெரிந்து கொள்ள ஆசைப்படுவாள். அவ்வப்போது என்னைச் சந்தித்து மருத்துவ விஷயங்களையும் தெரிந்து கொள்வாள்.

அப்படித்தான் நேற்றும் வந்தாள் திவ்யா. எங்கள் உரையாடலை இங்கே தருகிறேன். படியுங்கள்; பயன் பெறுங்கள் —

திவ்யா: குட் ஈவினிங், டாக்டர்!

நான்: அடடே, திவ்யாவா! வா, வா... உட்கார்.

திவ்யா: தேங்க்யூ, டாக்டர்!

நான்: என்ன திவ்யா, மாதத் தேர்வு எல்லாம் முடிந்ததா? முழு ஆண்டுத் தேர்வுக்கு எப்படிப் படிக்கிறாய்?

திவ்யா: நன்றாகப் படிக்கிறேன், டாக்டர்.

நான்: வெரிகுட், வகுப்பில் எப்போதும் முதல் ரேங்க் வாங்கணும், என்ன?

திவ்யா: நிச்சயம் வாங்குவேன், டாக்டர். அதிலொன்றும் சந்தேகமில்லை. அப்புறம் டாக்டர்... இன்றைக்கு பேப்பரில் ஒரு செய்தியைப் படித்தேன்...

நான்: என்ன செய்தி?

திவ்யா: 'கக்குவான் இருமல் பாதித்ததால் ஆறு குழந்தைகள் பலி' என்று ஒரு செய்தி போட்டிருந்தாங்க.

நான்: ஆமா, நான் கூடப் படித்தேனே...

திவ்யா: கக்குவான் இருமல்னு என்ன, டாக்டர்? நான் இதுவரைக்கும் கேள்விப்பட்டதே இல்லை...!

நான்: கக்குவான் இருமல்ங்கிறது குழந்தைகளைப் பாதிக்கக் கூடிய ஒரு வியாதி. ஆங்கிலத்திலே 'ஊஃபிங் காஃப்' (Whooping Cough) என்று சொல்வார்கள். 'பார்டெட்டெல்லா பெர்டூசிஸ்' என்ற பாக்டீரியா கிருமிகளின் தாக்குதலினால்தான் கக்குவான் இருமல் வருகிறது.

திவ்யா: இந்நோய் எல்லாக் குழந்தைகளுக்குமே வருமா டாக்டர்?

நான்: இல்லை திவ்யா! முறையாக தடுப்பு ஊசி போட்டுக் கொள்ளாத குழந்தைகளுக்கும், ஊட்டச் சத்து குறைவாக உள்ள குழந்தைகளுக்கும் இந்நோய் வருவதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளன. அப்படியே வந்தாலும், பன்னிரண்டு வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்குத்தான் இந்நோய் வரும்

திவ்யா: பெரியவங்களுக்கு வராதா டாக்டர்?

நான்: ஊஹூம், வரவே வராது.

திவ்யா: கக்குவான் இருமல் எப்படி

டாக்டர் வருது? கொஞ்சம் விளக்கமாகச் சொல்லுங்களேன், தெரிஞ்சுக்கிறேன்.

நான்: அவசியம் சொல்றேன், கேள். கக்குவான் இருமலை உண்டாக்கக் கூடிய பாக்டீரியா கிருமிகள் சுவாசக் குழல் வழியாக சுவாசப் பைகளை (Lungs) அடைந்து, சுவாசக் குழலையும் அரித்து, புண்ணாக்கி, வீங்கச் செய்கின்றன. அப்புண்ணில் சளி கட்டும்போது இருமல் வரும். அந்த இருமலை கக்குவான் இருமல் என்று சொல்கிறார்கள்.

திவ்யா: அந்த இருமல் சாதாரண இருமலாகக் கூட இருக்கலாமில்லையா? அப்படியென்றால் கக்குவான் இருமல்தான் என்பதை எப்படித் தெரிந்து கொள்வது, டாக்டர்?

நான்: நல்ல சந்தேகம். உன் சந்தேகத்தைத் தெளிவாக்க வேண்டியது என் கடமையல்லவா? சொல்கிறேன், கேள். பொதுவாக, சாதாரண இருமல் ஒரு வாரம்தான் நீடிக்கும். ஆனால், கக்குவான் இருமலோ ஆறு வாரங்கள் வரை நீடிக்கலாம். அது மட்டுமல்லாமல் குழந்தை இருமும் விதத்திலேயே வித்தியாசம் இருக்கும். கக்குவான் இருமல் உள்ள குழந்தை தொடர்ச்சியாக, மூச்சுவிட முடியாமல், நீண்ட நேரம் இருமும். அந்த இருமல் முடிந்ததும், ஒருவிதக் கேவல் சத்தம் வரும். கக்குவான் இருமல், நோய் வந்த இரண்டாவது வாரத்தில் மிக அதிகமாக இருக்கும். இரவு நேரங்களில் குழந்தை இருமி, இருமி, முகம் சிவக்கும். இருமல் முடியும் போது வாந்தி வரும்...



திவ்யா: கேட்கவே பயங்கரமா இருக்கு, டாக்டர். அந்தக் குழந்தைகளுக்குத்தான் எத்தனை கஷ்டம்?

நான்: இது மட்டுமா திவ்யா? இன்னும் பல கஷ்டங்கள் உள்ளன. இருமும் போது அடிக்கடி வாந்தி எடுப்பதால், சரியாக உணவு சாப்பிட முடியாமல் ஊட்டச்சத்துக் குறைந்து, உடல் பலவீனம் அடையும். சுவாசப் பையில் சளி கட்டுவதால் நிமோனியா, காச நோய் போன்றவை வரக்கூடும். இருமல் அதிகமாகும் போது வயிறு உப்பி பேதி உண்டாகும். சிலருக்கு ஆசன வாய் வழியாக குதம் வெளியேறும். கண், வாய், மூக்கு போன்றவற்றில் சின்னச் சின்ன இரத்தக் குழாய்கள் வெடித்து இரத்தக் கசிவை உண்டாக்குவதால். கண்ணின் வெளி வெண் படலம் சிவப்பாகத் தோன்றும்; வாயிலிருந்தும் மூக்கிலிருந்தும் இரத்தம் ஒழுகும்...

திவ்யா: இந்தக் கொடிய நோயைக் குணப்படுத்த முடியாதா, டாக்டர்?

நான்: நன்றாகக் குணப்படுத்த முடியும். இப்போதுள்ள நவீன மருந்து வசதிகளைக் கொண்டு கக்குவான் இருமலை இருந்த இடம் தெரியாமல் செய்து விடலாம். நோய் ஆரம்பித்த உடனேயே தகுந்த சிகிச்சை முறைகளை மேற்கொண்டால் குழந்தைக்கும் சிரமம் குறைவு; பெற்றோர்களுக்கும் செலவு குறைவு.

திவ்யா: சரி டாக்டர்... ஒரு குழந்தைக்குக் கக்குவான் இருமல் வந்து விட்டது என்று வைத்துக் கொள்வோம். அப்போது என்ன செய்வது?

நான்: நோயால் பாதிக்கப்பட்ட குழந்தையை முதலில் மற்ற குழந்தைகளிடமிருந்து தனிமைப்படுத்த வேண்டும். ஏனென்றால் கக்குவான் இருமல் மிகக் கொடிய தொற்று வியாதி. குழந்தை இருமும் போதும், வாந்தியெடுக்கும் போதும் லட்சக்கணக்கான பாக்டீரியாக் கிருமிகள் காற்றில் கலந்து மற்ற குழந்தைகளைத்

தொற்றிக் கொள்ளும். தெருவில் ஒரு குழந்தைக்கு இந்நோய் வந்தால், அத் தெருவில் உள்ள எல்லாக் குழந்தைகளுக்குமேநோய்வருவதற்கான வாய்ப்புகள் உள்ளன.

குழந்தை இருமும் போது முகத்தை முடிந்த அளவுக்குச் சுத்தமான துணியால் மறைத்துக் கொள்ள வேண்டும்.

வாந்தி, சளியை உடனுக்குடன் அப்புறப்படுத்தி, அடிக்கடி வீட்டைக் கழுவிவிட்டுச் சுத்தம் செய்ய வேண்டும். நோயுள்ள குழந்தை உபயோகித்த உணவு, உடை, பாத்திரங்களை மற்ற குழந்தைகளுக்கு உபயோகிக்கக் கூடாது.

நோயின் ஆரம்ப கட்டத்திலேயே மருத்துவரின் ஆலோசனையைப் பெற்று முறையான வைத்திய முறைகளை மேற்கொள்ள வேண்டும்.

நோய் குணமான பின்னும் குறைந்தது இரண்டு மாதங்களுக்கு, குழந்தையைப் பள்ளிக்கு அனுப்புவதோ, மற்ற குழந்தைகளுடன் பழக விடுவதோ கூடாது. இதன் மூலம் மற்றவர்களுக்கு நோய் பரவுவதைத் தடுக்கலாம்.

திவ்யா: நல்லது டாக்டர். கக்குவான் இருமலைத் தடுக்க தடுப்பு ஊசி ஏதாவது இருக்கிறதா?

நான்: இருக்கிறது. அந்தத் தடுப்பு ஊசியின் பெயர் 'டிரிபிள் ஆன்ட்டிஜென்' (Triple Antigen) இதைத் தமிழில் 'முத்தடுப்பு ஊசி' என்று சொல்வார்கள்.

திவ்யா: இந்த ஊசியை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்பதையும் எனக்குச் சொல்லுங்கள், டாக்டர்.

நான்: அவசியம் சொல்கிறேன், திவ்யா... குழந்தை பிறந்த மூன்று, நான்கு, ஐந்தாவது மாதங்களில் அந்த முத்தடுப்பு ஊசியைப் போட்டுக் கொள்ள வேண்டும். மாதம் ஒரு முறை வீதம் மொத்தம் மூன்று ஊசிகள் போட வேண்டும்.

அதற்குப் பிறகு குழந்தையின் ஒன்றரை வயதிலும், ஐந்தாவது வயதிலும் அதே தடுப்பு ஊசியைப் போட்டுக் கொள்ள வேண்டும்.

திவ்யா: இந்த ஊசி எங்கே கிடைக்கும் டாக்டர்?

நான்: எல்லா அரசாங்க மருத்துவமனைகளிலும், எல்லாத் தனியார் மருத்துவமனைகளிலும் இது தாராளமாகக் கிடைக்கும்.


திவ்யா: அதைப் பயன்படுத்திப் பலன் பெற வேண்டியது எங்கள் கடமை! அப்படித்தானே டாக்டர்?

நான்: சரியாகச் சொன்னாய், திவ்யா! முறையாக முத்தடுப்பு ஊசியைப் போட்டுக் 'கக்குவான் இருமலை வரவிடாமல் தடுக்க வேண்டியது உங்கள் கடமை; பெற்றோர்களின் கடமை.

திவ்யா: நன்றி டாக்டர்! கக்குவான் இருமலைப்பற்றி நிறையவிஷயங்களைச் சொன்னீர்கள். இதை மற்ற குழந்தைகளுக்கும் எடுத்துச் சொல்லி, தடுப்பு ஊசி போட வேண்டியதன் அவசியத்தை உணர வைப்பேன், டாக்டர்.

நான்: நல்லது திவ்யா!

திவ்யா: வருகிறேன், டாக்டர்! வணக்கம்!



ஒரு முறையில் கிடைத்த பரிசு

த. கி. ராமசாமி

கோடை விடுமுறை விட இன்னும் ஒரு வாரம் இருந்தது.

இந்த விடுமுறையை எப்படிக் கழிக்கலாம் என்று ராம்ஜியும், மைதிலியும் யோசித்துக் கொண்டிருக்கும் பொழுது, கிராமத்திலிருந்து அவர்களுடைய மாமா கடிதம் போட்டிருந்தார்.

"ராம்ஜியும், மைதிலியும் எங்கள் கிராமத்திற்கு வந்து தங்க வேண்டும். இங்கு அவர்களுக்குப் பிடித்தமான தோப்பு, வயல், வாய்க்கால், தோட்டம் எல்லாம் இருக்கின்றன. மேலும், அருகிலே இருக்கும் மலைக் குன்றிலிருந்து நீர்வீழ்ச்சி எப்பொழுதும் கொட்டிக் கொண்டிருக்கும். கோடை வெயில் என்பது இந்த ஊரில் கொஞ்சமும் தெரியாது. ஆகவே குழந்தைகளைக் கண்டிப்பாக இங்கே அனுப்ப வேண்டும்."

— என்று ராம்ஜியின் தந்தைக்கு விரிவாக எழுதியிருந்தார்.

இதைப் படித்த பொழுது ராம்ஜிக்கும் மைதிலிக்கும் அளவு கடந்த ஆனந்தம். 'நகரத்து வாழ்க்கையை விட, கிராமத்து வாழ்க்கை நன்றாகவே இருக்கும். போய்த்தான் பார்ப்போமே!" என்று முடிவு கட்டினார்கள். அதன்படியே தாங்கள் அங்கு வருவதாகக் கடிதம் எழுதிப் போட்டார்கள்.

ரயில்வே ஸ்டேஷனுக்கு இரட்டை மாட்டு வண்டியைக் கொண்டு வந்திருந்தார் ராம்ஜியின் மாமா.

மாட்டு வண்டியைக் கண்டதும், ரயிலை விட்டு இறங்கிய மைதிலிக்கு அளவு கடந்த சந்தோஷம்.

கூடவே ஒரு வருத்தம்.. பாவம், இந்த வாயில்லாத பிராணியின் கழுத்து எப்படி வலிக்குமோ!

பச்சைப் பசேலென்று வயல்கள். சில வயல்களில் அறுவடை செய்திருந்தது அங்கங்கே தெரிந்தது. வழியெங்கும் சாலையின் இருபுறத்திலும் ஆல மரங்கள், அரச மரங்கள், பூவரச மரங்கள்...

'ஜல் ஜல்' என்ற சலங்கை சப்தம் ஒலிக்க — ஜில்லென்ற காலைக் காற்று முகத்தில் விழுந்து செல்ல — ராம்ஜியும் மைதிலியும் அதிசயத்தோடு எட்டி எட்டிப் பார்த்து சந்தோஷப்பட்டார்கள்.

'வாம்மா மைதிலி— வாடா ராம்ஜி' — மாமி வாசலில் நின்று கொண்டு வரவேற்றாள். ராம்ஜியும், மைதிலியும் பெரியோர்களுக்கு 'வந்தனம்' பண்ணினார்கள்.

குட்டி வாய்க்காலில் நீர் கரை புரண்டு ஓடிக்கொண்டிருந்தது. ராம்ஜி ஆசை தீர மூங்கி முங்கிக் குளித்தான். மைதிலிக்குத் தண்ணீரைக் கண்டால் பயம். தவிரவும் இப்படிப்பட்ட வாய்க்காலை இப்பொழுதுதான் முதன் முதலாக நேரிடையாகப் பார்க்கிறாள்.

படிக்கட்டில் உட்கார்ந்து கொண்டே — சொம்பில் தண்ணீரை எடுத்து, தலைக்கு முழுகிக்கொண்டிருந்ததை—கிராமத்துக் குழந்தைகள் 'கேலியாக'ப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

"இப்போ எங்கே போகலாம்?" ராம்ஜி கேட்டான்.

மாமா சிரித்தார்.

"அதற்குள் என்ன அவசரம் ராம்ஜி. இன்னும் ஒரு மாத காலம் இங்கேதானே இருக்கப் போகிறாய்?"

"இல்லை மாமா. நாங்கதான் சாப்பிட்டாயிற்றே! நீங்கள் அனுமதி கொடுத்தால் நாங்க இரண்டு பேரும் தோட்டத்துப் பக்கம் போய்விட்டு

வருகிறோம்.''

''தனியாகவா?''

''ஏன் மாமா. இந்தக் கிராமத்திலே என்ன பயம்?''

''துணைக்கு வேண்டுமானால் முனியனை அனுப்பட்டுமா?''

''வேண்டாம் மாமா. நாங்களே போய் விட்டு, சாயங்காலத்திற்குள் வந்து விடுகிறோம்.''

''சரி, பத்திரமாகப் போய் வாருங்கள். ஜாக்கிரதை!''

ஊஞ்சலில் படுத்துக் கொண்டு, உண்ட மயக்கத்தில் தூங்கிக் கொண்டே அவர்களுக்கு விடை கொடுத்தார்.

ராம்ஜிக்கு ரொம்ப மகிழ்ச்சி. செருப்பை மாட்டிக் கொண்டு, பின்னால் வழி நடந்தாள் மைதிலி.

கீரைப் பாத்திகள் சதுரம் சதுரமாகப் போடப்பட்டிருந்தன. விதவிதமான காய்கறிச் செடிகள் தோட்டத்தின் பாதி இடத்தை நிரப்பிக் கொண்டிருந்தன. பந்தலில் புடலங்காய்களை — கல் கட்டித் தொங்கவிட்டிருந்தார்கள். கொய்யாப் பிஞ்சுகள் மரத்தில் தொங்கிக் கொண்டிருந்தன. ராம்ஜியும் மைதிலியும் இவற்றையெல்லாம் சந்தோஷமாகப் பார்த்துக் கொண்டே தோட்டத்தின் கடைசி மூலை வரைக்கும் வந்துவிட்டார்கள். அங்கே ஒரு சின்ன மாமரம் இருந்தது. மாமரத்தைப் பார்த்ததும் ராம்ஜிக்கு நாக்கில் ஜலம் ஊறிற்று. அந்த மாமரத்தின் பல கொப்புகளில் மாவடுகள் கொத்துக் கொத்தாகத் தொங்கிக் கொண்டிருந்தன. செருப்பைக் கழற்றிப் போட்டு விட்டு, மெல்ல அந்த மரத்தின் மீது ராம்ஜி ஏற — மைதிலியும் அவனைத் தொடர்ந்து ஏறினாள்.

ஆர்வ மிகுதியால் மரத்தின் மேல் நுனிக்கு வந்த ராம்ஜி அங்கிருந்து நாலாபுறமும் கண்ணைச் சுழல விட்டான்.

அப்பொழுது —

ராம்ஜியின் சப்த நாடியும் அடங்கும்படியாக — ஒரு நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்தது.

இரண்டு பேர்கள் ஒரு கடப்பாறைக் கம்பியைக் கொண்டு, மாமரத் தோப்பின் நடுவில்! வெகு வேகமாகத் தோண்டிக் கொண்டிருந்தார்கள். அவர்களைப் பார்த்தால் வேலைக்காரர்கள் மாதிரி தோன்றவில்லை. மாறாக ஒருவன் இங்குமங்கும் எட்டி எட்டிப் பார்த்து, சைகை கொடுக்க, அந்தச் சைகையைப் பார்த்துக் கொண்டே இன்னொருவன் பூமியைத் தோண்டிக் கொண்டிருந்தான்.



அப்பொழுது வயலுக்குச் செல்லும் ஒரு குடியானவப் பையன் அங்கு வரவே, அந்த இரண்டு பேரும் வைக்கோற்போருக்குள் பதுங்கிக் கொண்டார்கள். மரத்தின் மீதிருந்து இந்த சம்பவத்தைப் பார்த்துக் கொண்டிருந்த ராம்ஜிக்கு — இப்பொழுது அவர்கள் இருவர் மீதும் ஏற்பட்ட சந்தேகம் உறுதியாயிற்று.

இதற்கிடையில், ''என்ன அண்ணா, அப்படியே கண் கொட்டாமல் யாரைப் பார்க்கிறாய்?'' என்று மைதிலி கேட்டாள்.

''உஷ். சப்தம் போடாதே'' — என்றான் ராம்ஜி.

அந்தக் குடியானவப் பையன் மறைந்ததும் வைக்கோற் போருக்குள் நுழைந்து ஒளிந்து கொண்டிருந்த அவர்கள் இருவரும் மீண்டும் வெளியே வந்து மறுபடியும் அதே இடத்தில் தோண்டலானார்கள்.

நிசப்தமான மத்தியான வேளையாதலால், அந்த இடத்தில் வேறு எந்த நடமாட்டமும் இல்லை. வெயில் வேறு கடுமையாகக் காய்ந்து கொண்டிருந்ததால் நடமாடும் பிராணிகள் கூட எதுவும் கண்ணில் தென்படவில்லை.

கொஞ்ச நேரம் தோண்டியதும், 'டங்' என்ற சப்தம் வெளிவந்தது. "டேய் மெதுவா" என்று ஒருவன் சொல்ல, மற்றவன் நிதானமாகத் தோண்ட, கடைசியில் அவர்கள் இருவரும் கஷ்டப்பட்டு, பூமிக்குள்ளிருந்து ஒரு பழைய மண்பாண்டம் போல ஒரு பொருளை எடுத்தனர்.

அதை எடுத்ததும் ஒருவருக்கொருவர் கட்டிப்பிடித்துக் கொண்டனர். பிறகு பரபரப்பாக அதனுள் கையை விட்டு எதையோ எடுத்தனர். ராம்ஜிக்கு மனசு படக்படக் என்று அடித்துக் கொண்டது. அவர்களைக் கையோடு பிடித்து நசுக்க வேண்டுமென்று தோன்றிற்று. ஆத்திரத்தில் பல்லை நறநறவென்று கடித்துக்கொண்டான்.

அப்பொழுது பார்த்தா ஒரு கட்டெறும்பு மைதிலியின் காலைக் கடிக்க வேண்டும்?

'வீல்' என்று மைதிலி கத்தினாள்.

ராம்ஜி பதறிப் போய், அவள் வாயை இறுகப் பொத்தினான். மைதிலி காலைக் காண்பித்தாள். ஒரு பெரும் கட்டெறும்பு அவளின் வலது காலில் சுருண்டு கிடந்தது.

அந்த நிசப்தமான வேளையில், திடீரென்று 'வீல்' என்று காதில் விழுந்த சப்தத்தைக் கேட்டதும் திடுக்கிட்டுப் போனார்கள், அந்த இரண்டு பேர்களும்.

இடுப்பில் செருகியிருந்த கொடுவாள் கத்தியை ஒருவன் உருவிக்



கொண்டு சுற்றும் முற்றும் பார்க்க...

மற்றொருவன், அந்த மண்பாண்டத்தை அவசர அவசரமாக வைக்கோற் போருக்குள் மறைத்து வைத்தான்.

இதற்குள் அந்த வழியாக மாடு மேய்க்கும் சிறுவரும், வயதான பெண்களும் வந்து போகவே,

அவர்கள் இருவரும் ஏதோ தீர்மானத்துக்கு வந்தவர்கள் போல் — அங்கிருந்து மெல்ல நகர்ந்தார்கள்.

மைதிலிக்கு வலி தாங்க முடியவில்லை. அந்தக் கட்டெறும்பு அவள் காலை நன்றாகவே கடித்திருந்ததால், அந்தக் கால் சிவந்து காணப்பட்டது.

மரத்திலிருந்து அப்படியே கீழே குதித்து விடலாமா? என்று கூடப் பார்த்தாள். ஆனால், ராம்ஜியோ, மைதிலியை இங்குமங்கும் அசையவிடவில்லை.

காற்று இல்லாததால் வியர்த்துக் கொட்டிய மைதிலியை, மெல்லக் கீழே இறக்கிவிட்டான் ராம்ஜி.

"வேடிக்கை பார்த்தது போதும் மைதிலி. நீ வீட்டிற்குப் போ. நான் கொஞ்ச நேரம் கழித்து வருகிறேன்" என்றான்.

ஆனால் மைதிலியோ ராம்ஜியை விடவில்லை. "நானும் உன்கூடவே வருகிறேன்" என்றாள்.

இருவரும் சிறிது தூரம் சென்று ஒரு மரத்தடியை அடைந்தனர். "மைதிலி, நீ இங்கேயே இரு. யார் வந்து கேட்டாலும் மாமா வீட்டிற்கு வந்திருக்கோம்னு சொல்லு. நான் ஐந்து நிமிடத்தில் வந்து விடுகிறேன்" என்று அங்கே மைதிலியை உட்கார வைத்தான் ராம்ஜி.


கால் மணி நேரத்தில் — வியர்க்க விறுவிறுக்கத் திரும்பி வந்த ராம்ஜி, 'மைதிலி வா, போகலாம். இனிமேல் நாம் இங்கு இருக்கக் கூடாது' என்று அவளை அவசரப்படுத்தினான்.

மைதிலிக்கு ஒன்றும் புரியவில்லை.

மாமாவுக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. துள்ளியெழுந்து உட்கார்ந்தார்.

"நீ சொல்றது நிஜமா?"

"ஆமாம்" என்று தலையை ஆட்டினான் ராம்ஜி.



"அவர்கள் இரண்டு பேர்களை உன்னால் அடையாளம் காட்ட முடியுமா?"

"நிச்சயம்."

"அப்போ இப்போதே பக்கத்து ஊருக்குப் போய் போலீசைக் கூட்டி வருகிறேன்."

"வேண்டாம் மாமா."

"ஏண்டா."

"ஊர்ல உங்களுக்குத் தெரிஞ்ச, பலசாலியான நாலு பேரை மாத்திரம் கூப்பிட்டு மறைவா இருக்கச் சொல்லுங்க. ,அந்த ஆளுங்க எப்படியும் எந்த நேரமும் அந்த இடத்திற்கு நிச்சயம் வருவாங்க. அப்போ 'லபக்' கென்று பிடிச்சுடலாம்."

"யோசனை சரிதான். ஆனால், அவங்க உள்ளூர்க்காரங்களா இருந்தா, அதுவே தப்பாயிடும். பேசாமல் இரு. நான் மத்ததைப் பார்த்துக்கிறேன்" என்று சொன்னவர் அவசர அவசரமாக வெளியே போனார்.

இன்ஸ்பெக்டர் ராம்ஜியையும், மைதிலியையும் வெகுவாகப் பாராட்டினார். "இந்தச் சின்ன வயசிலே, ராம்ஜி எவ்வளவு பெரிய வீரச் செயல் செய்திருக்கிறான்! இதனால் ஒரு கோடி ரூபாய் பெறுமான பழங்காலத்து நாணயங்கள் கிடைத்துள்ளன. ராம்ஜி மட்டும் சரியானபடி அந்த நாணயப் பாத்திரத்தை வேறு இடத்திலே ஒளிச்சு வைக்காதிருந்தால், நாம் அவ்வளவையும்பறி கொடுத்திருப்போம் — இந்தக் காரியத்தைப் பெரியவங்க கூட செய்யப் பயப்படுவார்கள். ஆனால் — இந்தச் சிறுவர்கள் செய்தது எவ்வளவு பெரிய வீரச் செயல்! அது மட்டுமா? இந்த மகா கேடிகளையும் பிடிச்சிருக்க முடியாது. அரசாங்கத்திற்கு 'ராம்ஜி — மைதிலி' சேவையைப் பற்றி எழுதி — பெரும் பரிசு ஒன்றை நிச்சயம் வாங்கித் தரப் போகிறேன்."

இன்ஸ்பெக்டர் ஆனந்தப்பரவசத்துடன் சொன்னார். அதன்படியே ராம்ஜிக்கும் மைதிலிக்கும் அரசாங்கம் பாராட்டிப் பரிசும் வழங்கியது.



கலைத்துறையில் ஓர் இளவரசன்!

சாரணர் இயக்க முப்பெரும் விழா கோலாகலமாக நடைபெறுகிறது. அதில் 12 வயதுச் சிறுவன் மிருதங்கம் வாசிக்கிறான்.

"ஆஹா! இந்தச் சிறுவனின் பிஞ்சு விரலின் கொஞ்சும் ஒலி எப்படி நம்மையெல்லாம் மயக்குகின்றது!" என்று எல்லாரும் அவனைப் பாராட்டுகின்றனர். அவ்விழாவில் பாண்டிச்சேரி மத்தியப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் கே. வேங்கடசுப்பிரமணியம் அவர்கள் அச்சிறுவனை மிகவும் பாராட்டியதோடு, அவனுக்கு மலர்க்கிரீடம் சூட்டியும் மகிழ்கின்றார். 'கலைத் துறையில் ஓர் இளவரசனாக விளங்கும் இவனுக்கு முடிசூட்டு விழா நடக்கிறது' என்று கூறி அனைவரும் பரவசப்படுகின்றனர். பலமாகக் கை தட்டி மகிழ்ச்சியைத் தெரிவிக்கின்றனர்.

பன்னிரண்டு வயதிலே இவனுக்கு இவ்வாறு முடிசூட்டு விழா நடந்தாலும், ஏழு வயதிலிருந்தே இவன் மிருதங்கக் கலையில் வல்லவனாய், மயிலாடுதுறை சுழற் சங்கம், மகளிர் கல்லூரி, இன்ட்ராக்ட், இன்னர்வீல் கிளப் முதலியவை நடத்திய விழாக்களில் மிருதங்கம் வாசித்துப் பலரது பாராட்டையும் பெற்றிருக்கிறான்.

இவனுடைய மிருதங்க ஆசிரியராக இருந்து இவனை உருவாக்கிய பெருமை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மிருதங்க விரிவுரையாளராக இருந்த திரு. கி. வீராசாமி அவர்களையே சாரும்.

மயிலாடுதுறையிலுள்ள பல்வேறு கல்விக் கூடங்களிலும், கூட்டுறவு வார விழா, பாரதியார் நூற்றாண்டு விழா போன்ற பல விழாக்களிலும் இவனது திறமையைக் கண்டு மெச்சாதவர் இல்லை.


திருவையாறு தியாகராஜ சுவாமிகள் ஆராதனை விழாவில், கலைத்துறையில் முதியவர்களுக்கெல்லாம் ஈடு கொடுத்து மிருதங்கம் வாசித்தான் என்றால், இவன் திறமையை எவ்வாறு புகழ்வது! கலைத் துறையில் சிறந்து விளங்கும் கலைமாமணிகளான திருவாளபுத்தூர் டி. ஏ. கலியமூர்த்தி, வேதாரண்யம் பாலசுப்ரமண்யம் போன்ற தவில் வித்துவான்களும் இவனை மனமாரப் பாராட்டி வாழ்த்தி இருக்கிறார்கள்.

வானொலி இவனது நிகழ்ச்சிகளை அடிக்கடி ஒலிபரப்புவதுடன், சென்னை தொலைக்காட்சியிலும் இவன் தோன்றி மகிழ்வித்திருக்கிறான்.

இத்தனைக்கும் மேலாக இவனது கலைத் திறமையைப் பாராட்டி புதுடில்லியிலுள்ள Centre for Cultural Resources and Training இவனுக்கு உபகாரச் சம்பளம் வழங்கி வருகிறது.

மயிலாடுதுறை திவான் பகதூர் அரங்காச்சாரியார் தேசிய மேல்நிலைப் பள்ளியில் எட்டாம் வகுப்பில் படித்துவரும் செல்வன் ஜி. சந்தான கிருஷ்ணன் என்ற ஜி. பாபுதான் பெருமைக்குரிய இச்சிறுவன்!

தகவல்: தேரழுந்தூர் புலவர் ஆ. இராமபத்திரன்.



ஒரு பொய்

புலிப்பட்டி ஜமீன்தாரிடம் சிங்கன் என்ற சிறுவன் வேலை செய்து வந்தான். சிங்கனின் தந்தை, ஜமீன் தாருக்கு விசுவாசமாகப் பணிபுரிந்து இறந்து போனதால், அவர் பார்த்து வந்த வேலையைச் சிங்கனுக்குக் கொடுத்து, அந்த ஏழைக் குடும்பம் வாழ்வதற்கு அவர் வழி செய்தார்.

அன்று காலை நேரம், ஜமீன்தார் சிங்கனைக் கூப்பிட்டு, "சிங்கா! ஆண்டிப்பட்டி ஜமீன்தார் மகனுக்கும் என் மகளுக்கும் கல்யாணம் செய்து கொள்ள முடிவு செய்து, நிச்சயதார்த் தத்தை இந்த வாரக் கடைசியில் வைத் துக் கொள்வதாக இருந்ததே. அதைச் சில முக்கிய காரணங்களால் மேலும் பத்து நாட்களுக்குத் தள்ளிப் போட வேண்டியுள்ளது. ஆகையால் நீ உடனே போய் ஆண்டிப்பட்டி ஜமீன் தாரிடம் இது விவரத்தைக் கூறிவிட்டு வா. இது மிகவும் முக்கியமான வேலை" என்றார். சிங்கனும் அவ் வாறே செய்வதாகக் கூறிப் போனான்.

சிங்கன் மாலை வரையில் தன் நண்ப னுடன் ஊரைச் சுற்றிவிட்டுப் பொழுது சாயும் நேரத்தில் ஆண்டிப்பட்டிக்குப் புறப்படப் போனான். அப்போது அவ னுடைய நண்பன், "ஏ சிங்கா, இந்த இருட்டில் கரட்டு வழியாக இன்றே ஆண்டிப்பட்டிக்குப் போக வேண் டுமா? இன்னும் நிச்சயதார்த்தம் பற்றித் தீர்மானிக்க நாலைந்து நாட்கள் உள்ளன. நாளை மதியம் ஜமீன்தா ரிடம் போய், ஆண்டிப்பட்டிக்குச் சென்று வந்ததாயும் தகவல் கொடுத்து விட்டதாயும் சொல்லிவிடு. நாளை மாலையில் புறப்பட்டுப் போய்த் தகவல் சொன்னால் போச்சு" என்றான்.

சிங்கனுக்கும் அது சரியான யோசனையாகத் தோன்றியது.

மறுநாள் பகல் பன்னிரண்டு மணிக்கு அவன் ஜமீன்தாரைக் காணச் சென்றான். ஜமீன்தாரும் எங்கோ வெளியே போய்விட்டு அப்போது தான் திரும்பி வந்திருந்தார். அவர் சிங்கனைப் பார்த்ததுமே, "என்ன? ஆண்டிப்பட்டிக்குப் போய் வந் தாயா?" என்று கேட்டார்.

சிங்கனும் "ஓ! போய் நீங்கள் சொன்ன தகவலை ஜமீன்தாரிடம் நேரில் கூறினேன்" என்று கூசாமல் புளுகினான். ஜமீன்தாரும், "என்ன சொன்னார்?" என்று கேட்டார்.

"அதனால் என்ன, பரவாயில்லை.

வை. அன்பழகன்

அவர் சௌகரியம் எங்கள் சௌகரியம் என்று சொன்னார்'' என்று இன்னொரு பொய்யைச் சொன்னான்.

ஜமீன்தாரும் "அவர் வீட்டிற்குப் போகும் வழியில் பெரிய ஆறு ஒன்று உள்ளதே, நீ எப்படிப் போனாய்?'' எனக் கேட்டார். சிங்கனும், "ஏன்! நீந்தித்தான் சென்றேன். எனக்கு நீச்சல் தெரியுமே!'' என்று மேலும் ஒரு பொய்யைச் சொன்னான்.

ஜமீன்தார், "அவர் மகனும் மைத்துனரும் இன்று வருவதாக இருந்ததே, வந்து விட்டார்களா?'' எனக் கேட்கவே சிங்கனும், "ஓ! வந்துவிட்டார்கள். அவர்களையும் நான் பார்த்தேன்'' என்று ஒரு போடுபோட்டான்.

ஜமீன்தாரும் "அவர் வீட்டில் கொல்லைப்புறத்தில் ஒரு பெரிய மாமரம் அதில் நிறைய மாங்காய்கள் இருக்குதாமே! நீ அதைப் பார்த்தாயா?'' என்று கேட்க, சிங்கனும் "ஓ! எக்கச்சக்கமாக இருக்குது'' என்று சட்டெனத் தயங்காமல் கூறினான்.

இப்படியே ஜமீன்தார் கேள்வி மேல் கேள்வி கேட்க சிங்கனும் ஏதேதோ பொய் சொல்லிச் சமாளித்தான். கடைசியாக ஜமீன்தார், "அவர் வீட்டில் பசுமாடு ஒன்று கன்றுக் குட்டி போட்டிருக்குதாமே, அதை நீயும் பார்த்தாயா?'' என்று கேட்டார். சிங்கனும் "ஓ! பார்த்தேனே! ஆகா! என்ன அழகு! பட்டு மெத்தை போல் அதன் உடல் இருந்தது. நான் அதன் மேல் கை வைத்துத் தடவிக் கூடப் பார்த்தேன்'' என்றான். ஜமீன்தார் 'சரி,சரி' நீ காலையில் ஏதாவது சாப்பிட்டாயா! இல்லையா?'' என்று கேட்டார்.

சிங்கனும் அவரிடமிருந்து தப்ப எண்ணி, "ஓ! ஆண்டிப்பட்டியிலேயே ஜமீன்தார் வீட்டிலே காலைப் பலகாரம் வயிறு நிறையச் சாப்பிட்டு விட்டுத்தான் வந்தேன்'' என்றான். உண்மையில் அவனுக்கு நல்ல பசி. ஆனால், அதைச் சொல்லாமல் மறைத்தான். அப்போது ஜமீன்தார் அவனை உற்றுப் பார்த்தவாறே, "ஏண்டா! எப்போது முதல் இப்படிப் பொய் பேசக் கற்றுக் கொண்டாய்?'' என்று ஒரு வெடிகுண்டைப் போடுவது போலக் கேட்டார்.

சிங்கனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. அதுவரை தான் சொன்னது எல்லாம் பொய் என்பது ஜமீன்தாருக்குத் தெரிந்துவிட்டதே, என எண்ணி இனி என்ன ஆகுமோ எனத் தன் மனத்தில் நினைத்துக் கொண்டிருந்தான்.

ஜமீன்தார், "சிங்கா! நீ நேற்று ஏதோ ஒரு காரணத்தால் ஆண்டிப் பட்டிக்குப் போகவில்லை. 'நாளை போகிறேன்' என்று நேற்று சொல்லி இருக்கலாமே! அதை விட்டு விட்டு இப்படி ஏன் பொய் மேல் பொய் சொன்னாய்! ஒரு பொய்யை மறைக்க ஒன்பது பொய்களைச் சொன்னாயே!'' என்றார்.


சிங்கனும் தலைகுனிந்து நிற்கவே ஜமீன்தார் சிரித்தவாறே, "இதெல்லாம் எப்படி எனக்குத் தெரிந்தது என எண்ணுகிறாயா? நான் இன்று காலை ஆண்டிப்பட்டி ஜமீன்தாரை இந்த ஊரிலேயே வேறொரு நண்பர் வீட்டில் சந்தித்தேன். அவரது மகனும் மைத்துனரும் இன்னமும் வரவில்லை என்று அவரே சொன்னார். அவர் வீட்டிற்குப் போகும் வழியில் உள்ள ஆறு வறண்டு கிடக்கிறது. துளிக்கூட நீர் இல்லை. அவர் வீட்டுக் கொல்லைப்புறத்தில் மாமரமே கிடையாது. வேப்பமரம்தான் இருக்கிறது. அவர் வீட்டில் எந்தப் பசுவும் கன்று போடவில்லை. தெரிந்ததா?'' என்றார்.

சிங்கன் "திரு திரு'' வென விழித்து அவமானத்தால் தலைகுனிந்து நின்றான். அப்போது ஜமீன்தார், "சரி, சரி உள்ளே போய்ச் சாப்பிடு. பிறகு வீட்டுக்குப் போகலாம். ஆண்டிப்பட்டிக்கே போகாதவன், ஆண்டிப்பட்டி ஜமீன்தார் வீட்டில் எப்படிச் சாப்பிட்டிருக்க முடியும்?'' என்று சிரித்துக் கொண்டே கேட்டார்.

இவ்வளவு நல்ல மனம் படைத்த ஜமீன்தாரைக் காணச் சிங்கனின் கண்கள் கூசின. அவன் கண்களில் கண்ணீர் கசிந்தது. ஜமீன்தாரின் காலைப் பிடித்துக் கொண்டு, "ஐயா, இனிமேல் நான் பொய்யே சொல்ல மாட்டேன்'' என்று கதறி அழுது மன்னிப்புக் கேட்டுக் கொண்டான்.

வானம் விழுந்த புராணம்

கதை, படம். தஞ்சை, மாலா-




என்ன ஒரே சத்தம்? கோழிக்குஞ்சு தலையில் வானம் விழுந்ததாம். இது என்ன விபரீதம்!
இந்த ரகளைகளைப் பார்த்த நரி சொன்னது!
உங்களுக்கெல்லாம் பைத்தியமா? வானம் விழுந்தால் நாம் எல்லோரும் அழிந்து போக மாட்டோமா? எல்லோரும் வாருங்கள் வானம் விழுந்த இடத்திற்குப் போய்ப் பார்க்கலாம்!
அங்கே போனதும் ஆலம் பழம் ஒன்று கோழியின் தலையில் விழ.....
ஐய்யோ! என் தலையிலும் வானம் விழுந்து விட்டதே!
ஆலம்பழம் விழுந்ததை வானம் என ரகளை செய்த கோழியும் குஞ்சும் வெட்கித் தலை குனிந்தன. மற்றவை பரிகசித்துப் போயின!

இருவரும் திருந்தினர்

லென்ஸ்



பள்ளிக்கூட இடைவேளை. அரச மரத்தடியில் வழக்கம் போல் சிறுவர் கூட்டம்!

ஒருபுறம் 'வை ராஜா வை' என்று சுற்றிக் கொண்டிருந்த, மெஷினில் காசு போடச் சொல்லித் தூண்டிய, சூதாட்டம்... இன்னொருபுறம், "நாலணா போட்டு பிரைஸ் எடுங்கடா!" என்று சுற்றிலும் தீப்பெட்டி லேபிள் கட்டு, 'கட்' செய்த சினிமா பிலிம் துண்டுகள், சினிமா பாட்டுப் புத்தகங்கள், சோப்பு டப்பாக்கள், பிளாஸ்டிக் டப்பாக்கள் இவற்றை வைத்துக் கொண்டு ஒரு பெரியவர் பையன்களை அழைத்துக் கொண்டிருந்தார்.

சேகர் கூட்டத்தில் நின்று உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தான். சிறுவர்கள் ஒரு பெட்டிக்குள் நாலணாவைப் போட்டுவிட்டு, இன்னொரு பெட்டிக்குள் சுருள் சுருளாகச் சுற்றப்பட்டிருந்த சீட்டுகளை எடுத்துப் பெரியவரிடம் காட்டிவிட்டு, அந்தச் சீட்டிலுள்ள நம்பருக்குண்டான பரிசைப் பெற்றுச் சென்று கொண்டிருந்தனர் — தீப்பெட்டிப் படங்களாகவும், பிலிம் துண்டுகளாகவும்.

எல்லாருக்குமே அநேகமாக பிலிம் துண்டுகளும், தீப்பெட்டிப் படங்களுமே கிடைத்தன. அங்கே '100' என்று எண் குறிக்கப்பட்டிருந்த பரிசுப் பொருளான விளையாட்டுத் துப்பாக்கியை அடையவே பலர் ஆசைப்பட்டனர். ஆனால் அது மட்டும் ஒருவருக்கும் கிடைக்கவேயில்லை!

சேகருக்கு அந்தத் துப்பாக்கியின் மீதே குறி. எப்படி அதை எடுப்பது என்று குறுக்கு வழியில் யோசனை தோன்றவே இடம் பெயர்ந்து வீட்டிற்குச் சென்றான்.

மறுநாள். அதே இடைவேளை. அதே மரத்தடி... அதே பெரியவர்.

சேகர் சுறுசுறுப்பாக அங்கே சென்று கூட்டத்தில் சேர்ந்து கொண்டான்.

ஒவ்வொருவராக நாலணாவைப் போடுவதும் துண்டுச் சீட்டை எடுத்துப் பெரியவர் கையில் தருவதுமாக இருந்தனர். பிலிம் துண்டுகளும் மாட்ச் லேபிள்களுமே அவர்களுக்குக் கிடைத்தன.

சேகரும் ஒரு நாலணாவைப் போட்டு விட்டு, ஒரு சீட்டைப் பெரியவரிடம் நீட்டினான்.

பெரியவர் கையில், சேகர் எடுத்துக் கொடுத்த சீட்டில் '100' என்று எழுதப்பட்டிருந்தது. சீட்டையும், நம்பரையும் பார்த்ததுமே அவர் புரிந்து கொண்டார்.

"கொஞ்சம் இருப்பா!" சொன்ன பெரியவர் கூட்டமெல்லாம் கலைந்து சென்றதும்,

"தம்பீ! ஏன் இந்தத் திருட்டுத் தனம்?" என்று விஷயத்துக்கு வந்தார்.

சேகரின் முகம் பேயறைந்தாற் போலானது. 'இதை அந்த ஆள் எப்படிக் கண்டுபிடித்தார்?' என்றகேள்வி அவனைப் பூச்சியாய்க் குடைந்தது.

"தம்பீ! நீ அந்தத் துப்பாக்கியைத் திருடியிருந்தால் கூட நான் உன்னை ஒண்ணும்சொல்லியிருக்கமாட்டேன். '100' என்று போட்டிருக்கும் துப்பாக்கி வெறும் காட்சிப் பொருள் தான். பையன்களை இழுக்கவென்றே அதை வைத்திருக்கிறேன். நீ உன் வீட்டில் போய் '100' என்று சீட்டு எழுதி என்னிடம் கொண்டு வந்தால் தெரியாதா என்ன?"

சேகர் வாயடைத்துப் போனான்.

அதற்குள் பெரியவர்: "தம்பீ! இன்னிக்கெல்லாம் உக்காந்தா ஒரு ஐந்தோ, பத்தோ கிடைக்கும். நாலணாவைப் போட்டுட்டு, அஞ்சு ரூபா பொருளை அடைய நினைக்கிறியே!"

சேகருக்கு என்ன பேசுவது என்றே புரியவில்லை. செய்தது மாபெரும் தவறு, திருட்டுத்தனம் என்பது தெளிவாகப் புரிந்துவிட்டது.

"ஐயா! நான் செஞ்சது தவறு தான். அந்தத் துப்பாக்கிக்கு ஆசைப் பட்டதனால்தான் உங்களை இப்படி ஏமாத்த நினைச்சேன். ஆனால், இனிமேல் இந்த மாதிரி செய்ய மாட்டேன்" என்று பாவ மன்னிப்புக் கேட்டான் சேகர்.

பெரியவர் சிறிது நேரம் எதுவுமே பேசவில்லை. ஏதோ யோசனையில் ஆழ்ந்தார். பிறகு திடீரென்று,

"தம்பீ! நீ செய்தது சின்னத் தவறு தான். ஆனால், நான் செய்தது எவ்வளவுபெரிய தவறு! காசுக்காக,பள்ளிக் கூடத்தின் முன் சூதாட்டம் நடத்தி உன் போன்ற பிள்ளைகளை ஏமாத்தி வயிறு வளர்க்கிறேனே, இதுவும் ஒரு தொழிலா? இப்படி நான் சூதாட்டம் நடத்துவதால்தானே உனக்கு இது போல் எண்ணம் வருகிறது? இன்றிலிருந்து இந்தத் தொழிலை — நாலைந்து ஆண்டுகளாக நடத்தி வரும் தொழிலை — நான் விட்டுவிடுகிறேன்" என்று சொல்லிவிட்டு, பெரியவர் மூட்டை முடிச்சுக்களைக் கட்டினார்.

"ஆனால், வாழ்நாள் பூரா நீ என்னை மறக்க முடியாது. இனிமேல் திருட்டுப் புத்தியை விட்டுடு. நானும் இந்தப் பாவத் தொழிலுக்கு முழுக்குப் போட்டுடறேன்" உன்னை மறக்க மாட்டேன்"" என்று எழுந்த பெரியவர், தமது மூட்டையைத் தூக்கித் தோளில் போட்டுக் கொண்டு அருகிலிருந்த சாலையை நோக்கி நடக்கலானார்.

சேகருக்குச் சம்மட்டியினால் தலையில் யாரோ அடித்த மாதிரியிருந்தது. பெரியவரிடம் ஏதோ கூற வேண்டும் என்று ஓடினவன், அங்கு வந்த பஸ்ஸில் பெரியவர் ஏறுவதைப் பார்த்ததும், விக்கித்து நின்றான். பஸ் போன பாதையையே பார்த்துத் திரும்பிய அவனது கவனத்தைக் கவர்ந்தது. அந்த விளையாட்டுத் துப்பாக்கி. 'அன்பளிப்பு' என்று எழுதி அவனருகில் வைத்துவிட்டு அவர் போயிருக்கிறார்! அதைப் பார்த்த சேகரின் கண்கள் கலங்கின.

ஓசையை குறைக்கும் வர்ணங்கள்!



ஓசையைக் குறைப்பதற்கு மரங்கள் பயன்படுகின்றன என்பதை அறிவோம். ஆனால் வர்ணங்களால் ஓசையைக் குறைக்க முடியும் என்று இப்போது கண்டு பிடித்திருக்கிறார்கள். குளுமையான நீல, பச்சை வர்ணங்கள் ஓசையைத் தடுக்கின்றன; ஓசையினால் மனிதனுக்கு எரிச்சல் உண்டாகாதவாறு அவை செயல்படுகின்றன. சிவப்பு, மஞ்சள் வர்ணங்கள் குறைந்த ஓசையைத் தடுக்கின்றன என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.

— ஆர். எஸ். சுப்பிரமணியன்.

மயிலாடுதுறையில் மகிழ்ச்சி வெள்ளம்!

தஞ்சை மாவட்ட மயிலாடுதுறையில், பொதுவாக நவம்பர் முதலிரண்டு வாரங்களில், 'கொட்டோ கொட்' டென்று மழை கொட்டி வெள்ளம் ஏற்படுவது வழக்கம். ஆனால், இந்த ஆண்டோ விசித்திரமாக முதலிரண்டு வாரங்களில் மழையே இல்லாததால் வறட்சி வருமோ எனத் திகிலையும் பீதியையும் மக்கள் மனத்தில் இயற்கை ஏற்படுத்தியிருந்தது.



அடடே.... இது என்ன...! நவம்பர் பத்தொன்பது.... நகரெங்கும் ஒரே குதூகலமும், உற்சாகமும் வெள்ளம் போல் பெருக்கெடுத்தோடுகிறதே! ஓ! சிறுவர்களின் இதயத்தில் கொலுவீற்றிருக்கும் 'கோகுலம்' பத்திரிகையின் விழா அல்லவா அன்று ஊரில் கொண்டாடப்பட்டது.

''குழந்தைக் கவிஞர்'' எனப் பிரியத்தோடு அழைக்கப்படுகின்ற நம் 'கோகுலம்' பத்திரிகை கௌரவ ஆசிரியர் அல்லவா அன்று ஊருக்கு 'திக்விஜயம்' செய்திருக்கிறார். அது தானே, பார்த்தேன்!



பேரளம் புகழ்மதி



காலை 6½ மணிக்கு புகை வண்டியில் வந்திறங்கிய குழந்தைக் கவிஞருக்கு இரவு 10 3/4 மணிக்கு சென்னைக்குப் புறப்படும்வரை எக்கச்சக்கமான நிகழ்ச்சிகள்; எங்கு பார்த்தாலும் சிறுவர்களின் உற்சாக வெள்ளம் அலைமோதியது!

காலை குருஞான சம்பந்தர் பள்ளிச் சிறுவர் கலை விழாவிலும், மதியம் நடுநாயகமாக கோகுலம் சி று வ ர் சங்கத் தொடக்க விழாவிலும், மாலை 'அக்னி' நடத்திய குழந்தைகள் தின விழாவிலும் ஊசி விழக் கூட இடமில்லாத அளவுக்குச் சிறுவர்கள் நிரம்பி வழிந்தனர்.

அதிலும் நடுநாயகமாக மதியம் நடந்த—நமது கோகுலம் பத்திரிகையின் சிறுவர் சங்கத் தொடக்க விழாவுக்குச் சுற்று வட்டாரத்துச் சிறுவர்களெல்லாம் படையெடுத்து வந்துவிட்டனர்.

கோகுலம் சிறுவர் சங்கத் தொடக்க விழா நடந்த தேசிய மேல்நிலைப் பள்ளிக்கும் கோகுலத்திற்கும், கோகுலம் தொடங்கும் போதே ஒரு தொடர்பு உண்டு! ஆம், கோகுலம் என்ற பெயரைச் சூட்டுவதற்கு இந்தப் பள்ளியின் முன்னாள் மாணவன் உதவியிருக்கிறான்!

தலைவர் திரு ஜெ. ஆர். இராமமூர்த்தி அவர்களும், துணைத் தலைவர் திரு S. கிருட்டிணமூர்த்தி அவர்களும் செயலாளராகிய நானும் காலை முதல் பம்பரம் போல் சுழன்று அக்கம்பக்கத்து சிறுவர் வட்டாரங்களுக்கு நேரில் தகவல் தெரிவித்து வந்தோம்; இல்லாவிட்டால் அவர்களின் கோபத்தை யார் தாங்குவது!

நல்ல விஷயங்களைப் பாராட்டிப் பெருமைப்படுத்துவதில் நமது கோகுலத்திற்கு உலகிலேயே எதுவும் இணை கிடையாது. அதை மெய்ப்பிக்கும் விதத்தில் இந்தத் தொடக்க விழா பட்டமளிப்பு விழாவாக நடத்தப்பட்டது.

இந்தியாவிலேயே இதுவரை இல்லாத அளவுக்கு, இலக்கியத் துறையில் 102 பரிசுகள் பெற்ற கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினன், வெ. புகழொளிக்கு, குழந்தைக் கவிஞர், 'இலக்கியச் செல்வன்' என்ற பட்டத்தை வழங்கிப் பாராட்டினார்.

நடந்த மூன்று விழாக்களிலும் 'கோகுலம்' பத்திரிகைக்கு ஏராளமான புகழ்மாலைகள் சூட்டப்பட்டன! மூன்று விழாக்களிலும் இறுதியில் வடை, பாயச சர்க்கரைப் பொங்கல் விருந்து வழங்கப்பட்டது. ஆ... என்னவென்று புரிந்துவிட்டதா...? நமது கௌரவ ஆசிரியரின் சுவாரசியமான பேச்சைத்தான் குறிப்பிடுகிறேன். தமக்கே கைவந்த, கம்பீரமும் கனிவும் கலந்த குரலில், எளிமையும் பெருமிதமும் குழைந்த நீதிக் கருத்துக்களைக் குழந்தைக் கவிஞர் கூறக் கூற— இன்னும் கொஞ்சம் ஊட்டமாட்டாரா எனச் சிறுவர்கள் ஏங்க, ஏங்க.... ஓ... வார்த்தைகளால் சொல்ல இயலாத தாய்மைப் பரிவு அது!

கோகுலம் சிறுவர் சங்கத் தொடக்க விழாவைச் சிறப்பாக நடத்தி முடித்த எங்களுக்கு மறுநாளிலிருந்து கும்பகோணம், திருவாரூர், தஞ்சாவூர் ஆகிய ஊர்களிலுள்ள சிறுவர் சங்க உறுப்பினர்களிடமிருந்து எக்கச்சக்கமான கோபக் கடிதங்கள் பறந்து வந்தன; தங்களுக்கெல்லாம் தெரியாமல் விழாவை, திடுமென்று நடத்திவிட்டதாக வருத்தப்பட்டிருந்தனர். 'முன் கூட்டியே தெரிந்திருந்தால் தஞ்சாவூர் மாவட்டத்துக்கே உரிய 'பந்தா'வோடு நடத்தியிருக்கலாமே!' என ஆதங்கப்பட்டனர். இருந்தாலும் ஓய்வு பெற்ற

ஐ.ஏ.எஸ். அதிகாரியாகிய திரு வி. ஆறுமுகம், 'அக்னி' கிளை அமைப்பாளர் திரு எம்.ஜி. கலியபெருமான் போன்றபலருடைய அன்பாலும்ஆதரவாலும்விழா மயிலாடுதுறையில்சிறப்பாக நடந்தது குறித்து மகிழ்ச்சி தெரிவித்தனர்.

அடுத்த ஆண்டு நடத்தவிருக்கின்ற தஞ்சை மாவட்ட கோகுலம் சிறுவர் சங்க விழாவை அனைவருக்கும் முன் கூட்டியே அறிவித்து 'ஓஹோ' வென்று நடத்தி விடுவோம் என அனைவருக்கும் ஆறுதல் கூறினேன். ''நல்ல செயல் நடந்தால் மழை பொழியும்'' என்பதற்கேற்ப மறுநாளிலிருந்து மயிலாடுதுறையில் 'கொட்டோ கொட்' டென்று மழை கொட்டுகிறது!

மற்ற மாவட்டத்து கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர்களே.... நீங்கள் எப்பொழுது தஞ்சை மாவட்டத்தை ஜெயிக்கப் போகிறீர்கள்? ஊஹூம்.... அதுதான் நடக்காது!

ஏமாற்றும் புதுவிதம்

பம்பாயிலுள்ள மகள் வீட்டுக்கு முதல் முறையாகச் சென்றார் ஒருவர். அவர் பம்பாயைச் சுற்றிப் பார்க்க விரும்பினார். ''நீங்கள் தனியாகப் போகாதீர்கள். யாரேனும் உங்களை ஏமாற்றி விடுவார்கள். சாயங்காலம் நான் அழைத்துப் போகிறேன்'' என்று கூறிவிட்டு, மாப்பிள்ளை அலுவலகம் போய்விட்டார்.

மாமனாரால் சும்மா இருக்க முடியவில்லை. மெதுவாக, வீட்டை விட்டுக் கிளம்பினார்., சிறிது தூரத்தில் இருந்த பதினொரு மாடிக் கட்டடத்தைப் பார்த்தார். 'ஒன்று, இரண்டு' என்று 11 மாடிகளையும் எண்ணிக் கொண்டிருந்தார்.

அப்போது ஒருவன் வந்து, ''என்ன செய்கிறீர்கள்?'' என்று கேட்டான்.

''இந்த மாடிகளை எண்ணிப் பார்க்கிறேன்.''

''இப்படிச் சும்மா எண்ணக் கூடாது. மாடிக்கு ஒரு ரூபாய் வீதம் கொடுக்க வேண்டும். எத்தனை மாடிகளை எண்ணினீர்?''

''ஆறு மாடிகள்தான்'' என்று பொய் சொன்னார்.

''சரி, ஆறு ரூபாய் எடும்'' என்றான். ரூபாயை எண்ணிக் கொடுத்துவிட்டு, வீடுவந்தார். மகளிடம், மிகவும் மகிழ்ச்சியுடன் நடந்ததைக் கூறி, ''நான் பதினொருமாடிகளையும் எண்ணிவிட்டேன். ஆனால், ஆறுமாடிகள்தான் எண்ணியதாகக் கூறி, அவனை ஏமாற்றி ஐந்து ரூபாய் மிச்சம் பிடித்துவிட்டேன்'' என்றார்.

மகள் தலையில் அடித்துக் கொண்டாள். — பி. பத்மா, மதுரை — 20.





கழுதையைப் பற்றி 6 செய்திகள்

கழுதை மேலும் கீழுமாக சேர்ந்து முறையே நான்கு தடவை இழுத்துக் கத்தும். பெண் கழுதையைவிட ஆண் கழுதை அதிகம் கத்தும்.

மெல்லிய இலேசான காகிதங்களையே கழுதை தின்னும். எல்லாக் காகிதங்களையும் தின்னாது.

சாம்பலைக் கண்டால் நான்கு கால்களையும் சீராக வைத்துக் கொண்டு குஷியுடன் புரளும்.

கழுதையின் முக்கிய ஆகாரம் தண்ணீரே. ஒரே மூச்சில் மூன்று லிட்டர் தண்ணீர் கூடக் குடிக்கும். சுமார் ஏழு நாட்கள் வரை எந்த உணவும் தின்னாமல் இருக்கும்.

கழுதைகளுக்குள் சண்டை வந்தால் உதைக்காது; கடிக்கும். கால் கடுக்க எத்தனை நேரம் வேண்டுமானாலும் நிற்கும்.

சாதாரணமாக 45 கிலோ வரை சுமை தூக்கும். அதிக சுமை என்றாலும் சிறிது தூரம் சென்ற பின்னரே கீழே தள்ளும்.

— 'மிருகங்களின் வாழ்க்கை' நூலிலிருந்து: ஆர்.எஸ். சுப்பிரமணியன்.

வில்வீரன்



—எஸ்.பாலகிருஷ்ணன்

மன்னன் ஒருவன் தனது பரிவாரங்களுடன் வேட்டைக்குச் சென்றான். அங்கே மரமொன்றில் பெயிண்ட் செய்யப்பட்ட வட்டத்தின் மையத்தில் அம்பொன்று பாய்ந்திருக்கக் கண்டான். இப்படி நடு மையத்தில் மிகச் சரியாக அம்பு பாய்ச்சியுள்ளவன் சிறந்த வில்லாளனாய்த்தான் இருக்க வேண்டும் என்று உள்ளத்தில் எண்ணிக் கொண்டு சிறிது தூரம் சென்றான்.

மீண்டும் ஒரு மரத்தில் பெயிண்ட் செய்யப்பட்ட சதுரத்தின் நடு மையத்தில் அம்பொன்று பாய்ந்திருக்கக் கண்டான். மன்னனுக்கு ஆச்சரியமான ஆச்சரியம்! இவ்வளவு குறிப்பாக அம்பு எய்யும் 'அர்ஜுனன்' யாராயிருப்பான் என்று எண்ணியவாறே சிறிது தூரம் மேலும் பயணம் செய்தான்.

அங்கே ஒரு மரத்தில் பாய்ந்திருந்த அம்பைக் கண்டதும் மன்னனின் விழிகள் அகலமாய் விரிந்தன. நடுமையத்தில் மிகச் சரியாய்ப் பாய்ந்திருந்தது அம்பு. உடனே அருகிலிருந்த மந்திரியை அழைத்த மன்னன், "அமைச்சரே! நடுமையத்தில் இவ்வளவு அருமையாய் அம்பு பாய்ச்சும் வில்வீரனைக் காண என் உள்ளம் ஏங்குகிறது. என் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட அவனுக்கு ஏராளமான பரிசுப் பொருட்கள் வழங்க வேண்டும். இன்னும் இரண்டு நாட்களில் படைவீரர்களின் உதவியோடு அவ்வீரனைக் கண்டுபிடித்து நமது அரசவை மண்டபத்திற்கு அழைத்து வாரும்!" என்று கட்டளையிட்டான்.

எட்டுத் திக்கும் பறந்தனர் படைவீரர்கள். எங்கு தேடியும் அவ்வில் வீரனைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

இரண்டு நாட்கள் கழிந்தன. மந்திரியை அழைத்த மன்னன் கேலிப் புன்னகை இதழில் தவழ, "என்ன அமைச்சரே, உமது சாமர்த்தியம் இவ்வளவுதானா...?" என்றான்.

"இன்னும் இரண்டு நாட்களில் எப்படியும் கண்டுபிடித்து விடுகிறேன் அரசே!" என்று பணிவுடன் கூறினார் அமைச்சர்.

"அமைச்சரே! அவ்வில் வீரனுக்கு பெறும் பரிசுப் பொருட்கள் மட்டுமே தருவதாய் முன்பு கூறியிருந்தேன். என் அருமைக் கண்மணியை—இந்நாட்

டின் இளவரசியை — அவ்வீரனுக்குத் தந்து அவனை எனது மாப்பிள்ளையாக்கிக் கொள்ள இப்போது என் உள்ளம் விரும்புகிறது. இன்னும் இரண்டு நாட்களில் நமது படைவீரர்களின் உதவியோடு நீர் அவனைக் கண்டுபிடிக்காவிடில்... உமது பதவி பறி போகும். போய் ஆவன செய்யும்!'' என்று தனது அதிருப்தியைத் தெரிவித்த மன்னன் விடுவிடென்று அந்தப்புரத்தை நோக்கிச் சென்று விட்டான்.

மன்னன் தன்மேல் காட்டிய கோபத்தைப் படை வீரர்களின் மீது பாய்ச்சி விரட்டினார் அமைச்சர்.

அரசரும் வியக்கும் வண்ணம் அம்பு பாய்ச்சிய அந்த 'அர்ஜுனன்' யார்? நாடெங்கும் இதே பேச்சு!

தன்னுடன் இரண்டு வீரர்களை அழைத்துக்கொண்டு முன்பு வேட்டையாடச் சென்ற அதே காட்டிற்குச் சென்றார் அமைச்சர்.

அங்கே... ஒரு மரத்திலே ஒரு வட்டத்தின் நடு மையத்தில் அம்பொன்று பாய்ந்திருக்கக் கண்டார். மரத்தடியில் ஒரு பன்னிரண்டு வயதுச் சிறுவன் தூங்கிக் கொண்டிருந்தான். அவனை எழுப்பி, மரத்தைக் காட்டி, ''இப்படி அம்பு பாய்ச்சியது நீதானே!'' என்று கேட்டார் அமைச்சர்.

''ஆம்!'' என்றான் சிறுவன். அமைச்சருக்கு மகிழ்ச்சி தாளவில்லை.

உடனே அவனைத் தன்னுடன் குதிரை மீது ஏற்றி அழைத்துக் கொண்டு கிளம்பினார் அமைச்சர்.

அமைச்சர் வில் வீரனை அழைத்துக் கொண்டு வருவதை அவருடன் வந்த ஒரு வீரன் முன்னதாகவே விரைந்து சென்று மன்னனிடம் அறிவித்து விட்டான். ஆகையால், மன்னன் கோட்டையின் வாயில் வரை தனது மனைவியுடன் சென்று அச்சிறுவனை மாலையிட்டு வரவேற்றான். கூடியிருந்த மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.


அரசவை மண்டபம் கூடியது. தனக்கு நிகரான ஆசனத்தில் சிறுவனை அமர்த்திய அரசன், ''வில்லாளும் விஜயா! இவ்வளவு அற்புதமாய் குறி தவறாமல் மிகச் சரியாக அம்பு பாய்ச்சுகிறாயே, எப்படி இத்திறமையைப் பெற்றாய் என்று சொல்ல இயலுமா?'' என்று வினவினான்.

இதழில் இளநகையோடு எழுந்த சிறுவன், ''அது மிகவும் சுலபமான ஒன்று அரசே! முதலில் மரத்தின் மீது அம்பை எய்து விடுவேன். பின் அம்பைச் சுற்றி மிக அழகாக வட்டமோ சதுரமோ வண்ணம் பூசி விடுவேன்... அவ்வளவுதான்!'' என்றான்.

மன்னனும் சபையோரும் மலைத்து நின்றனர்!

100 வாங்க வேண்டும்

உன்னிடத்தில் ரூ 100/– இருக்கிறது. நீ கடைத் தெருவுக்குச் செல்கிறாய். அங்கே ஒரு மிட்டாயின் விலை 5 பைசா, ஒரு பாப் கார்ன் பாக்கெட் விலை 1 ரூபாய், ஒரு சாக்லேட் விலை 5 ரூபாய் என்று விற்பதைப் பார்க்கிறாய். இந்த மூன்றிலும் சேர்த்து 100 வாங்க வேண்டும். உன் கையில் மீதிப் பணம் எதுவும் இருக்கக் கூடாது. ஒவ்வொன்றிலும் எத்தனை வாங்குவாய்?



விடை:
மிட்டாய் 80 × 0.05 = ரூ 4.00;
பாப்கார்ன் 1 × 1.00 = ரூ 1.00
சாக்லேட் 19 × 5.00 = ரூ 95.00
(4.00 + 1.00 + 95.00 = 100.00)

— கோ. பாபு (11426),
பாப்பாரப்பட்டி

புதையல் வீடு

டாக்டர் பூவண்ணன்



6. கோவிலுக்கு ஆபத்து

இரவானாலும், அது சுமதிக்குப் பழக்கமான பாதை. அதனால் அவள் சைக்கிளை வேகமாகச் செலுத்திப் பெருமாள் கோயிலை அடைந்தாள். சைக்கிளை நிறுத்திவிட்டு, கோயிலின் வாயிலுக்குச் சென்றாள்.

கோயில் கதவு மூடியிருந்தது. இரண்டுகதவுகளை இணைத்துஒருஉறுதியான இரும்புச் சங்கிலி இருக்க, சங்கிலியின் மறுமுனை வளையங்களில் ஒரு பழங்காலத்து முரட்டுப் பூட்டுத் தொங்கியது. பாழடைந்த கோயிலானாலும் அதைப் பூட்டிப் பாதுகாத்து வந்தார், சோமு தாத்தா. பல நூறு ஆண்டுகளாக அந்தக் கோயிலின் காவல்காரராகத் திகழ்ந்தவர், அவர் குடும்பத்தினராம்.

சுமதி வெள்ளை வேன் நிற்கும் இடத்துக்குச் சென்றாள். இப்போது அதனருகே, மதில் மீது அவள் பார்த்த இருவர் இல்லை. "மதிலின் மீது ஏற, வேனை ஒரு படியாக உபயோகித்திருப்பாங்க. அதுக்குத்தான் மதிலை ஒட்டினா மாதிரி வேன் நிக்குது' என்று நினைத்த சுமதி வேனில் பார்த்தாள். யாரும் இல்லை. அவள் பார்த்த இருவர் எங்கே? கோயிலுக்குள் குதித்திருக்க வேண்டும். அங்கே அவர்களுக்கு என்ன வேலை? அதைக் கண்டு பிடிப்பது தனது வேலை என்று நினைத்த சுமதி, கல் மண்டபத்துக்குச் சென்றாள். படியருகே மரப்பலகைகள் ஒட்டுப் போட்ட கதவு மூடியிருந்தது. சுமதி அந்தக் கதவைத் தன் கையால் மெல்லத் தட்டினாள். பிறகு கொஞ்சம் பலமாகத் தட்டினாள்.

வாணவெடி ஓசையில் அவள் தட்டும் ஒலி அவள் காதுக்கே கேட்கவில்லை. சுமதி இரண்டு கைகளால் தட்டினாள். தொடர்ந்து தட்டினாள். வெடியோசை ஒரு சில விநாடிகள் நின்ற போது அவள் கதவைத் தட்டும் ஒலி பலமாகக் கேட்டது. மீண்டும் வெடிகள் வெடிக்கும் ஓசை தொடர்ந்தது.

அந்தச் சில விநாடிகளின் இடைவெளியில் மண்டபத்துக்குள் இன்னமும் தூங்காமல் படுத்துக் கொண்டிருந்த செங்கோடனின் காதில் கதவை யாரோ தட்டுவது தெளிவா

கக் கேட்டது. அவன் எழுந்து வந்து கதவைத் திறந்தான்.

வெளியே சுமதியைப் பார்த்ததும் வியப்படைந்து, "என்ன சுமதி? வாண வேடிக்கையைப் பார்க்க என்னையும் கூப்பிட வந்தாயா?" என்று கேட்டான்.

"இல்லை" என்று மறுத்த சுமதி, கோயிலின் மதில்மேல், தான் கண்ட காட்சியைச் சொன்னாள்.

"அப்படியா? கோயிலுக்குள்ளே வெண்கலச் சிலைகள் இல்லையே. இவங்க ஒருவேளை மூல விக்கிரகத்தையே பெயர்த்து எடுக்கிற திருடங்களா இருப்பாங்களோ? எதுக்கும் கோயிலுக்குள்ளே போய்ப் பார்ப்போம்!"

செங்கோடன் சொல்லிவிட்டு உள்ளே போய்ச் சாவியை எடுத்து வந்தான். சுமதி, "வீட்டில் அம்மா இல்லையா?" என்று கேட்டாள்

செங்கோடன் சொல்லிவிட்டு உள்ளே போய்ச் சாவியை எடுத்து வந்தான். சுமதி, "வீட்டில் அம்மா இல்லையா?" என்று கேட்டாள்.

"இல்லை. அவங்களும் வாண வேடிக்கை பார்க்கப் போயிட்டாங்க. நானும் கொஞ்ச நேரம் வெளியே இருந்து பார்த்தேன். கண்ணைக் கவரும் வண்ண, வினோதம்! எனக்கும் அருகே போய்ப் பார்க்க ஆசைதான்! ஆனால் மண்டபத்தை விட்டுட்டுப் போகக்கூடாது! அதனாலே போகலே! தாத்தா ஊரிலே இருந்திருந்தா நானும் உன்னைப் போல வாண வேடிக்கை நடக்குற இடத்துக்கு வந்திருப்பேன்."

இருவரும் பேசிக் கொண்டே கோயிலை அடைந்தார்கள்.

செங்கோடன் பூட்டைத் திறந்து கதவை மெல்லத் திறந்தான். கொஞ்சம் வழிவந்ததும் இருவரும் உள்ளே சென்றார்கள். மெதுவாக நடந்தார்கள். வலப்பக்கப் பிராகார வழியை



அடைந்தார்கள். அங்கே ஒரு சிறிய கோயில். அது அனுமார் கோயில். கோயிலைச் சுற்றி வரும் வழியின் நடுவில் அந்த அனுமார் கோயில் இருந்தது. இருவரும் அதனருகே சென்றனர். அதைக் கடந்து செல்லவில்லை. ஏனென்றால் அக்கோயிலின் எதிரே சிறிது தூரத்தில் அந்த இருவர் இருப்பது தெரிந்தது!

இருவரும் அனுமார் கோயிலின் பின்னே நின்று பார்த்தனர்.

வானத்தில் பிறைச்சந்திரன்தான். அதனால் பிராகாரத்தின் இருட்டை விலக்க முடியவில்லை. ஆனால், சிறிது தூரத்தில் நடக்கும் வாண வேடிக்கை, வானத்தை ஒளிமயமாக்கிய போது, அந்த ஒளி கோயிலுக்குள்ளேயும் பாய்ந்தது. தோன்றித் தோன்றி மறையும் அந்த ஒளியில் இரண்டு பேர் சுற்றுப் பிராகார வழியில் எதையோ தோண்டுவது தெரிந்தது.

''ஒருவேளை ஊரார் சொல்லும் புதையல் அங்கேதான் இருக்கிறதோ? அதை அறிந்துதான் இருவரும் அங்கே தோண்டுகிறார்களோ?'' — இருவரும் ஒரே நேரத்தில் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்ட பார்வை இப்படிக் கேட்டது.

ஒரு நிமிடத்தில் தோண்டுவது நின்றது. ஒருவன் அவனருகே வைத்திருந்த பையில் எதையோ எடுத்து, கொஞ்சம் முன்பு தோண்டிய குழியில் புதைத்தான். பிறகு ஒரு நாலு முழம் தள்ளிச் சென்று மீண்டும் அவர்கள் தோண்டினார்கள். தோண்டிய குழியில் முன் போலவே பையிலிருந்து எதையோ எடுத்துப் புதைத்தான்.

இவர்கள் புதையல் எடுக்க வந்தவர்களா? புதைக்க வந்தவர்களா? — சுமதியும் செங்கோடனும் குழப்பமடைந்தனர்.

இதற்குள் அவர்கள் மற்றொரு குழியைத்தோண்டினர். ஒருவன் பைக்குள் இருந்து ஒரு பொருளை எடுத்தான்.



அதே சமயம் வானத்தில் மிகப் பெரிய வர்ண ஜாலம் தோன்றியது. அது சில நொடிகள் அதிகமாகவே நீடித்தது. அந்த ஒளியில், பைக்குள் இருந்து எடுத்த பொருளைச் சுமதியும் செங்கோடனும் தெளிவாகப் பார்த்தனர்.

சுமதி அதைக் கண்டதும் நடுங்கினாள். மெதுவாக, செங்கோடன் காதில், ''அது வெடி'' என்றாள். செங்கோடன், அது தனக்கும் தெரிகிறது என்பதைத் தெரிவிக்கத் தலை அசைத்தான். பிறகு சுமதியின் கையைப் பிடித்து இழுத்துத் தன் பின்னே வரும்படி சாடை காட்டிவிட்டு, வாயிலை நோக்கி நடந்தான். சுமதி அவனைத் தொடர்ந்தாள்.

இருவரும் கோயிலின் வெளியே வந்த பிறகு பேசினர்.

''செங்கோடா! அவர்கள் கோயிலின் உள் இடத்தை வெடி வைத்துத் தகர்க்கப் போகிறார்கள். இருவரில் ஒருவன், சினிமாதயாரிப்பாளன்தான். இப்போது என்ன செய்வது?''

''கோயிலின் சுற்றுவழியை ஏன் தகர்க்கப் பார்க்கிறார்கள் என்பது தெரியவில்லை. காரணம் எதுவாக இருந்தாலும் இதைத் தடுக்க வேண்டும். தாத்தா கூட ஊரில் இல்லை. சுமதி ஒரு வழி சொல்லு!''

''நான் போய் ஊர் மக்களை உதவிக்குக் கூப்பிடட்டுமா? மக்கள் கோயிலுக்கு அருகிலே கூடியிருக்காங்களே! பழைமையான கோயிலை வெடி வச்சுத் தகர்க்கப்பார்க்கிறாங்கன்னுசொன்னா துணை செய்ய ஓடி வர மாட்டாங்களா?''

''சரி சுமதி, நீ போய் மக்களிடம் விஷயத்தைச் சொல்லி அழைச்சுட்டு வா. நான் இங்கேயே இருந்து இவங்களைக் கவனிக்கறேன்.''

சுமதி அங்கிருந்து ஓடத் தொடங்கினாள். சில அடி தூரம் சென்றதும், ஓட்டத்தை நிறுத்தினாள். அவளுக்கு சைக்கிள் நினைவு வந்துவிட்டது. கோயிலின் அருகே நிறுத்தியிருந்த அந்த சைக்கிளில் ஓர் ஆண் பிள்ளை போலத் துள்ளி ஏறினாள். சைக்கிள், வாண வேடிக்கை நடக்கும் இடத்தை நோக்கி, மற்றொரு வாணம் போல வேகமாகச் சென்றது.

செங்கோடன் உடனே கோயிலின் மதிலின் மேலே ஏறினான். எந்தெந்த இடத்தில் மதில் மேல் ஏற வசதியான குழிகள், பொத்தல்கள் உண்டு என்பது அவனுக்குத் தலைகீழ் பாடம். மதிலில் ஏறி மெல்ல நடந்து, அனுமார் கோயிலின் எதிரே நின்றான். அங்கிருந்து கோயிலுக்குஉள்ளே இருக்கும் இருவரையும் பார்க்க முடிந்தது. மறுபுறம் திரும்பினால் சிறிது தூரத்தில் மக்கள் கூட்டம் இருப்பதையும் காண முடிந்தது.

கோயிலுக்குள்ளே இருந்த இருவரும், மேலும் இரண்டு வெடிகளைப் புதைத்தார்கள். பிறகு நீண்ட ஒயர் போன்ற திரியினால் வெடிகளை இணைத்தபடி மதிலோரம் வந்தனர். செங்கோடன் உடனே பின் வாங்கிச் சென்றான். ஆனால், மதிலின் மீதே இருந்தான்.

இருவரும் அந்த மதிலின் மீது ஏறினர். குறுந்தாடிக்காரன் மதிலின் மீது நிற்க, மற்றொருவன் மதிலின் வெளிப்புறம் குதித்தான். வெடிகளை இணைத்த திரியின் சுருள் மதிலைக் கடந்துகீழேவந்து, அவன் கரத்திலிருந்தது. அந்தத்திரியைத்தரையைத்தொடுமளவுவிட்டுவிட்டு, வெட்டிவிட்டான். பிறகு, ''என் வேலை முடிந்தது!'' என்று சொன்னான். மெதுவாகச் சொன்னாலும், அது செங்கோடன் காதில் விழுந்தது. மதில் மேல் நின்ற குறுந்தாடிக்காரன், தன் கைகடிகாரத்தின் பொத்தானை அழுத்தினான். கடிகாரத்தில் ஒளி தெரிந்தது. மணி 11.55. ''இன்னும் அஞ்சு நிமிஷம் இருக்கு. பொறு, நான் சொல்லறப்போ பத்த வை'' என்றான்.

இதைக்கேட்ட செங்கோடன் துடித்தான். ''இன்னும் ஐந்து நிமிடம். அதற்குள்ளே சுமதி ஊர் மக்களை அழைத்துக் கொண்டு வந்துவிடுவாளா?'' என்று நினைத்தபடி, அந்தத் திசையைப் பார்த்தான்.

அதே சமயம் சுமதி ஊர் மக்களிடம், ''ஐயா! ஆபத்து! யாரோ பெருமாள் கோயிலை வெடி வைச்சுத் தகர்க்கப் பார்க்கறாங்க. வாங்க வாங்க'' என்று கத்திக் கொண்டிருந்தாள்.

மக்களின் கவனம் வாண வேடிக்

கையில் பதிந்திருந்ததால் சுமதி சொல்வதைக் காது கொடுத்துக் கேட்கவில்லை. சிலர், அவள் முன்னே நின்று வேடிக்கை பார்க்க வழி கேட்கிறாள் என்று நினைத்துக் கொண்டு கொஞ்சம் ஒதுங்கி வழிவிட்டனர்.

சுமதியின் குரல் வெடிச் சத்தத்தில் கலந்து விட்டதே தவிர, மற்றவரின் காதில் புகவில்லை.


மதில்மேல் நின்றிருந்த செங்கோடன் வெகு ஆவலோடு வாண வேடிக்கை நடக்கும் திசையைப் பார்த்துக் கொண்டிருந்தான். ஊர் மக்கள், சுமதி சொல்வதைக் கேட்டு அலை உடைத்த வெள்ளம் போல் அந்தக் கோயிலை நோக்கி ஓடிவருவார்கள் என்று எதிர்பார்த்து ஏமாந்தான்.

"அஞ்சு நிமிஷம் இருக்குன்னு குறுந்தாடிக்காரன் சொன்னானே! எத்தனை நிமிஷமாச்சோ? எந்த நேரமும் அவன் திரியைப் பற்ற வைக்கலாம். அதற்குள் இதைத் தடுக்கணும். எப்படித் தடுப்பது?"


சில நொடிகள் யோசித்த செங்கோடன் மதில் மேலேயே நடந்து, வாயில் கோபுரத்துப் பக்கம் சென்றான். அங்கிருந்து திரும்பிக் குறுந்தாடிக்காரனைப் பார்த்த போது, அவன் கையையும் தலையையும் அசைத்தபடி ஏதோ சொல்வது திடீரென்று பரவிய வாண வெடி ஒளியில் தெரிந்தது. அந்த ஒளி வெள்ளம் வானில் படர்ந்திருந்த போதே, குறுந்தாடிக்காரன் மதிலிலிருந்து அதன் அருகே நின்றிருந்த வேனின் கூரை மீது தாவிக் குதித்ததும், தரையில் நின்றிருந்தவன் திரியைப் பற்ற வைப்பதும் தெரிந்தன.

"பெருமாளே! மாயக்கண்ணா!" என்று மனத்தில் கூறியபடி, செங்கோடன் கோபுரத்தின் உள்ளிடம் நோக்கி ஓட, திரியில் பற்றிய நெருப்பு சுறுசுறுவென்று எரிந்தபடி, வேகமாகச் சென்று, மதில் மேல் ஏறிக் கொண்டிருந்தது.

(தொடரும்)



கடவுளைக் கண்டவர்கள்



யானை எடுத்து வந்த அரசர்!

-தேவி நாச்சியப்பன்

"வாழ்க! வாழ்க! இந்நாட்டின் மன்னராகும் இளைஞரே வாழ்க! யானை தேர்ந்தெடுத்த அற்புத அரசே, வாழ்க!" என்று முழக்கமிட்டபடி, அந்த நாட்டு அமைச்சர்களும், அதிகாரிகளும் மக்களும் தெருவில் வந்து கொண்டிருந்தனர். அவர்களுக்கு முன்பு கண்கள் கட்டப்பட்ட ஒரு யானையும், அதன்மேல் அமர்ந்த ஓர் இளைஞரும் சென்று கொண்டிருந்தனர்.

அந்த இளைஞர் சீரும் சிறப்பு மிக்க வணிகர் குலத்தில் பிறந்தவர். பெயர் மூர்த்தியார். கடவுள் பக்தி மிகுந்தவர். பாண்டிய நாட்டில் உள்ள மதுரையில் வாழ்ந்து வந்தார். தினமும் அங்குள்ள கோயிலுக்குச் சென்று சந்தனக் கல்லில் சந்தனம் அரைத்து சுந்தரேசப் பெருமானுக்குச் சந்தனக் காப்புச் செய்ய உதவி வந்தார். நாள் தவறாமல் அவர் இந்தப் பணியைச் செய்து வந்தார். இப்படிச் செய்வதிலே அவருக்கு அளவில்லாத மகிழ்ச்சி.

அக்காலத்தில், பாண்டிய நாட்டை கர்நாடகத்தைச் சேர்ந்த ஒரு மன்னன் ஆண்டு வந்தான். அவன் பாண்டிய மன்னனோடு போர் புரிந்து, அந்தப் போரிலே வெற்றி பெற்றுப் பாண்டிய நாட்டைக் கைப்பற்றினான். மதுரை நகரிலே இருந்து அரசாட்சி செய்து வந்தான்.

அவன் சமண மதத்தைச் சேர்ந்தவன். சிவனை வணங்கும் பக்தர்களுக்குப் பல வகையிலும் தொல்லை கொடுத்து வந்தான். சமண மதத்தில் சேரும்படி அவர்களை வற்புறுத்தினான். மூர்த்தியாரையும் சமணராக்க முயன்றான். முடியவில்லை. அதனால், கோபம் கொண்ட அரசன் மூர்த்தியாருக்குக் கெடுதல் செய்யத் துணிந்தான்.

சுந்தரேசப் பெருமானுக்குத் தினமும் சந்தனம் அரைத்துக் கொடுப்பது மூர்த்தியாரின் வழக்கம் என்பதை அரசன் அறிந்தான். அவருக்குச் சந்தனக் கட்டைகள் கிடைக்காதபடி செய்தான். உள்ளூரிலும், பக்கத்து ஊர்களிலும் உள்ள சந்தனக் கட்டைகளை வாங்கி, அரண்மனையில் பதுக்கி வைத்தான். வீடுகளில் உள்ள சந்தனக் கட்டைகளையும் பறிமுதல் செய்தான்.

இப்படியெல்லாம் செய்தால், சுந்தரேசருக்குச் சந்தனக்காப்பு நடத்த முடியாமல் மூர்த்தியார் துன்பப்படுவாரல்லவா?

மூர்த்தியார் பல இடங்களுக்குச் சென்று தேடியும் சந்தனக் கட்டை கிடைக்கவில்லை. இதனால், அவர் மிகவும் வேதனைப்பட்டார். என்ன செய்வது என்று யோசித்தார். அவருக்கு ஓர் எண்ணம் தோன்றியது. ''சந்தனக் கட்டைதானே கிடைக்காமல் போயிற்று? சந்தனம் அரைக்கும் கை என்னிடம்தானே இருக்கிறது? கட்டையை அரைக்க முடியாவிட்டாலும், இந்தக் கையை அரைக்கலாமே!'' என்று நினைத்தார். உடனே, சந்தனக் கல்லில் தன் முழங்கையை வைத்து நன்ருகத் தேய்த்தார். வெகு நேரம் தேய்த்தார். அப்போது அவருடைய முழங்கையிலிருந்து இரத்தம் வழிந்தது. தொடர்ந்து அவர் முழங்கையை வைத்துத் தேய்த்துக் கொண்டேயிருந்தார். தேய்க்கத் தேய்க்க நரம்பும் எலும்பும் வெளிப்பட்டன. மூர்த்தியார் வலியைப் பொருட்படுத்தவில்லை. தொடர்ந்து தேய்த்துக் கொண்டேயிருந்தார்.

அப்போது ஒரு குரல் கேட்டது. ''அன்பா, போதும் நிறுத்து. என் மேல் கொண்ட பக்தியினல், நீ இத்தகைய தியாகத்தைத் துணிந்து செய்தாய். உனக்கு மிகுந்த துன்பத்தைக் கொடுத்த மன்னன் அழியப் போகிருன். நீ இந்த நாட்டின் மன்னன் ஆவாய். மக்கள் இதுவரை பட்ட துயரங்களையெல்லாம் நீக்கி, நல்லமுறையில் நீ செங்கோல் செலுத்துவாயாக'' என்று இறைவன் கூறக் கேட்டு மூர்த்தியார் மகிழ்ந்தார். அப்போதே புண்பட்டிருந்த அவரது கை முன்போல் நல்ல நிலைமை பெற்றது. இரத்த நாற்றம் மாறி அவர் உடல் முழுவதும் சந்தன மணம் வீசியது. இறைவனின் கருணையை எண்ணி எண்ணி மெய் மறந்து நின்ருர்.

அன்று இரவே கர்நாடக மன்னன் இறந்தான். அவனுக்கு மகன் இருந்திருந்தால், அந்த மகனுக்குப் பட்டம் கட்டி அரசனாக்கியிருந்திருப்பார்கள். ஆனால், அவனுக்குப் பிள்ளைகள் யாரும் இல்லை. அமைச்சர்கள் கூடி ஆலோசனை செய்து ஒரு முடிவுக்கு வந்தனர். அந்த முறைப்படி, பட்டத்து யானையை நன்கு அலங்கரித்து அதன் கண்களைக் கட்டித் தெருவில் விட்டார்கள். அது யாரைத் தன் முதுகில் எடுத்துக்கொண்டு வருகிறதோ அவரையே அரசராக ஏற்றுக்கொள்வதெனத் தீர்மானித்தார்கள்.

அந்த யானை மதுரை நகரத் தெருக்களின் வழியாகச் சென்று, கோயில் கோபுரத்துக்கு முன்னுல் வந்ததும் நின்றது. அப்போது கோயிலுக்கு வெளியே நின்று கொண்டிருந்த மூர்த்தியாரை நெருங்கியது. தலை தாழ்த்தி அவரை வணங்கியது. பிறகு, அவரை மெல்லத் தூக்கித் தன் முதுகின் மேல் வைத்துக் கொண்டது. இக்காட்சியைக் கண்டுதான், அமைச்சர்களும், அதிகாரிகளும், மற்றவர்களும் இந்தக் கதையின் தொடக்கத்தில் கூறியபடி முழக்கமிட்டார்கள்.

யானை நேராக அரண்மனைக்குச் சென்றது. அவரை யானையிலிருந்து கீழே இறக்கினர். எல்லாரும் அவரை வணங்கி, ''தாங்கள்தான் திருமுடி தரித்து இந்நாட்டை ஆட்சி புரிய வேண்டும்'' என்று வேண்டினர்.

'இறைவன் திருவுளப்படியே எல்லாம் நடக்கின்றன' என்பதை உணர்ந்த மூர்த்தியார், ''மக்களின் துயரத்தைத் தீர்க்கவும், சைவ நெறி தழைக்கவும் நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்கிறேன்'' என்ருர்.

அரசராகப் பொறுப்பு ஏற்ருலும் அவர் மணி முடிக்குப் பதிலாகச் சடை முடியும், அணிகலன்களுக்குப் பதிலாக உருத்திராட்சமும், சந்தனப் பூச்சுக்குப் பதிலாகத் திருநீறும் அணிந்து, குடிமக்களுக்கு ஒரு குறையும் இன்றி அரசாட்சி செய்து வந்தார்.

இந்த மூர்த்தியார்தான் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராகப் போற்றப்படும் மூர்த்தி நாயனர்!

> திருத்தம்: சென்ற இதழில் 'கலியனுர்' என்று இருப்பது தவறு. 'கலயனுர்' என்பதே சரி. தவறுக்கு வருந்துகிறேம்.

பிருந்தாவனக் கதையரங்கம்

இரு நண்பர்கள்



ந.ஜெயஸ்ரீ (1324)

முத்துப் பட்டணம் என்னும் ஊரில் கண்ணன், முருகன் என்னும் இரு சிறுவர்கள் வசித்து வந்தனர். கண்ணனும், முருகனும் அந்த ஊரில் உள்ள இரு குடியானவர்களின் பிள்ளைகள்.

கண்ணன் நன்றாகப் படிப்பவன், முருகன் அக்கறையோடு படித்தாலும், அவனுக்கு நிறைய மதிப்பெண்கள் கிடைப்பதில்லை. கண்ணனுக்கு, தான் நன்றாகப் படிப்பதாய் கர்வம் இருந்தது. பெரியோர்களை மதிப்பதில்லை. தன்னைவிட நன்றாகப் படிக்காதவர்களைக் கேலி செய்வான். துன்பம் கொள்ள வைப்பான். முருகன் நிறைய மதிப்பெண்கள் பெறாவிட்டாலும் அடக்கமாக இருப்பான். முருகனையும், கண்ணன் கேலி செய்வான். ஆனால், அதை முருகன் பொருட்படுத்த மாட்டான்.

ஒருநாள் முருகன், "கண்ணா, நீ நன்றாகத்தான் படிக்கிறாய். ஆனாலும் நீ கர்வம் கொள்வது சரியல்ல. அடக்கமும் ஒழுக்கமும்தான் ஒருவனுக்கு வாழ்வில் மிகவும் அவசியம்" என்றான்.

"போடா, நீ நன்றாகப் படிக்கவில்லை என்பதால் பொறாமை கொண்டு எனக்கு அறிவுரை சொல்ல வந்துவிட்டாயாக்கும்" என்று அவனை அவமதித்தான்.

பல வருடங்கள் சென்றன. கண்ணன் யாரையும் மதிப்பதில்லை. அதனால் அவனுக்கு யாரும் வேலை கொடுக்கவில்லை.

முருகன் ஒரு வணிகரிடம் வேலைக்குச் சேர்ந்தான். நாணயமாகவும் விசுவாசமாகவும் நடந்து கொண்டான். அவனது அடக்கமும், ஒழுக்கமும் அனைவரையும் கவர்ந்தன. அவன் நியாயமாகப் பொருள்களை விற்றான். அதனால் அவன் கடையைத் தேடி மக்கள் அதிகமாக வந்தார்கள். முருகனின் நேர்மையையும், திறமையையும் கண்டு மகிழ்ந்த வணிகர், அவனைத் தன் பங்காளியாக்கிக் கொண்டார். இதனால் அவன் பெரிய செல்வந்தன் ஆகிவிட்டான்.

முருகன் ஒருநாள் தன் மனைவியையும் குழந்தையையும் அழைத்துக் கொண்டு காரில் கடற்கரைக்குச் சென்றான். காரிலிருந்து இறங்கியதும் ஒரு யாசகன் அவனிடம் வந்து பிச்சை கேட்டான். முருகன் அவனை நிமிர்ந்து பார்த்தபோது திடுக்கிட்டான். அவன் வேறு யாரும் அல்ல! கண்ணனேதான்! முருகன் கண்ணனைப் பார்த்து, "நீ இந்த நிலைமைக்கு வந்ததன் காரணம் என்ன?" என்று கேட்டான்.

"நான் என்னுடைய கர்வத்தால் பல வேலைகளை இழந்து இந்த நிலைமைக்கு வந்துவிட்டேன்" என்று கண்ணன் கவலையோடு கூறினான்.

"கவலைப்படாதே! என்னுடைய சொல்லை அப்போதே கேட்டிருந்திருந்தால் இந்த நிலைமைக்கு நீ வந்திருக்க மாட்டாய். என் முதலாளியிடம் சொல்லி எங்கள் கடையில் உன்னையும் வேலைக்குச் சேர்த்துக் கொள்ள வழி செய்கிறேன்" என்று முருகன் கூறினான்.

கண்ணன் கண்ணீர் பெருக நன்றி கூறினான்.



ராமுவும் மணியும் பேசிக் கொண்டிருந்தனர்.

மணி கேட்டான்: "அது எப்படிடா நீ ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை அல்லது சனிக்கிழமையும் தவறாமல் சினிமாவிற்குச் செல்கிறாய்?"

"காசு கிடைக்குது, போகிறேன்" என்றான் ராமு.

"எங்க வீட்டிலே கேட்டால் தர மாட்டாங்க! படிடா, படிடான்னு தொந்தரவு பண்ணுவாங்க. எப்போதாவது பக்திப் படம் வந்தால் கூட்டிக்கிட்டுப் போவாங்க. உனக்கு எப்படிடா காசு கிடைக்குது? உங்க அம்மா அப்பா கேட்டால் உடனே தருவாங்களா? எங்கேடா போனே அப்பன்னு கேட்க மாட்டாங்களா?"

"கேட்பாங்கதான்! அதுக்கு நான் மணி வீட்டிற்குப் போய்ப் படிக்கிறேன்னு சொல்லிட்டு, பேருக்கு ஒரு நோட்டை எடுத்துக்கிட்டுப் படத்துக்குப் போயிடுவேன். காசு கேட்டாலும் தர மாட்டாங்க. அதனாலே மளிகை சாமான் வாங்கத் தருகிற காசுலே பத்துக் காசு, இருபது காசு அட்ஜஸ்ட் பண்ணணும்டா."

"சே! சே! எனக்குப் பயமா இருக்குடா!"

"என்னடா பயம்? ராமு வீட்டுக்குப் படிக்கப் போகிறேன்னு சொல்லு. என்னைக் கேட்டால் ஆமாம் போட்டு வைக்கிறேன்."

மணியினுடைய தாயார் அன்று காலை மணியை அழைத்து, "மணி, தெருக்கோடியிலே உள்ள பிள்ளையாருக்கு உண்டியலிலே ஒரு ரூபாய் போட்டிடு! முன்பு நான் வேண்டிக்கிட்டது" என்று சொல்லி ஒரு ரூபாய் கொடுத்தார்.

வாசலில் உட்கார்ந்திருந்த தந்தை, "எங்கே செல்கிறாய்?" என்று பார்வையால் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லிவிட்டு நடந்தான், மணி. அவன் மனம் பலவாறு எண்ணமிட்டது.

'தரை டிக்கெட் ' வாங்கணும்னா குறைஞ்சது ஒரு ரூபாய் வேணும். அந்தக் காசு சுலபமா மொத்தமாக் கையிலே கிடைச்சிருக்கு. உண்டியலிலே காசு போடலேன்னு அம்மாவுக்குத் தெரியவா போகுது? பிள்ளையார், 'ஏண்டா காசு போடலே'ன்னு தான் கேட்பாரா? இன்னைக்கு எனக்குப் பிடிச்ச படம் போட்டிருக்கான். ராமு வீட்டுக்குப் படிக்கப் போறேன்னு சொல்லிட்டு மேட்னி ஷோவுக்குப் போயிட வேண்டியதுதான். ராமுவைக் கேட்டால் 'எங்க வீட்டுக்கு வந்து படிச்சான்' என்று சொல்லி விடுவான் என்று எண்ணினான்.

அப்போது, கோடி வீட்டு மாமி அவனை அழைத்து, "மணி, தயவு செய்து ஒரு ரூபாய் மல்லி வாங்கி வாப்பா" என்று கேட்டதும், மணி காசை வாங்கிக் கொண்டு நடந்தான்.

மல்லிகைப்பூ வாங்கிவந்து கொடுத்

ததும், மாமி, "தம்பி, நான் சொன்னது கொத்துமல்லி. தயவு செய்து இதைக் கொடுத்துவிட்டு கொத்துமல்லி வாங்கி வாப்பா" என்றதும் மாமியை எதிர்த்துப் பேச முடியாமல், பூக்காரனைத் தேடினான். கடைசியில் அடுத்த தெருவில் அவனைக் கண்டு பிடித்து, பூவைக் கொடுத்துப் பணம் கேட்டான். பூக்காரன் மறுத்து விட்டான்.

வருத்தத்தோடும், சோர்வோடும் திரும்பி வரும்போது அவன் கண்களில் பிள்ளையார் பட்டார்.

'என்னை ஏமாற்ற நினைத்தாயே! இப்போது பார்த்தாயா?' என்பது போல் இருந்தது அவர் பார்வை.

பிள்ளையாரைப் பார்த்தவுடன் மணிக்கு ஒரு யோசனை பளிச்சிட்டது.

பூவை, பிள்ளையாருக்குச் சாத்தினான். 'என்னை மன்னித்துவிடு' என்று மனமுருகப் பிரார்த்தித்தான். பின் தன் கையிலிருந்த ரூபாயில் கொத்துமல்லி வாங்கிக் கொண்டு, திருந்திய பையனாய் வீட்டை நோக்கி நடந்தான்.

அலெக்சாண்டர் கிராம்பெல்



இவருக்கு ஒன்றா, இரண்டா? கோடிக்கணக்கான நினைவுச் சின்னங்கள் உண்டு. இவர் பிறந்த ஸ்காட்லாந்து நாட்டில் மட்டுமல்ல; உலகத்தின் பல பாகங்களிலும் அந்த நினைவுச் சின்னங்களைக் காணலாம். ஆம், பெரும்பாலான அலுவலகங்களிலும், ஏராளமான வீடுகளிலும் மேஜை மீது அல்லது நாற்காலி மீது காணப்படுகிறதே டெலிபோன், அது என்றென்றும் இவரை நினைவுபடுத்தக் கூடிய ஓர் அற்புதமான சின்னம் தானே!

ஸ்காட்டில் பிறந்த இவர் லண்டனில் படித்துப் பிறகு கனடாவில் குடியேறினார். முதலில், காது கேளாதவர் பள்ளியில் இவர் ஆசிரியராக வேலை பார்த்தார். பிறகு காது கேளாமலும் வாய் பேசாமலும் உள்ளவர்களின் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கும்பொறுப்பைஏற்றார்.

சிறு வயது முதலே இவருக்கு விஞ்ஞான மனப்பான்மை இருந்தது. ஏதேனும் ஆராய்ச்சி செய்து கொண்டேயிருப்பார். ஒலியின் அதிர்வைப் பதிவு செய்யக்கூடிய மின்கருவியை அமைக்கும் முயற்சியில் இவர் ஈடுபட்டார். வீணையின் தந்தியை மீட்டினால், அது அதிர்ந்து ஒலி உண்டாகிறது. இதே போல ஒருவர் பேசினால், காற்றில் ஒலி அலைகள் பரவுகின்றன. பேச்சின் மூலம் எழும் ஒலி அலைகளை மின் சக்தியாக மாற்ற முடியும். இந்த அடிப்படையில் இவர் சிந்தித்தார். இவருக்கு வாட்சன் என்பவர் துணையாக இருந்தார். டெலிபோனை இவர் கண்டுபிடித்ததும் முதல் முதலாக டெலிபோனில் இவர் பேசிய வார்த்தைகள்: 'Mr. Watson, come here please' (மிஸ்டர் வாட்சன், தயவு செய்து இங்கே வருக) என்பதுதான்.

டெலிபோனைக் கண்டுபிடித்த இவர், போட்டோஃபோன் (Photophone) கிராஃபோபோன், (Graphophone) முதலியவற்றையும் அமைத்தார். வானில் பறக்கும் ஆராய்ச்சியிலும் ஈடுபட்டார்.

பிருந்தாவனம்

ஞாபகமறதி



ஒரு ஞாபக மறதிப் பெரியவர் தன்னுடைய டாக்டர் நண்பரின் வீட்டுக்குப் போனார். இருவரும் நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். கடைசியில் விடைபெற்றுக் கொண்டு பெரியவர் புறப்படும்போது, "உங்கள் குடும்பத்தினர் அனைவரும் நலம் தானே?" என்று டாக்டர் விசாரித்தார்.

"அட கடவுளே, இப்பத்தான் ஞாபகம் வருது. வீட்டில் என் மனைவி மயக்கம் போட்டு விழுந்து விட்டாள். உங்களை அழைத்துக் கொண்டு போகத்தான் வந்தேன்" என்றார் பெரியவர்.

— செ.கணேஷ்பாபு (7216), ஆடுதுறை.

GOKULAM




G = Gratitude (விசுவாசம்)
O = Obedience (பணிவு)
K = Knowledge (அறிவு)
U = Unity (ஒற்றுமை)
L = Love (அன்பு)
A = Attempt (முயற்சி)
M = Magnificence (சிறப்பு)

— ஏ. பி. திருமகள்செல்வி (13,331) உசிலம்பட்டி.

கலப்படப்பெயர்கள்

ஆங்கிலத்தில் ஓர் எழுத்துடன் சில தமிழ் எழுத்துக்களைச் சேர்த்து, சில பெயர்களைக் கண்டுபிடித்தேன், அவை:




வேடிக்கையாகவே இதைக் கூறினேன். இப்படிக் கலப்படத்தில் உங்கள் பெயரைத்தயவுசெய்து எழுதி விடாதீர்கள்.

— கே. நரசிம்மன் (7378), ஒசூர்.

கோட்டையில்முடியும் ஊர்கள்


அருப்புக்கோட்டை
ஆதனக் கோட்டை
பட்டுக் கோட்டை
பாளையங் கோட்டை
கந்தர்வ கோட்டை



புதுக் கோட்டை
சூரக் கோட்டை
எஸ். எஸ். கோட்டை

— ச. விஜயகுமார் (14,071), மதுரை — 2.

நீரில் பலவகை



குளிர்ச்சி உடையது தண்ணீர்;
வெம்மை உடையது வெந்நீர்;
தென்னை மரம் தருவது இளநீர்;
நாள்தோறும்சிலர் பருகுவது தேநீர்
அழுதால் வருவது கண்ணீர்;
வாசனை மிகுந்தது பன்னீர்;
நாம் கழிப்பது சிறுநீர்;
ஆவினங்கள் குடிப்பது கழுநீர்.

— க. ஸ்ரீராம் (8477) நெய்வேலி.

எப்படித் தூக்கும்?



இறந்து கிடக்கும் எலியை, பருந்து எப்படித் தூக்கும்? காகம் எப்படித் தூக்கும்?

பருந்து கால்களால் தூக்கும்.
காகம் அலகால் தூக்கும்.

— ப. விஜயகுமார் (241), சென்னை — 7.

மொத்தம் லட்டு எத்தனை?

ஒரு வீட்டில் இருந்த மூன்று பெண்கள் சேர்ந்து ஒருநாள் இரவு லட்டு செய்தார்கள். லட்டு செய்து முடித்த பின் மூவரும் தூங்கி விட்டனர். நடுவிலே ஒருத்தி எழுந்து மொத்தமிருந்த லட்டுகளை மூன்றாகப் பங்கிட்டாள். மீதம் இருந்தது ஒரு லட்டு. அதைக் காவலுக்கு இருந்த நாய்க்குப் போட்டு விட்டு, மூன்றில் ஒரு பங்கைத் தின்று விட்டுத் திரும்பப் படுத்துக் கொண்டாள். சிறிது நேரம் சென்று இன்னொருத்தி எழுந்தாள். அவள் அங்கிருந்த லட்டுகளை மூன்றாகப் பிரித்து, மீதமிருந்த ஒரு லட்டை நாய்க்குப் போட்டுவிட்டு, ஒரு பங்கைத் தின்று விட்டாள். அவள் படுத்த சிறிது நேரத்தில் மூன்றாவது பெண் எழுந்து அங்கிருந்த லட்டுகளை மூன்றாகப் பங்கு வைத்து மீதமிருந்த ஒரு லட்டை




நாய்க்குப்போட்டுவிட்டு, ஒருபங்கைத் தின்றுவிட்டுத் தூங்கிவிட்டாள். மீதம் இருந்த லட்டுகள் எத்தனை? மொத்தம் தயாரித்த லட்டுகள் எத்தனை?

விடை: மொத்தம் தயாரித்தவை 25
மீதம் இருந்தவை 6

— மூ. கா. சித்ரா (12,283), காவேரிப்பட்டணம்.

5 வரியில் இராமாயணம்



தியாகத்தால் சிறந்தான் இராமன்
கற்பால் உயர்ந்தாள் சீதை
பக்தியால் முக்தி பெற்றான்
அனுமன்
காமத்தால் அழிந்தான்
இராவணன்.
புத்திர சோகத்தால் இறந்தான்
தசரதன்.

— ப. தினேஷ்குமார் (3321),
புரசைவாக்கம்.

மலை மலையாம்

பஞ்சமலை, கொடகரை மலை, ஏரி மலை, கோட்டூர் மலை, நாரத்தையான் மலை, தொட்டமஞ்சு மலை, மஞ்சு கொண்ட மலை, சிக்க மஞ்சு மலை, தொழுவமலை — இத்தனை மலைகளையும் பின்னிப் பிணைந்து தமிழ்நாட்டில் உள்ள பகுதி எது தெரியுமா? தர்மபுரி மாவட்டம்தான்!

— அரங்கு சுரமுத்து (3,728),
திருமழபாடி.



The following particulars regarding the ownership of 'GOKULAM' the Tamil Monthly newspaper, are published, as called for by Rule 8 of the Registration of Newspapers (Central) Rules 1956.

FORM IV

1. Place of Publication: Madras
2. Periodicity of Publication: Monthly
3. Name of Printer: V. Murali
   Nationality: Indian
   Address: AA-117, Shanthi Colony,
   Anna Nagar,
   Madras-600 040
4. Name of Publisher: V. Murali
   Nationality: Indian
   Address: AA-117, Shanthi Colony,
   Anna Nagar,
   Madras-600 040
5. Name of Editor: K. Rajendran
   Nationality: Indian
   Address: 1, Fifth Street,
   Lake Area,
   Nungambakkam,
   Madras-600 034
6. Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital: Bharathan Publications Private Limited, 84/1-C, Race Course Road, Guindy, Madras-600 032.

I hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

V. Murali
Publisher

1.3.1987

கவிதையில் சுயசரிதம்


புதிதாக உருவாகியுள்ளது வ. உ. சிதம்பரனார் மாவட்டம். அவர் சிறந்த தேச பக்தர் மட்டுமல்லர்; ஒரு சிறந்த தமிழறிஞரும் ஆவார். திருக்குறளின் சில பகுதிகளுக்கு உரை எழுதியிருக்கிறார். ஆங்கில மொழியில் 'ஆலன்' என்பவர் எழுதிய நூல்களைத் தமிழில் 'மனம் போல் வாழ்வு', 'வலிமைக்கு மார்க்கம்,' 'மெய்யறிவு' 'மெய்யறம்' என்று மொழி பெயர்த்துத் தந்திருக்கிறார். எல்லாவற்றுக்கும்



மேலாக, தமது சுய சரிதையைக் கவிதையிலே இயற்றித் தந்திருக்கிறார்! ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போல, இவர் வாழ்வின் இரு பக்கங்கள் தமிழ்த் தொண்டும், தேசத் தொண்டுமாகும்.

— ம. சீதாலக்ஷ்மி (10,230)
ஈரோடு — 1

விளையாட்டு வீரர்கள்



ஒவ்வொரு விளையாட்டிலும் ஓர் அணியிலுள்ள வீரர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதைக் கீழே காணலாம்:

விளையாட்டின் பெயர்	வீரரின் எண்ணிக்கை
கூடைப்பந்து	5
பேஸ் பால்	9
அசோஸியேஷன் கால் பந்து	11
கிரிக்கெட்	11
கைப்பந்து	6
ஹாக்கி	11
ரக்பி கால் பந்து	15
போலோ	4
நீர்ப் போலோ	7
பூப்பந்து	1,2,5
டென்னிஸ்	1,2

— ஆ. கணேஷ் (9532), மின்பாறை

ஆங்கிலேயர் வைத்த பெயர்



தஞ்சாவூர் — Tanjore
தூத்துக்குடி — Tuticorin
உதகமண்டலம் — Ooty
மதுரை — Madura
இராமநாதபுரம் — Ramnad
திருவனந்தபுரம் — Trivandrum
தரங்கம்பாடி — Tranquebar
கொள்ளிடம் — Coleroon

— வேத. வரதகணேஷ் (16,334),
செருவாமணி.

ஊருடன் பெயர்கள்



மாயூரம் வேதநாயகம் பிள்ளை, நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை, கரந்தைக் கவியரசு ரா. வேங்கடாசலம் பிள்ளை, பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம், மயிலை சிவமுத்து, அரியக்குடி இராமானுஜ ஐயங்கார், குன்றக்குடி வைத்தியநாதன், கொத்தமங்கலம் சுப்பு, சீர்காழி கோவிந்தராஜன்.

— செ. குமார் (9102),
மயிலாடுதுறை.

கிரிக்கெட் வீரர்கள்; சுவையான செய்திகள்

* பள்ளிச் சிறுவனாக இருந்தபோது காவஸ்கர் 1965 இல் லண்டன் பள்ளி மாணவர்களுக்கு எதிராக டெஸ்ட் ஆடத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சுனில் காவஸ்கர் முதல் டெஸ்டில் 116 ரன்களைக் குவித்தார். நான்கு டெஸ்ட்களில் கலந்து கொண்டு, ஐந்தாவது டெஸ்டின் போது பரீட்சை நெருங்கியதால் ஆடுவதற்கு மறுத்து விட்டார். உலக பாட்ஸ்மன்களில் தலை சிறந்து விளங்க 10,000 ரன்களை எட்டிப் பிடிக்கும் வேளையில், கல்கத்தா டெஸ்டில் ரசிகர்கள் காப்டனாக இருந்த போது தம்மை இழிவுபடுத்தியதால் கல்கத்தாவில் ஆடுவதற்கு மறுத்திருக்கிறார்.

* வெங்கட் பி. எஸ். உயர்நிலைப் பள்ளி மாணவராகக் கிரிக்கெட் ஆடத் தொடங்கி, உலக ஆப் ஸ்பின்னர் 'வரிசையில் ஒருவராக டெஸ்ட் அரங்கில் புகழ்பெற்றார். இன்று தமிழ் நாடு கிரிக்கெட் சங்கத்தின் காரியதரிசியாகப் பதினேழு நாட்களில் இந்தியா — பாகிஸ்தான் முதல் டெஸ்டைச் சிறப்பாக நடத்திப் புகழ்பெற்றிருக்கிறார். தமிழ்நாடு கிரிக்கெட் சங்கத்துக்குப் பதினேழு லட்சம் லாபம் என்பது தனிச் சிறப்பு!



* ஸ்ரீகாந்த் வித்யாமந்திர் பள்ளி மாணவனாகக் கிரிக்கெட் ஆடத் தொடங்கி 1983 இல் டெஸ்டில் பிரவேசித்தார். ஆஸ்திரேலியாவில் சிட்னியில் 116 ரன்களும் சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் 123 ரன்களும் எடுத்துப் புகழாரம் சூட்டிக் கொண்டார். "சேப்பாக்க மைதானத்தில் சதம் எடுப்பதுதான் எனது நீண்ட நாளைய ஆசை. அதைப் பூர்த்தி செய்ததில் எனக்கு அளவற்ற மகிழ்ச்சி."

ஸ்ரீகாந்தின் மனைவி வித்யா, "நீங்கள் இரு நூறு ரன்கள் எடுத்திருந்தால் எனக்கு ரொம்ப மகிழ்ச்சியாக இருந்திருக்கும்" என்றாள்.

"நாம் ரொம்பவும் பேராசைப்படக் கூடாது!" என்று ஒரு போடு போட்டார் ஸ்ரீகாந்த்.

* இந்திய காப்டன் கபில்தேவ் பாகிஸ்தான் பந்தயத்துக்குச் சென்றிருந்த போது ஒரு தங்கச் சங்கிலி வாங்கி அணிந்தார். அந்தத் தங்கச் சங்கிலியில் சிவ உருவமும் 'K' எழுத்தும் அவரது இனிய நண்பர் பொறித்துக் கொடுத்தார். 'சிவபெருமானே, தமது வெற்றிகளுக்கு உறுதுணை' என்பது அவரது நம்பிக்கை.

* பாகிஸ்தான் காப்டன் இம்ரான்

— குண்டுமணி

படம்: பாலாஜி



கான் 'லிந்தால்' சோப் தயாரிக்கும் காட்ரெஜ் நிறுவனத்தினர் அளித்த பனியனை அணிந்து கொண்டு காலையில் உடற்பயிற்சிகளைச் செய்த பிறகே மாட்ச் ஆடத் தொடங்கினர். அரை மணி நேரம் இந்திய, பாகிஸ்தான் ஆட்டக்காரர்கள் உடற்பயிற்சிகளை மைதானத்தில் செய்து கொண்டிருந்ததும் மைதானத்தைச் சுற்றி ஓடியதும் இளம் சிறுவர் சிறுமிகளுக்கு இனிய விருந்து.

* முதல் டெஸ்ட் பிரவேசத்தில் செஞ்சுரி போடுவது மிக அரிது. சென்னை டெஸ்டில் அறிமுகமான ஷோயப் முதல் செஞ்சுரி போட்டு, செஞ்சுரி கண்ட அவரது தந்தை ஹனீப்பைப் போலவே பெயர் எடுத்துள்ளார்.

* ஆட்டோகிராப் வேட்டையாளர்கள் டெஸ்ட் ஆட்டக்காரர்களின் கையெழுத்துக்காக அவர்களை முற்றுகையிட்டனர். சுனில் காவஸ்கர் முகம் சுளிக்காமல் அனைவருக்கும் போட்டுக் கொடுத்துக் கொண்டிருந்தார். ஒருவர் பணத்தில் கையெழுத்துப் போட்டுத்தரும்படி கேட்டபோது சுனில் மறுத்து விட்டார்!

கவிதை தோன்ற வேண்டும்

— மாயன்



நல்ல பொழுது விடிய வேண்டும்.
மெல்ல அரும்பு மலர வேண்டும்.

சிவந்த ரோஜா பூக்க வேண்டும்.
உவந்து வண்டு உண்ண வேண்டும்.

இனிய தென்றல் தவழ வேண்டும்.
கனிவுக் கீதம் பரவ வேண்டும்.

பசுவும் கன்றும் சேர வேண்டும்.
பாலால் சொம்பு நிறைய வேண்டும்.

அன்னை அமுது ஊட்ட வேண்டும்.
அழகு நிலாப் பார்க்க வேண்டும்.

காட்சி இன்பம் காண வேண்டும்.
கவிதை எனக்குத் தோன்ற வேண்டும்.

Printed and Published by V. Murali on behalf of Messrs Bharathan Publications Private Limited, at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600 032. Editor: K. Rajendran
Editorial Office: 28, Fifth Street, Lake Area, Nungambakkam, Madras-600 034 (Phone: 473389)
Administrative Office: Race Course Road, Guindy, Madras-600032 (Phones: 431543, 434157 Press: 434190)




அலெக்ஸாண்டர் கிரகாம் பெல்

தோற்றம்: 3•3•1847

மறைவு: 2•8•1922

கடிககத்துடித்திடும் பூனைகள் எத்தனை?



விடை: 25 பூனைகள்.



ஹார்லிக்ஸ்

பிஸ்கட்ஸ்

ஹார்லிக்ஸின் நலமிக்க கரகர மொறுமொறு பிஸ்கட்!

உங்கள் கடைக்காரரிடம்
இந்தக் கூப்பனைக் கொடுத்தால்,
80 அல்லது 160 கிராம் ஹார்லிக்ஸ் பிஸ்கட்
பாக்கெட் ஒன்று வாங்கும்போது, 50 பைசா
தள்ளுபடி கிடைக்கும்.

உங்கள் பெயர் ____________________ வயது ______

விலாசம் ____________________

____________________ பின் □□□□□□

○ தமிழ்நாட்டிலும் பாண்டிச்சேரியிலும் மட்டும் இந்தச் சலுகை 1987 ஜூன் 30-ம் தேதி வரை அமலில் இருக்கும்.